விலை : 20.00
பக்கங்கள் : இருபத்து நான்கு

Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
Valampurii

website : www.valampurii.lk
E-mail: valampurii@yahoo.com

சங்கு 16 வள்ளுவர் ஆண்டு 2046 வைகாசி 12 செவ்வாய்க்கிழமை (26.05.2015) தொலைபேசி 222 3378, தொலைநகல் 222 7829 ஒலி 158

கல்யாண மாலை
[சர்வதேச திருமண சேவை]
T.P: 021 720 1005

இல.144,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.
Email:Kalyanamalai.jaffna@gmail.com
பதிவுக் கட்டணம்
1000/= மட்டுமே

## மீண்டும் மரணதண்டனை அரசாங்கம் ஆலோசனை

(கொழும்பு)

நாட்டில் அதிகரித்து வரும் குற்றச் செயல்கள்காரணமாக மீண்டும் மரண தண்டனையை அமுல்படுத்துமாறு பொதுமக்கள் தரப்பிலிருந்து கோரிக்கைகள் விடுக்கப்பட்டு வருகின்றன.

இது தொடர்பில் தற்போது அரசாங்கம் கவனம் செலுத்தியுள்ளதாக நீதி அமைச்சர் விஜயதாச ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

புங்குடுதீவு மாணவி வித்தியாவின் படுகொலைக்கு எதிர்ப்பு தெரிவித்து, கொழும்பு சுதந்திர சதுக்கத்தில் அரசாங்கத்தினால் ஏற்பாடு செய்யப்பட்ட மெழுகுவர்த்தி ஏற்றி அஞ்சலி செலுத்தும் நிகழ்வு நேற்று முன்தினம் இடம்பெற்றது.

இதில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார். அங்கு தொடர்ந்து உரையாற்றிய அமைச்சர், மரண தண்டனையை மீண்டும் அமுல்படுத்துமாறு பொதுமக்கள் பாரியள 24 ஆம் பக்கம் பார்க்க....

## அமைதிவழிப் போராட்டத்தை நீதிமன்றம் தடை செய்யாது

### யாழ்.நீதவான் கணேசராஜா தெரிவிப்பு

(கரணவாய்)

ஜனநாயக ரீதியான போராட்டம் ஒன்றை நடத்துவதற்கு மக்களுக்கு உரிமை உள்ளது. அதனை தடை செய்வது அரசியலமைப்புக்கு முரணானது என பருத்தித்துறை நீதவான் ம.கணேசராஜா பொலிஸாருக்கு அறிவித்துள்ளார்.

இன்று திக்கம் பகுதி மக்கள் திக்கம் சந்தியில் போராட்டம் ஒன்றை நடத்தி ஊர்வலமாகச் சென்று பருத்தித்துறை நீதவானுக்கு மகஜர் கையளிப்பதாக திட்டமிட்டுள்ளனர்.

இதனைத் தடுக்கும் வகையில் கூட்டத்துக்கு தடை வழங்குமாறு பொலிஸார் நீதவானிடம் கோரிக்கை விடுத்தனர்.

இதனை ஏற்க மறுத்த நீதவான் ஜனநாயக ரீதியாக போராட்டம் ஒன்றை நடத்துவதற்கு மக்களுக்கு உரிமை உண்டு. இவ்வாறாக அந்தப் போராட்டங்களை தடை செய்வது அரசியல் அமைப்புக்கு முரணானது. 24 ஆம் பக்கம் பார்க்க....

## ஐ.தே.கவின் ஏழு பேர் கட்சி மாறுவர் ?

(கொழும்பு)

ஐக்கிய தேசியக் கட்சியின் ஏழு பேர் எதிர்க்கட்சியில் இணைந்து கொள்ள உள்ளதாக முன்னாள் அமைச்சர் டி.பி. ஏக்கநாயக்க தெரிவித்துள்ளார்.

ஐக்கிய தேசியக் கட்சியின் உறுப்பினர்களை எதிர்க்கட்சியில் இணைத்துக் கொள்வது தொடர்பில் ஏற்கெனவே 24 ஆம் பக்கம் பார்க்க....

## மேலும் 10 பேர் இராஜிநாமா செய்வர்?

(கொழும்பு)

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியைச் சேர்ந்த மேலும் 10 அமைச்சர்கள் தமது அமைச்சுப் பதவிகளை இராஜிநாமா செய்வர் எனக் கட்சியின் வட்டாரங்கள் தெரிவித்தன என கொழும்பு ஆங்கில நாளிதழ் ஒன்று செய்தி வெளியிட்டு உள்ளது.

அமைச்சரவை அந்தஸ்துள்ள சில அமைச்சர்கள், இராஜாங்க அமைச்சர்கள், 24 ஆம் பக்கம் பார்க்க....

## நாட்டில் சுதந்திரம் உண்டு – ரணில்

(கொழும்பு)

நாட்டின் பிரதமராகிய என்னையே நாடாளுமன்றில் கெட்ட வார்த்தையினால் திட்டும் அளவுக்கு நாட்டில் சுதந்திரமும், ஜனநாயகமும் நிலைநாட்டப்பட்டுள்ளதாக பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

புதிய அரசாங்கத்தின் கீழ் சமூகத்தில் எடுத்துக்காட்ட கூடிய மாற்றங்கள் 24 ஆம் பக்கம் பார்க்க....

# அரசைக் கவிழ்க்க புதிய சூழ்ச்சித் திட்டம்!

## தேர்தலுக்கு முன் ஏற்பாடு

(கொழும்பு)

**நாடாளுமன்ற தேர்தலுக்கு முன்னர் நம்பிக்கையில்லா பிரேரணையின் மூலம் தற்போதைய அரசாங்கத்தை தோல்வியடையச் செய்ய முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக தெரிய வருகிறது. எதிர்க்கட்சித் தலைவர் நிமால் சிறிபால டி சில்வா உட்பட கூட்டணித் தலைவர்கள் நாடாளுமன்றில் இடம்பெற்ற கட்சி தலைவர்கள் கூட்டத்தில் இது குறித்து இணக்கப்பாட்டிற்கு வந்துள்ளனர்.**

அரசை கவிழ்க்கும் யோசனையினை முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவிடம் அறிவிப்பதற்கான பொறுப்பை கட்சி செயலாளர் சுசில் பிரேம ஜயந்த ஏற்றுக்கொண்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

தற்போது பிரதமருக்கு எதிராக சமர்ப்பிக்கப்படவுள்ள நம்பிக்கையில்லா பிரேரணை ஊடாகவே அரசாங்கத்தினை கவிழ்ப்பதற்கு திட்டமிட்டிருப்பதாக தகவல் வெளியாகியுள்ளன.

இதன் பின்னர் பெரும்பான்மை அதிகாரத்தை பயன்படுத்தி கூட்டணி அரசாங்கம் ஒன்றை உருவாக்குவதற்காக சபாநாயகரிடம் வேண்டுகோள் ஒன்றினை முன்வைக்க தீர்மானித்துள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

எப்படியிருப்பினும் இது தொடர்பில் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவிற்கு அறிவிப்பதற்கான நடவடிக்கை 24 ஆம் பக்கம் பார்க்க....

## ஜனாதிபதி மைத்திரி இன்று யாழ்.விஜயம்?



(யாழ்ப்பாணம்)

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன திடீர் விஜயம் ஒன்றை மேற்கொண்டு இன்று யாழ்ப்பாணத்துக்கு விஜயம் செய்யவுள்ளதாக நம்பகர 24 ஆம் பக்கம் பார்க்க....

## யாழில் தொடரும் பதற்றம் வீதியில் இறங்க மக்கள் அச்சம்




(யாழ்ப்பாணம்)

புங்குடுதீவு மாணவியின் கொலையினைத் தொடர்ந்து இடம்பெற்ற வன்முறையின் பின்னர் யாழ். நகர் மற்றும் அதனை அண்டிய பகுதிகளில் தொடர்ந்தும் பொலிஸார் மற்றும் அதிரடிப்படையினர் குவிக்கப்பட்டுள்ளனர்.

புங்குடுதீவு மாணவி வன்புணர்வின் பின்னர் படுகொலை செய்யப்பட்டதனைக் கண்டித்து பல்வேறு 24 ஆம் பக்கம் பார்க்க....

## புங்குடுதீவு மாணவி படுகொலை அறிக்கை கோருகிறார் அமைச்சர்

(கொழும்பு)

புங்குடுதீவு மாணவி வித்தியா பாலியல் வன்கொடுமைக்கு உட்படுத்தப்பட்டு படுகொலை செய்யப்பட்ட சம்பவம் தொடர்பில், பொலிஸாரினால் எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் குறித்து அமைச்சு மட்ட அறிக்கை கோரப்பட்டுள்ளது.

பொதுமக்கள் பாதுகாப்பு மற்றும் அனர்த்த முகாமைத்துவ அமைச்சர் ஜோன் அமரதுங்க, பொலிஸ் மா அதிபரிடம் இந்த அறிக்கையை கோரியுள்ளார்.

சம்பவத்துடன் தொடர்புடைய சந்தேக நபர்களை பொலிஸார் கைது செய்திருந்த நிலையில், நீதிமன்ற வளாகத்தில் குழப்பம் விளைவித்த நபர்களை தடுக்காத காரணத்தினால் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் உள்ளிட்ட உயர் அதிகாரிகள் உடனடியாக இடமாற்றம் செய்யப்பட்டனர்.

சம்பவம் தொடர்பில் பொலிஸார் எவ்வாறு 24 ஆம் பக்கம் பார்க்க....

நடுவுநிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கல்முனையில் ஹர்த்தால் இயல்புநிலை பாதிப்பு

## வித்தியாவின் கொலையைக் கண்டித்து

(கல்முனை)

புங்குடுதீவு பாடசாலை மாணவி வித்தியாவின் படு கொலைக்கு கண்டனம் தெரிவித்து கிழக்கு மாகாண பாட சாலை மாணவர்கள் தொடர்ந்தும் போராட்டங்களில் ஈடு பட்டுள்ளனர். நேற்றுத் திங்கட்கிழமை அம்பாறை மாவ ட்டத்திலுள்ள கல்முனை மற்றும் கல்முனையை அண் டிய பிரதேசங்களில் ஹர்த்தால் அனுஷ்டிக்கப்பட்டது.



கிழக்கு மாகாணத்தில் வித்தியாவிற்கு நீதி கோரி நடைபெற்ற இந்த போராட்டங்களில் முஸ்லிம்களும் கலந்து கொண்டனர்.

அம்பாறை மாவட்டத்தில் கல்முனை பிர தேசத்திலுள்ள பாடசாலை மாணவர்கள் வகுப்புகளை புறக்கணித்து பாடசா லைகளுக்கு முன்பாக கூடி ஆர்ப்பாட்டங்களில் ஈடுபட்டனர். மாணவர்கள் பிரதேச செயலகம் வரை பேரணியாகச் சென்று, பிரதேச செயலாள ரை சந்தித்து, இது தொடர்பாக ஜனாதிபதி க்கான மனுவொன்றையும் கையளித்தனர்.

பிரதேச செயலகம் முன்பாக மாணவர்கள் கூடியிருந்த வேளை அங்கு வருகை தந்த பொலி ஸார் நீதிமன்ற தடையுத்தரவு பெறப்பட்டுள்ள தாக கூறி, தடுத்த போதிலும் மாணவர்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டதாக தகவல்கள் தெரி விக்கின்றன. மாணவர்கள் பிரதேச செயலா ளரை சந் தித்து மனுவொன்றை கையளித்த பின்னரே அங்கிருந்து அமைதியாக கலை ந்து சென்ற தாக கூறப்படுகின்றது. பொலிஸார் நீதிமன்ற தடையை கூறி பேரணியை தடுத்தி ருந்த போதிலும் மாணவர்கள் அதனையும் மீறி இந்த போராட்டத்தில் ஈடுபட்டிருந்தனர்.

இதேவேளை கல்முனை மற்றும் சாய்ந்த மருது பிரதேசங்களில் அனுஷ்டிக்கப்பட்ட ஹர்த்தாலால் அந்தப் பிரதேசங்களில் அரச அலுவலகங்கள், பாடசாலைகள் மற்றும் போக்குவரத்து உட்பட சகல துறைகளிலும் இய ல்பு நிலை பாதிக்கப்பட்டிருந்தது. (எ-11)

## மரண அறிவித்தல்

### தனபாலசிங்கம் இலங்கேஸ்வரன் (ஐயா)

மலர்வு 1968 - 11 - 21



உதிர்வு 2015 - 05 - 24

அல்வாய் வடக்கு, ஆலங்கட்டையை பிறப்பிடமாகவும், பாசல் (Basel) சுவிற் ஸலாந்தை வசிப்பிடமாகவும் கொண்ட தனபாலசிங்கம் இலங்கேஸ்வரன் 24.05.2015 அன்று பாசல் (Basel) சுவிற்ஸலாந்தில் அகால மரணமடைந்தார்.

அன்னார் தனபாலசிங்கம்-பரமேஸ்வரி தம்பதிகளின் அன்பு மகனும், தம்பிஐயா யோகாம்பிகை தம்பதிகளின் அன்பு மகளான தர்சினியின் அன்புக் கணவரும், த.தனேஸ்வரன் (அதிபர்-மன்/சித்தி விநாயகர் இந்து தேசிய பாடசாலை), சி.சலஜா (சுவிஸ்), ம.சபிதா, ந.சயதா (ஆசிரியர்-யா/பருத்தித்துறை சித்திவிநாயகர் வித்தியாலயம்), த.ரமேஸ்வரன் (யா/வல்வை மகளிர் ம.வி), த.சர்வேஸ்வரன் (மாவட்ட செயலகம்-கிளிநொச்சி) ஆகியோரின் அன்புச் சகோதரரும், த.புஸ் பலதா (சேவைக்கால ஆசிரியர் ஆலோசகர்-மன்னார்), செ.சிவச்செல்வம் (சுவிஸ்), சி.மகேந்திரம் (பஃறின்), மா.நவநீதமணி (அதிபர் -யா/தேவரையாளி இ.க), ர.தேவகி (ஆசிரியர்-யா/மருதங்கேணி இ.த.க பா), த.ராஜ்மோகன் (இத்தாலி), த.சபேசன், த.துஸ்யந்தன் ஆகியோரின் அன்பு மைத்துனரும், கோ.தர்மகுலசிங்கம் (கனடா), நற்குணம், கமலாதேவி, காலஞ்சென்றவர்களான கோ.சிவகவி, கோ. சிவபாதம் ஆகியோரின் அன்பு மருமகனும், பா.அகிலேஸ்வரி, காலஞ்சென்ற வர்களான க.மல்லிகாதேவி, த.லட்சுமிதேவி, ஸ்ரீ.திரௌபதி ஆகியோரின் பெறாமகனுமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் பற்றிய தகவல் பின்னர் அறிவிக்கப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தொடர்பு:-0212264196
0775835396
0776152326

தகவல்:-க.தனபாலசிங்கம்
குடும்பத்தினர்

(சி-1078)

## சிறப்பு இசையரங்கம்

அண்ணாமலைப் பல்கலைக்கழக இசைத்துறை உதவிப் பேராசிரியர்

### சிதம்பரம்.G.சுந்தர் தீட்ஷிதர்

வயலின்
அம்பலவாணர் ஜெயராமன்
கெஞ்சிரா-ந.சிவசுந்தர சர்மா

மிருதங்கம்
நல்லை.க.கண்ணதாஸன்
முகர்சிங்-ந.சதீஷ்குமார்

காலம்:-27.05.2015 புதன்கிழமை
நேரம்:-மாலை 4.30 மணி
இடம்:-இலங்கை வேந்தன் கலையரங்கம்

இசையரங்கத்தோடு நூல் மற்றும் இறுவெட்டு அறிமுகவிழாவும்

தலைமை-கவிஞர் கு.வீரா

பிரதம விருந்தினர் சிரேஷ்ட பேராசிரியர் கலாநிதி என்.சண்முகலிங்கன் (முன்னாள் துணைவேந்தர், தலைவர் சமூகவியல்துறை-யாழ்.பல்கலைக்கழகம்)

நூல் நயப்புரை சங்கீத பூஷணம்-திரு.[illegible]

இசை ஆர்வலர்களை அன்புடன் அழைக்கின்றோம்-யாழ்.ஏழிசை மிருதங்க நர்த்தனாலயத்தினர்

## பொலிஸாருக்கு விளக்கமறியல்

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பின் ஊறணியில் 15 வயது சிறுமியை பாலியல் துஷ்பிரயோகம் செய்தார் என்ற சந்தேகத்தில் 45 வயதான பொலிஸ் கான்ஸ்டபிள் ஒருவரை விளக்க மறியலில் வைக்கு மாறு நீதிவான் நீதிமன்ற நீதிவான் ஏ.எம்.றியால் உத்தரவிட்டுள்ளார்.

காத்தான்குடிப் பொலிஸ் நிலைய த்தில் பணியாற்றும் கான்ஸ்டபிளான சந்தேகநபர் சிறுமி ஒருவரை துஷ்பிர யோகத்துக்கு உட்ப டுத்தினார் என்ற குற்றச்சாட்டில் உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் அலுவலகத்துக்கு விசாரணைக்கு அழைக்கப்பட்டார். அங்கிருந்து தப்பி யோடிய சந்தேக நபர் கல்லடிப் பாலத்தில் இருந்து குதித்து தற் கொலைக்கு முயன் றார்.

எனினும் அவ ரைப் பின்தொட ர்ந்த சக பொலி ஸார் காப்பாற்றி வைத்தியசாலையில் சேர்ப்பித்தனர். பின்னர் அவரை மட்டக்களப்பு நீதி வான் நீதிமன்றில் முற்படுத்தினர். வழக்கை விசாரித்த நீதிவான் அவரை எதிர்வரும் ஜூன் 5 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்க உத்தர விட்டார். குறித்த சந்தேகநபர் மட்டக்களப்பு சிரே ஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் பணிமனையில் கடமையாற்றும் பெண் பொலிஸ் உத்தியோகத்தர் ஒருவரின் மகளையே துஷ்பிர யோக த்துக்கு உட்படுத்தி னார் எனக் கூறப்ப டுகின்றது. (எ-11)

## மில் வேலைக்கு ஆள் தேவை

மா, தூள் அரைக்கும் ஆலைக்கு அனுபவம் உள்ளவர் அல்லது பழக விரும்புபவர்கள் தொடர்பு கொள்ளவும்.

தொ.பே:-0779361356

(சி-1076)

## அறிவித்தல்

### வற்றாப்பளை கண்ணகி அம்மன் ஆலய வருடாந்த பொங்கல் உற்சவம்-2015

#### வியாபார நிலையங்களுக்கான இடம் வழங்கல்

01.06.2015 திங்கட்கிழமை இடம்பெறவுள்ள வற்றாப் பளை கண்ணகி அம்மன் ஆலய வருடாந்த பொங்கல் உற்சவத்தின் போது வியாபார நிலையங்கள் அமைக்க விருக்கும் வியாபாரிகளுக்கு வியாபார நிலையங்களுக் கான இடங்கள் 28.05.2015 வியாழக்கிழமை தொடக் கம் 31.05.2015 ஞாயிற்றுக்கிழமை வரை தினமும் முற் பகல் 10.00 மணி தொடக்கம் மாலை 5.00 மணிவரை மட்டும் வழங்கப்படும்.

01.06.2015 திங்கட்கிழமை வியாபார நிலையங்களுக் கான இடங்கள் வழங்கப்படமாட்டாது. ஆலய பரிபாலன சபையின் அனுமதி பெற்ற வியாபாரிகள் மட்டும் வியாபா ரம் செய்ய அனுமதிக்கப்படுவர் என்பதை கவனத்தில் கொள்ளவும்.

மற்றும் உணவகம், ஐஸ்கிறீம் வியாபாரிகள் அந்த ந்த உள்ளூராட்சி மன்றங்களின் 2015ஆம் ஆண்டுக் கான வியாபார அனுமதிச் சான்றிதழுடன் சமுகமளிக்கு மாறு அறிவுறுத்தப்படுகிறீர்கள்.

தலைவர்
வற்றாப்பளை கண்ணகி அம்மன்
ஆலய பரிபாலன சபை, வற்றாப்பளை.

(சி-1077)

## 5ஆம் ஆண்டு நினைவு நாள்

### திருமதி தனபாலசிங்கம் பரமேஸ்வரி

திதி:திரயோதசி

மலர்வு 1940 - 01 - 10



உதிர்வு 2010 - 05 - 26

(சி-1074)

அம்மா...

ஆண்டுகள் ஐந்து ஓடிப் போனதென்ன-உங்கள்
பாச நினைவுகள் மட்டும் தேடி நிற்பதென்ன...
வாடிய மனதினில் தேடலில் உன் நிழலை காண்கிறோம்
ஆண்டவன் உனையே "அரன் அடிசேர்ந்தாய்" என்றான்-உன்
ஆத்ம சாந்திக்காய் என்றும் பிரார்த்திக்கின்றோம்... அம்மா...
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

கணவன்-பிள்ளைகள்
அல்வாய் வடக்கு, அல்வாய்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# நாடாளுமன்று கலைவதற்குமுன் பிரதமர் ரணில் அகற்றப்படுவார்

## தினேஸ் குணவர்த்தன தெரிவிப்பு

(கொழும்பு)



**நாடாளுமன்றம் கலைக்கப்படுவதற்கு முன்னர், ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் பிரதமர் ஒருவர் நியமிக்கப்படுவார் என்று மக்கள் ஐக்கிய முன்னணியின் தலை வரும் நாடாளுமன்ற உறுப்பினருமான தினேஸ் குணவர்தன தெரிவித்துள்ளார்.**

நாடாளுமன்றத்தில் பெரும்பாலானவர்கள் எதிர்க்கட்சியிலேயே இருக்கின்றனர்.

அதனால், பிரதமர் ரணில் விக்கிரமசிங்க வுக்கு எதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணையொன்றை விரைவில் சபாநாயகரிடம் சமர்ப்பிக்கவுள்ள தாக, தெரிவித்த குணவர்தன, அந்த பிரேரணையை தூக்கி குப்பையில் போடாமல் அதனை விவாதத்துக்கு எடுப்பார்கள் என எதிர்ப்பார்ப்பதாகவும் தெரிவித்தார்.

கொழும்பில் நேற்று இடம்பெற்ற செய்தியாளர் மாநாட்டின் போது மேற்கண்டவாறு கூறிய அவர், பொதுத் தேர்தலுக்கு முன்னர் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு அரசை உருவாக்க, கட்சியின் தலைவரும் ஜனாதிபதியுமான மைத்திரிபால சிறிசேன இணங்குவாராயின், பிரதமராக நியமிக்கப்படவுள்ளவரின் பெயரை வெளியிடத் தயார் என்றும் தெரிவித்தார். (இ-5)

## மைத்திரி அரசில் கருணையில்லை

### கம்மன்பில கவலை

மைத்திரி அரசாங்கத்தில் கருணை கிடையாது என பிவித்துரு ஹெல உறுமய கட்சியின் தலைவர் உதய கம்மன்பில தெரிவித்துள்ளார்.

கல்பனிஸில் கல் இல்லை, முதலை பனிஸில் முதலையில்லை, அதேபோன்று மைத்திரி அரசாங்கத்தில் மைத்திரி கிடையாது.

மைத்திரி அரசாங்கம், ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் உறுப்பினர்களை கைது செய்து வருகின்றது.

கொள்கைப் பிரகடனம் ஒன்றின் மூலம் பிரதமர் ஒருவரை நியமிக்க முடியாது.

கசப்பு என்றாலும் உண்மையை சொல்ல வேண்டும். பிணைப்பத்திர விநியோகம் தொடர்பில் தற்போதைய அரசாங்கத்தின் மோசடிகளை மறைக்க, கடந்த அரசாங்கம் மீது குற்றம் சுமத்தப்படுகின்றது.

மத்திய வங்கியில் 2 ஆயிரத்து 700 பில்லியன் ரூபா பண மோசடி செய்யப்பட்டிருந்தால் அதனை பிரதமர் ரணில் விக்கிரமசிங்க நிரூபித்து காட்ட வேண்டுமென அவர் தெரிவித்துள்ளார்.

அபயராமயவில் நேற்று நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பில் கருத்து வெளியிட்ட போது அவர் இதனைத் தெரிவித்தார். (இ-5)

## ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியில் எனக்குத்தான் உரிமை அதிகம்

### சந்திரிகா தெரிவிப்பு

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியில் ஏனையவர்களை விட அதிக உரிமை தனக்கே உள்ளதாக முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க தெரிவித்துள்ளார்.



கம்பஹா, யக்கல பிரதேசத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

கடந்த ஜனாதிபதி தேர்தலின் போது தமது கட்சியின் ஒரு பிரிவை மாத்திரமே வாக்காளர்கள் நிராகரித்ததாக முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க சுட்டிக்காட்டியுள்ளார்.

இதேவேளை, முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவையும், ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவையும் பதவியில் அமர்த்துவதற்கு முழு மூச்சுடன் செயற்பட்டது சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க என்பது குறிப்பிடத்தக்கது. (இ-5)

## மலேசியாவில் போதைப்பொருள் விற்ற இலங்கையர்கள் உள்ளிட்ட எண்மர் கைதாகினர்

(கொழும்பு)

போதைப் பொருள் விற்பனை குற்றச்சாட்டில் இரண்டு இலங்கையர்கள் உள்ளிட்ட எண்மர் மலேசியாவில் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இவர்களது போதைப் பொருள் மருந்தகமும் பொலிஸாரால் இழுத்து மூடப்பட்டுள்ளது.

புக்கிட் அமான் போதைப் பொருள் தடுப்பு பிரிவு மேற்கொண்ட சுற்றிவளைப்பின் போது 10 மில்லியன் பெறுமதியான போதைப் பொருள் மீட்கப்பட்டுள்ளது.

கைது செய்யப்பட்ட எண்மரில் ஐவர் மலேசியர்கள் என்றும் இருவர் இலங்கையர்கள் என்றும் ஒருவர் இந்தியர் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ-5)

## சர்வதேச இராஜதந்திரிகளிடம் பிரச்சினை குறித்து எடுத்துரைப்பு

### ஜீ.எல்.பீரிஸ் விளக்கம்

(கொழும்பு)



ஒரு பில்லியன் ரூபா பெறுமதி யான மத்திய வங்கி முறி கொடு க்கல்- வாங்கல் தொடர்வில் ஏற்பட் டுள்ள பிரச்சினை குறித்து சர்வதேச இராஜதந்திரிகளிடம் தெளிவுபடுத்த வுள்ளதாக முன்னாள் அமைச்சர் ஜீ.எல்.பீரிஸ் தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இதன்படி சர்வதேச நாணய நிதி யம் மற்றும் இலங்கைக்கான சர்வ தேச தூதுவர் காரியாலயங்களுக்கு தெளிவுபடுத்தவுள்ளதாக அவர் தெரிவித்தார்.

மத்திய வங்கி முறி தொடர்பாக ஏற்பட்டுள்ள பிரச்சினை பற்றி தம்மிடமுள்ள ஆவணங்களின் பிரதி களை மத்திய வங்கி கட்டடத்தில் அமைந்துள்ள சர்வதேச நாணய நிதியத்தின் காரியாலயத்தில் ஒப்ப டைக்கவுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (இ-5)

## இராசி பலன்

26.05.2015
(வைகாசி 12, செவ்வாய்க்கிழமை)
சூரிய உதயம் 5.53 மணிக்கு
அட்டமி பிற்பகல் 1.26 மணிவரை
மகம் காலை 6.49 மணிவரை
இராகுகாலம் 2.52-4.22 மணிவரை
சுபநேரம் 10.22-11.52 மணிவரை
அட்டமி- நவமி

வளவன்

**மேடம்:** தொட்ட காரியங்கள் வெற்றி பெறும் நாள், எதிர்பார்த்த தொகைகள் வந்து சேரலாம், பிள்ளைகள் குடும்பப் பொறுப் புணர்ந்து நடந்து கொள்வர்.

**இடபம்:** தொலைபேசி வழியில் சுபதகவல்கள் வந்து சேரலாம், பணி புரியும் இடத்தில் பெயரும் புகழும் கூடும், தனவரவில் இருந்த தடைகள் அகலும், பயணங்களால் பலனுண்டு.

**மிதுனம்:** பொதுநல ஈடுபாட்டால் புகழ் பெறுவீர்கள், சகோதர ஒத்துழைப்பால் பாகப் பிரிவினைகள் சுமுகமாக அமையும், பொல் லாதவர்கள் உங்களைவிட்டு விலகுவர்.

**கடகம்:** இல்லம்தேடி இனிய தகவல்கள் வந்து சேரலாம், வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும், குடும்பத்தில் கலகலப்பான சூழ்நிலை உருவாகும், தொழிலில் மேன்மையுண்டு.

**சிம்மம்:** அடுத்தவர் நலனில் அதிக அக்கறை காட்டுவீர்கள், திடீர் பயணங்கள் உருவாகலாம், உங்களின் கருத்துக்களை பலரும் ஏற்று நடப்பர், தெய்வீக சிந்தனை மேலோங்கும் நாள்.

**கன்னி:** அலைச்சல்கள் ஏற்பட்டாலும் ஆதாயமும் பெறுவீர்கள், அனைவரையும் அனுசரித்துச் செல்வதன்மூலம் மகிழ்ச்சி ஏற்படும், பித்த சம்பந்தமான ரோகங்கள் ஏற்படலாம்.

**துலாம்:** இயல்பான வாழ்க்கையில் இன்பங்கள் கூடும் நாள், பயணங்கள் கைகூடும் வாய்ப்புண்டு, வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும், புதிய பொருட் சேர்க்கையுண்டு.

**விருச்சிகம்:** செய்தொழில் மேன்மையுண்டு, விருந்தினர் வருகையுண்டு, இனிய சம்பவங்கள் இடம் பெறலாம், தொலைபேசித் தகவல்கள் மகிழ்ச்சி தரும்.

**தனுசு:** வீண்பழிகள் அகல விரைந்து முடி வெடுப்பீர்கள், தொழில் ரீதியாக முக்கிய நபர்களைச் சந்திக்கும் வாய்ப்புண்டு, பயணங்களால் பலனுண்டு, மருத்துவச் செலவுகள் குறைந்து மனநிம்மதி கிடைக்கும்.

**மகரம்:** வழிபாட்டால் திருப்தி காண வேண்டிய நாள், உடல் ரீதியான உபா தைகள் ஏற்பட்டு உற்சாகம் குறையும், எதையும் ஒரு முறைக்கு பலமுறை யோசித்து செய்வது நல்லது.

**கும்பம்:** குடும்பத்தில் சுப நிகழ்வுகள் நடைபெறுவதற்கான வாய்ப்புண்டு, கல்யாணக் கனவுகள் நனவாகலாம், புதிய தொழில் வாய்ப்புகள் தேடி வரலாம், கௌரவமான சம்பவங்கள் இடம்பெறலாம்.

**மீனம்:** நிர்வாகத் திறமைகள் வெளிப் படும் நாள், அதிகாரிகள் அனு கூலமாக நடந்து கொள்வர், பாக் கிகளை நயமாகப் பேசி வசூ லிப்பீர்கள், ஆரோக்கியம் சீராகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆத்ம ஞானத்தைத் தேடி

**ஆன்மீகம் 206**

## பொறாமையிலிருந்து விடுதலை!



...அனைவரும் அவர் இன்னும் சிறந்த விஞ்ஞானியாக அல்லது அது போல ஏதாவதாக பிறக்க விரும்புகிறேன் என்று சொல்வாரென எதிர்பார்த்தனர். ஐன்ஸ்டீன் பதிலளித்தார், நான் மீண்டும் பிறப்பதாயிருந்தால் ஒரு குழாய் ரிப்பேர் செய்பவராகப் பிறக்க வேண்டும் என்றே விரும்புகிறேன்.

அவர் சாதிக்க வேண்டியதையெல்லாம் சாதித்துவிட்டதாகவும், ஆனால் எதற்காக இதையெல்லாம் சாதித்தாரோ அதை சாதிக்கவில்லையென்றும் உணர்ந்தார். அவர் உலகிற்கு மகத்தான உண்மைகளை அளித்தார். ஆனால் அவரது முழு வாழ்க்கையுமே ஒரு பொய்யாகிவிட்டதாக உணர்ந்தார். அவரது கடைசி நாட்களில் அவரது வாழ்வு முழுவதும் வெளியுலக நிகழ்ச்சிகளில் சிக்கிக்கொண்டு விட்டதாகவும் பிரபஞ்ச இருப்புத்தன்மையுடனான ஒரு ஆழமான தொடர்பைத் தவறவிட்டு விட்டதாகவும் உணர்ந்தார்.

அதனால்தான் மீண்டும் ஒரு விஞ்ஞானியாக விரும்பாமல் குழாய் ரிப்பேர்க்காராகப் பிறக்க விரும்புவதாகக் கூறுகிறார்.

நீங்கள் வெளியுலக செயற்பாட்டின் உச்சத்தில் சிக்கிக் கொண்டுவிட்டாலும் ஒரு இயந்திரமாகி விடாதீர்கள். இது ஒரு ஆன்மீகவாதிக்குச் சுலபமான வேலை; உலகாயதவாதிக்குக் கடினமான வேலை.

பாருங்கள், இந்த ஒப்பிட்டு ஓடிக்கொண்டிருக்கும் செயன்முறையில் நீங்கள் உண்மையிலேயே ஒரு இயந்திரமாகி விடுகிறீர்கள்.

உங்களுடைய வெகுவான தினசரி செயற்பாடுகள் விழிப்பற்றதாகி விடுகின்றன. நீங்கள் ஒரு காரை ஓட்டிக்கொண்டிருக்கிறீர்கள் என்ற விழிப்புகூட இல்லாமல் உங்களால் ஒரு காரை ஓட்ட முடியும். நீங்களும் காரைப் போல ஒரு வெறும் இயந்திரமாகி விட்டீர்கள்.

காலையில் பல் துலக்குவதிலிருந்து படுக்கைக்குச் செல்லும் வரை உங்களைப் பற்றிப் பரிபூரணமாக விழிப்புணர்வே இல்லாமல் ஒரு நிகழ்ச்சி நிரலிடப்பட்ட இயந்திர மனிதனைப் போல வேலை செய்கிறீர்கள்.

நீங்கள் செய்வது எல்லாவற்றையும் திறமையாகவே செய்கிறீர்கள் என்பதில் சந்தேகமில்லை.

ஆனால் உங்கள் மனிதத் தன்மையை இழந்துவிட்டீர்கள்! நீங்கள் இந்த பூமியில் பிறந்த நோக்கத்தைவிட்டு வெகு தூரம் தள்ளிச் சென்று விட்டீர்கள். நீங்கள் உங்கள் இருப்புத் தன்மையிலிருந்து வெகுவாகத் துண்டிக்கப்பட்டு விட்டீர்கள்!

நீங்கள் தொடர்ந்து விழிப்புணர்வுடன் இருக்கும் பொழுது விடயங்களைத் திறமையாக மட்டுமின்றி ஒரு நிறைவான உணர்வுடன் முழுமையாகவும் செய்வீர்கள். ஏனெனில் பிண்டமான நீங்கள் அண்டமான பிரபஞ்ச இருப்புத் தன்மையுடன் இசைந்திருப்பீர்கள்; உங்கள் வேர்கள் பூமியில் இருக்க நீங்கள் வானில் பறந்து கொண்டிருப்பீர்கள். *(தொடரும்)*

**பரமஹம்ஸ சுவாமி**




### 18 வயதில் அழகால் வசீகரிக்கப்போகும் பிரித்தானிய குட்டி இளவரசி

பிரித்தானிய குட்டி இளவரசியான சார்லோட் எலிசபெத் டயானா, 18 வயது நிரம்பியவுடன் எவ்வாறு தோற்றம் அளிப்பார் என்பதை கணனி நிபுணர்கள் அபாரமாக வரைந்து சாதனை படைத்துள்ளனர்.

அமெரிக்காவை சேர்ந்த தடவியல் துறை கணனி நிபுணரான Jovey Mae Hayes என்பவர் அதிநவீன தொழில்நுட்பத்தை பயன்படுத்தி பிறந்து இரண்டு வாரங்களே ஆன சார்லோட்டின் 18 வயது படத்தை தத்ரூபமாக வரைந்துள்ளார்.

இது குறித்து அவர் கூறியபோது, குட்டி இளவரசிக்கு அவருடைய வம்சத்தின் மரபணு உள்வாங்கும் திறன் அதிக அளவில் உள்ளதால், அவருக்கு 18 வயது பூர்த்தியடையும்போது உடல் பருமன் ஆகாமல் உயரமாக மிகவும் அழகான தோற்றத்துடன் இருப்பார்.

குட்டி இளவரசியின் தாயாரான கேட் மிடில்டனின் உதடுகள் போல், இவருடைய கீழ் உதடும் முழுமையாக வெளிப்புறத்தில் தெரியும் வகையில் இருக்கும் என்பதால், அவர் தனது தாயாரின் சிரிப்பை அப்படியே பெற்றிருப்பார்.





சிரிக்கும்போது தாயாரின் கன்னங்களில் சிறு குழி விழுவதுபோல், சார்லோட்டின் கன்னங்களிலும் அதேபோல் குழி விழுந்து அவரது முகத்திற்கு மேலும் அழகை கூட்டும் வகையில் இருக்கும்.

ஒட்டு மொத்தமாக, சார்லோட் வளர்ச்சி அடையும்போது, கன்னம், தாடை, உதடுகள், மூக்கு, கண் இமைகள் உள்ளிட்ட முகத்தின் வடிவம் அவரது தாயாரை போல பிரதிபலிக்கும் வகையில் இருக்கும் என்பதில் சந்தேகம் இல்லை என Jovey Mae Hayes தெரிவித்துள்ளார்.

இது தவிர, தாயாரின் சாயலை பெற்றிருப்பதுடன் சார்லோட் வளர வளர அவரது பாட்டியான இளவரசி டயானாவின் முகத்தோற்றமும் அவருக்கு நிச்சயம் அமையும்.

18 வயதிற்கு பிறகு குட்டி இளவரசி எப்படி இருப்பார் என்பதை உறுதியாக கணிக்க முடியாவிட்டாலும், பாட்டி டயானா போன்று உயரமாகவும், அளவான உடற்கட்டுடன் மிகவும் அழகுடன் வளர்வார்.

பிரித்தானிய அரச குடும்பத்தினருக்குள்ள சிவந்த நிறமும் இளம் இளவரசி சார்லோட்டிற்கு இருக்கும். தாயாரை போல் இவரது முடியும் மென்மையாகவும் கருத்த நிறத்தில் வளரும் என்பதால், குட்டி இளவரசியின் இளம் வயது அழகிய தோற்றம் அனைவரையும் கவரும் என்பதில் சந்தேகம் இல்லை என Jovey Mae Hayes தெரிவித்துள்ளார்.




### பச்சைப் பட்டாணி ரவா பாத்

**தே.பொருட்கள்:**

ரவை - 1 கப் (வறுத்தது),
தக்காளி - 3,
பச்சை பட்டாணி - 1/4 கப்,
மஞ்சள்தூள் - 1/4 டீஸ்பூன்,
சோம்பு - 1/4 டீஸ்பூன்,
உப்பு - தே.அளவு.

அரைப்பதற்கு:
தேங்காய்த் துருவல் - சிறிது,
இஞ்சி - ஒரு துண்டு,
பச்சை மிளகாய் - 2,
உப்பு - ஒரு சிட்டிகை.

தாளிப்பதற்கு:
நெய் - 1 டேபிள் ஸ்பூன்,
எண்ணெய் - 1 டேபிள் ஸ்பூன்,
தேவைக்கேற்ப கறிவேப்பிலை.



**செய்முறை**

ரவையை வறுத்துக் கொள்ளவும். தக்காளியை பொடியாக நறுக்க வேண்டும். அரைக்க வேண்டிய அனைத்தையும் அரைத்துக் கொள்ளவும். எண்ணெயை காயவைத்து, சோம்பு போட்டு தாளித்து அரைத்து வைத்துள்ளதுடன் பட்டாணி சேர்த்து 2 நிமிடம் வதக்கவும்.

இத்துடன் போதுமான அளவு தண்ணீர் சேர்த்துக் கொதிக்க விட்டு பிறகு ரவையை சேர்த்துக் கிளறவும். வெந்ததும் நெய்யை ஊற்றி பரிமாறவும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் இலங்கை
# இராமநாதன் நுண்கலைக்கழகம்
# பல்கலைக்கழக அனுமதி- 2014/2015

உளச்சார்புப் பரீட்சை (Aptitude Test)

நுண்கலைமாணி - இசை, நடனம், சித்திரமும் வடிவமைப்பும்

மேற்படி நான்கு வருட பட்டப் படிப்புக்கற்கை நெறிகளுக்கு அனுமதி பெற விரும்பும் தகுதியான விண்ணப்பதாரிகளிடமிருந்து 12.06.2015 ஆம் திகதி வரை விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும்.

**அனுமதிக்கான பொது நிபந்தனைகள்**

**அனுமதிக்கான தகைமைகள்**

சங்கீதம், நடனம், சித்திரமும் வடிவமைப்பும் கற்கை நெறிகளில் யாதேனுமொன்றைத் தெரிவு செய்வதற்கு விரும்பும் விண்ணப்பதாரிகள் 2014 ஆம் ஆண்டு நடைபெற்ற க.பொ.த. (உ.த) பரீட்சையில் சித்தியடைந்து இருப்பதுடன் தெரிவு செய்ய விரும்பும் பட்ட பாடநெறிக்குரிய பாடத்தில் அதாவது சங்கீதம் - கர்நாடகம் அல்லது நடனம் - பரதம் அல்லது சித்திரக்கலையில் ஆகக் குறைந்தது திறமைச்சித்தியும் (C), மற்றைய இரண்டு பாடங்களிலும் ஆகக் குறைந்தது சாதரணதரச் சித்தியும் (S) பெற்றிருத்தல் வேண்டும்.

**தகுதிகாண் பரீட்சை**

மேற்குறித்த கற்கைநெறி அனுமதிக்கான விண்ணப்பதாரிகள் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தால் நடத்தப்படும் ஆற்றுகைப் பரீட்சை, நேர்முகப் பரீட்சை உள்ளடங்கிய தகுதி காண்பரீட்சைக்கு (Aptitude Test) யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் தோற்றுதல் வேண்டும்.

**விண்ணப்பங்களை சமர்ப்பித்தல்**

விண்ணப்பதாரிகள் கீழே கொடுக்கப்பட்டுள்ள மாதிரி விண்ணப்பப்படிவத்தை A4 தாளில் தயாரித்தோ அல்லது யாழ்ப்பாணப் பல்கலைக்கழக அனுமதிகள் கிளையில் பெற்றோ அல்லது www.jfn.ac.lk என்ற யாழ்ப்பாணப் பல்கலைக்கழக இணையத்தளத்தில் இருந்து பிரதி செய்தோ தகுதிகாண் பரீட்சைக்கு விண்ணப்பிக்கும்படி கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

மேற்படி தகுதிகாண் பரீட்சைக்கான விண்ணப்பத்துடன் ரூபா. 150 ஐ ஏதாவது ஒரு மக்கள் வங்கிக் கிளையில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மக்கள் வங்கிக் கிளைக் கணக்கு இல. 162100160000880 இல் செலுத்திப் பெற்ற பற்றுச்சீட்டுடன் பாடசாலை அதிபர் அல்லது சமாதான நீதவானால் உறுதிப்படுத்தப்பட்ட க.பொ.த (உ.த) பெறுபேற்றுப் பத்திரத்தினது போட்டோப் பிரதியும் அனுப்பப்படல் வேண்டும். பரீட்சைப் பெறுபேற்றில் அல்லது பெயரில் மாற்றங்கள் ஏதும் இருப்பின் அதற்குரிய சத்தியக் கடதாசி சமர்ப்பிக்கப்பட்டு உறுதிசெய்யப்பட வேண்டும். விண்ணப்பதாரிகள் சுய விலாசம் இடப்பட்ட முத்திரை ஒட்டப்பட்ட 23X10 ச.மீ. அளவுள்ள கடித உறையை இணைத்து அனுப்புதல் வேண்டும்.

பிரவேச அனுமதித் தகைமையைப் பூர்த்தி செய்துள்ள விண்ணப்பதாரிகளுக்கு ஆற்றுகை/நேர்முகப் பரீட்சைக்குரிய அனுமதி அட்டை அனுப்பி வைக்கப்படும்.

பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்கள் யாவும் 12.06.2015 ஆம் திகதிக்கு முன்னதாக உதவிப்பதிவாளர் ,அனுமதிகள் கிளை, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், யாழ்ப்பாணம் எனும் முகவரிக்கு கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் விண்ணப்பிக்கும் கற்கை நெறியைக் குறிப்பிட்டு பதிவுத்தபால் மூலம் அல்லது நேரில் சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.

அனுமதிக்குரிய ஆகக்குறைந்த தகைமையை கொண்டிராததும், பணம் செலுத்திய பற்றுச்சீட்டு சமர்ப்பிக்கப்படாததும், பெறுபேற்று பத்திரங்களின் உறுதி செய்யப்பட்ட போட்டோ பிரதிகள் இணைக்கப்படாததும், விண்ணப்ப முடிவுத்திகதிக்குள் கிடைக்கப்பெறாததுமான விண்ணப்பங்கள் யாவும் நிராகரிக்கப்படும். மேலதிக விபரங்களுக்கு தொடர்புகொள்ள வேண்டிய தொலைபேசி எண் 021 222 6714.

**பதிவாளர்**
**யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்** 21.05.2015

---

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் இலங்கை
இராமநாதன் நுண்கலைக்கழகம்
பல்கலைக்கழக அனுமதி – 2014/2015

நுண்கலைமாணி - இசை, நடனம், சித்திரமும் வடிவமைப்பும்

தகுதிகாண் பரீட்சைக்கான விண்ணப்பப்படிவம் (Aptitude Test)

விண்ணப்பதாரியின் முழுப் பெயர்:-
(தமிழிலும் ஆங்கிலத்திலும்)

முதல் எழுத்துக் குறிக்கும் பெயர்:-

தேசிய அடையாள அட்டையிலக்கம்:-

நிரந்தர முகவரி (ஆங்கிலத்தில்):-

தொலைபேசி இலக்கம்:- மின்னஞ்சல் முகவரி:-

2. க.பொ.த (உ.த)பரீட்சைப் பெறுபேறு 2014:-

சுட்டிலக்கம்: Z புள்ளி: பொதுச்சாதாரண பரீட்சைப்புள்ளி:

| பாடம் | தரம் | மொழி மூலம் | மாவட்டம் |
|---|---|---|---|
| 1. | | | |
| 2. | | | |
| 3. | | | |

3. பெற்றோர்/பாதுகாவலர் பெயர்:

முகவரி: (ஆங்கிலத்தில்):-

4. விண்ணப்பிக்கும் பாட நெறி: இசை ☐ நடனம் ☐ சித்திரமும் வடிவமைப்பும் ☐

(தெரிவிற்கு √ இடுக)

சமர்ப்பிக்கப்பட வேண்டிய ஆவணங்கள்:

1. பணம் செலுத்திய பற்றுச்சீட்டு ☐
2. உறுதிப்படுத்திய 2014 க.பொ.த (உ.த)பரீட்சைப் பெறுபேற்றுச்சான்றிதழ் (Z புள்ளி/மாவட்டம் உள்ளடங்கலாக) ☐
3. பெயர் மாற்றம் செய்யின் அதனை உறுதிப்படுத்தக்கூடிய ஆவணம் ☐

என்னால் தரப்பட்ட மேற்படி விபரங்கள்யாவும் சரியென உறுதிப்படுத்துகின்றேன்.

.......................... ..........................

திகதி விண்ணப்பதாரியின் கையொப்பம்.

என்முன்னிலையில் கையொப்பமிட்டார் என்பதை உறுதிப்படுத்துகின்றேன்.

திகதி பதவி முத்திரை பாடசாலை அதிபர் / சமாதான நீதவான் கையொப்பம்.

சி-1066)

---

# இலங்கை சிங்கள தேசமல்ல என்ற உளவியல் யுத்தம் அரசால் முன்னெடுப்பு

## இதன் இறுதி வடிவம் தமிழீழமே என தேசப்பற்றுள்ள இயக்கம் சாடல்

(கொழும்பு)

இலங்கை சிங்கள தேசமல்ல என்ற உளவியல் யுத்தத்தை நாட்டில் முன்னெடுத்து தனி தமிழீழத்தை உருவாக்கும் திட்டத்தை ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான அரசாங்கம் முன்னெடுப்பதாக குற்றம்சாட்டும் தேசப்பற்றுள்ள தேசிய இயக்கம் இதற்காகவே யுத்த வெற்றி தினம் உயிர் நீத்தவர்களின் தினமாக பெயர் மாற்றம் பெற்றது என்றும் அவ்வியக்கம் தெரிவிக்கின்றது.

அது தொடர்பாக தேசப்பற்றுள்ள தேசிய இயக்கத்தின் பொதுச் செயலாளர் டாக்டர் வசந்த பண்டார மேலும் தெரிவிக்கையில்,

யுத்தம் முடிந்த பின்னர் யுத்தத்தை முடித்தவர்கள் குற்றவாளிகள் என்றும் அவர்கள் விசாரிக்கப்பட வேண்டும் என்றும் கருத்துகள் நாட்டுக்குள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

இன்று யுத்தத்தை முடித்தவர்கள் பின்னடைவை கண்டுள்ள சூழ்நிலையில் யுத்த வெற்றி தினத்தை பெயர் மாற்றி அதனை உயிர் நீத்தவர்களின் தினமான பிரகடனப்படுத்தியுள்ளனர்.

இலங்கையை பிரிக்கும் சர்வதேச நாடுகளின் நிகழ்ச்சி நிரலுக்கேற்பவே மேற்கொண்ட திட்டங்கள் முன்னெடுக்கப்படுகின்றன.

இதில் அடுத்த கட்டம் தான் இலங்கை சிங்கள தேசம் அல்ல என்பதாகும்.

வரலாற்றில் இலங்கை "ஹெல தேசிய, சிஹல தேசிய" என்றெல்லாம் அழைக்கப்பட்டது. இவற்றை மூடி மறைத்து இது இலங்கை தேசமல்ல என்றும் மக்கள் மத்தியில் உளவியல் ரீதியான யுத்தத்தை பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான அரசாங்கம் முன்னெடுக்கின்றது.

இந்த உளவியல் யுத்தத்தை முன்னெடுத்து இலங்கை தமிழர்களும் ஆண்டார்கள். அவர்களுக்கும் பிரிந்து செல்வதற்கு உரிமையுண்டு என்ற நிலைப்பாட்டை சிங்கள மக்கள் மத்தியில் ஏற்படுத்துவதே இதன் பின்னணியாகும்.

படிப்படியாக 13 ஆவது திருத்தம் முன்னெடுக்கப்பட்டு வடக்கிற்கு காணி, பொலிஸ் அதிகாரங்கள் வழங்கப்படும். அது இறுதியில் சமஷ்டி ஆட்சியை ஏற்படுத்தும். அதன் இறுதி வடிவம் தனித் தமிழீழமாகும் என்றும் வசந்த பண்டார தெரிவித்தார்.

(3-5)

---


**கல்யாண மாலை**

**இவர்களுக்கு மணமகள் தேவை** | **இவர்களுக்கு மணமகன் தேவை**

| இவர்களுக்கு மணமகள் தேவை | இவர்களுக்கு மணமகன் தேவை |
|---|---|
| பிறப்பு: 1981 NONRC<br>உயரம்: 6'<br>தகைமை/தொழில்: பட்டதாரி/ அரச தொழில்<br>தொ.இ: B/4550 | பிறப்பு: 1986 இந்து<br>நட்சத்திரம்: உத்தராடம்<br>கி.பா: 14 3/4<br>உயரம்: 160cm<br>தகைமை/தொழில்: MBBS/ வைத்தியர்<br>தொ.இ: G/1204 |
| பிறப்பு: 1989 இந்து<br>நட்சத்திரம்: புனர்பூசம்<br>கி.பா: 40<br>தகைமை/தொழில்: A/L/ தனியார் தொழில் லண்டன் NON RC<br>தொ.இ: B/4551 | பிறப்பு: 1985 இந்து<br>நட்சத்திரம்: விசாகம்<br>கி.பா: 33 3/4 செவ் 12 ல்<br>உயரம்: 5'2"<br>தகைமை/தொழில்: O/L<br>தொ.இ: G/1205 |
| பிறப்பு: 1981 இந்து<br>நட்சத்திரம்: கேட்டை<br>கி.பா: 25 1/4 செவ் 12 இல்<br>உயரம்: 5'6"<br>தகைமை/தொழில்: பட்டதாரி/ அரச தொழில்<br>தொ.இ: B/4556 | பிறப்பு: 1972 இந்து<br>நட்சத்திரம்: பூசம்<br>கி.பா: 19 3/4<br>உயரம்: 5'3"<br>தகைமை/தொழில்: A/L, Quantity surveyring/ QS<br>தொ.இ: G/1210 |
| பிறப்பு: 1984 இந்து<br>நட்சத்திரம்: திருவோணம்<br>கி.பா: 9<br>உயரம்: 5'6"<br>தகைமை/தொழில்: A/L/ அரச தொழில்<br>தொ.இ: B/4557 | பிறப்பு: 1974 இந்து<br>நட்சத்திரம்: அவிட்டம்<br>கி.பா: 65 செவ் 8 இல்<br>உயரம்: 5'2'<br>தகைமை/தொழில்: A/L / கனடா PR<br>தொ.இ: G/1211 |

**கல்யாண மாலை**
(சர்வதேச திருமண சேவை)
இல. 144, பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்
பதிவுக் கட்டணம் ரூபா 1000 மட்டுமே
தொடர்பு:- 021 720 1005
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
குறிப்பு: எமது காரியாலயம் காலை 9.00 - 5.00 மணிவரை திறக்கப்படும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழில் நான்கு மாதங்களில் 634 மதுவரிக் குற்றங்கள்

### 10 இலட்சம் ரூபா தண்டப் பணம் அறவீடு

**யாழ்.மாவட்டத்தில் கடந்த 4 மாத காலப் பகுதிக்குள் 634 சட்டவிரோத மதுவரி குற்றங்கள் பதிவு செய்யப்பட்டு குற்றவாளிகளிடம் இருந்து 10 இலட்சத்து 67 ஆயிரம் ரூபாய் தண்டப் பணமாக அறவிடப்பட்டுள்ளதாக வடக்கு மாகாண உதவி மதுவரி ஆணையாளர் பீ. கிறீஸ்ரீன் ஜோசப் தெரிவித்துள்ளார்.**

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்,

யாழ். மாவட்டத்தில் உள்ள 4 மதுவரி நிலையங்களிலும் இருந்து மதுவரி ஆணையாளர் மற்றும் மதுவரி அத்தியட்சகர்களின் பரிசோதனை நடவடிக்கையின் போது பல குற்றச் செயல்கள் கண்டு பிடிக்கப்பட்டு அவர்களுக்கு எதிராக அந்தந்த நீதிமன்றங்களில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டது.

அந்த வகையில் சாராய விற்பனை, கள்விற்பனை மற்றும் அவற்றினை வைத்திருந்தமை, கசிப்பு விற்பனை, கஞ்சா வைத்திருந்தமை, வெளிநாட்டு பியர் விற்பனை போன்ற குற்றச் செயல்களுக்காக யாழ்ப்பாண மதுவரி நிலையத்தின் ஊடாக 186 மதுவரி குற்றங்களும் 63 தொழில்நுட்ப குற்றங்களும் சங்கானை மதுவரி நிலையத்தின் ஊடாக 142 மதுவரி குற்றங்களும் 5 தொழில்நுட்ப குற்றங்களும் சாவகச்சேரி மதுவரி நிலையத்தின் ஊடாக 111 மதுவரிக் குற்றங்களும் 18 தொழில்நுட்பக் குற்றங்களும் பருத்தித்துறை மதுவரி நிலையத்தின் ஊடாக 100 மதுவரிக் குற்றங்களும் 12 தொழில்நுட்பக் குற்றங்களும் மல்லாகம் மதுவரி நிலையத்தின் ஊடாக 95 மதுவரி குற்றங்களும் 9 தொழில்நுட்பக் குற்றங்களும் கண்டுபிடிக்கப்பட்டு யாழ்ப்பாணம், ஊர்காவற்றுறை, மல்லாகம், சாவகச்சேரி ஆகிய நீதிமன்றங்களில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டது.

குற்றவாளிகள் தமது குற்றங்களை ஒப்புக் கொண்டதற்கு அமைய குறித்த நீதிமன்றங்களால் யாழ்ப்பாண மதுவரி திணைக்களத்தால் 3 இலட்சத்து 56 ஆயிரத்து 500 ரூபாவும் சங்கானை மதுவரி திணைக்களத்தால் ஒரு இலட்சத்து 54 ஆயிரத்து 500 ரூபாவும் சாவகச்சேரி மதுவரி திணைக்களத்தால் 3 இலட்சத்து 41 ஆயிரம் ரூபாவும் பருத்தித்துறை மதுவரி திணைக்களத்தால் ஒரு இலட்சத்து 500 ரூபாவும் மல்லாகம் மதுவரித் திணைக்களத்தால் ஒரு இலட்சத்து 14 ஆயிரத்து 500 ரூபாவும் தண்டப்பணமாகி அறவிடப்பட்டுள்ளது.

அத்துடன் மதுபானகுற்றச் செயல்கள் நடைபெறும் இடங்கள் தொடர்பாக எமக்கு அறியத்தரும் பட்சத்தில் அது தொடர்பாக நடவடிக்கை எடுக்கப்படும் என அவர் மேலும் தெரிவித்தார். (3-9)

## நியமனம்

(யாழ்ப்பாணம்)

யாழ். மாநகர சபையின் சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையில் இதுவரை காலமும் பிரதம பொதுச் சுகாதாரப் பரிசோதகராக (Chif PHI) கடமையாற்றி வந்த ஆ.ஜீவநாதன் கடந்த 2 ஆம் திகதியுடன் ஓய்வுபெற்றுச் சென்றுள்ளதை அடுத்து அவரது இடத்திற்கு பிரதம பொதுச் சுகாதாரப் பரிசோதகர் எஸ்.திவ்வியகுமாரன் நியமிக்கப்பட்டுள்ளார்.

இனிவரும் காலங்களில் சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையின் பிரதம பொதுச் சுகாதாரப் பரிசோதகர் கடமைகளை எஸ். திவ்விய குமாரனே ஆற்றுவார் என்றும் பொதுமக்கள் தமது சேவையை பெறுவதற்கு எஸ்.திவ்வியகுமாரன் பிரதம பொதுச் சுகாதாரப் பரிசோதகரையே தொடர்பு கொள்ளுமாறுயாழ் மாநகர சபை சுகாதார வைத்திய அதிகாரி அறிவித்துள்ளார். (3-5)




## திருவிழா திருப்பலி

(யாழ்ப்பாணம்)

மிருசுவில் பழைய வாய்க்கால் தூய வேளாங்கண்ணி ஆலயத்தின் வருடாந்த திருவிழா நாளை 27 ஆம் திகதி புதன்கிழமை மாலை 5 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி நாளை மறுதினம் வியாழக்கிழமை மாலை 5 மணிக்கு நவநாள் வழிபாடும் 29 ஆம் திகதி வெள்ளிக்கிழமை மாலை 5.30 மணிக்கு நற்கருணை விழாவும் 30 ஆம் திகதி சனிக்கிழமை மாலை 5.30 மணிக்கு திருவிழா திருப்பலியும் அதனைத் தொடர்ந்து அன்னையின் திருச்சொரூப பவனி இடம்பெற்று அன்னையின் ஆசீர்வாதமும் இடம் பெறும். (3-5)

## இந்திய பிரஜையை விடுவிக்க நடவடிக்கை

யாழ். நீதிமன்ற வளாகம் மற்றும் நகரப் பகுதியில் கடந்த 20 ஆம் திகதி கலவரத்தில் ஈடுபட்ட குற்றச்சாட்டில் கைதுசெய்யப்பட்ட 129 பேரில் ஒருவரான இந்திய சுற்றுலாப் பயணியை மீட்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டு வருவதாக யாழ். இந்திய துணைத் தூதர் எ.நடராஜா நேற்று தெரிவித்துள்ளார்.

புங்குடுதீவு மாணவி கொலை செய்யப்பட்டமைக்கு நீதி கோரி நீதிமன்றத்துக்கு முன்பாக ஒன்றுகூடியவர்களில் சிலர் நீதிமன்ற வளாகத்துக்குள்ளும் அதனை அண்டிய பகுதிகளிலும் கலவரத்தில் ஈடுபட்டிருந்தனர். இதில் நீதிமன்ற கட்டடம், பொது சொத்துக்க்ள் சேதமாக்கப்பட்டன.குழப்பம் விளைவித்தவர்கள் மீது பொலிஸார் கண்ணீர்ப் புகைக் குண்டு பிரயோகித்து அவர்களை விரட்டி இதனையடுத்து, யாழ்நகரப்பகுதியை சுற்றிவளைத்து 129 பேரைக் கைது செய்தனர்.

கைதுசெய்யப்பட்டவர்களில் யாழ்ப்பாணத்தைச் சுற்றிப்பார்க்க வந்த 32 வயதுடைய இந்திய பிரஜை ஒருவரும் அடங்குகின்றார்.

இவருடைய தந்தை யாழ்ப்பாணத்தை சேர்ந்தவர் என்றும் இவருடைய தாயார் இந்தியாவை சேர்ந்தவராகையால் இவர் இந்திய குடியுரிமை பெற்றவர்.

இந்திய சுற்றுலாப் பயணி குழப்பங்கள் எதுவும் விளைவிக்கவில்லையெனவும் அவர் யாழ்ப்பாணத்தைச் சுற்றிப் பார்க்க வந்தவர் என்பதையும் இலங்கைக்கான இந்திய தூதரக அதிகாரிகள் மத்திய அரசாங்கத்துக்கு எடுத்துக் அவரை விடுவிப்பதற்கு நடவடிக்கை எடுத் தள்ளதாக அவர் மேலும் தெரி வித்தார்.

இவர் யாழ்ப்பாணத்திலுள்ள தனது வீட்டை பார்வையிடுவ தற்காக வந்தவர் என்றும் சம்பவ தினம் உணவு வாங்கச் சென்றபோது கலவரத்தில் சிக்குண்டதால் இவர் கைது செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டுள்ளார். (3-9)

## யாழ்.பல்கலை. நுண்கலைமாணி விண்ணப்பம் கோரல்

(யாழ்ப்பாணம்)

யாழ். பல்கலைக்கழகத்தின் நுண்கலை மாணி இசை , நடனம், சித்திரமும் வடிவமைப்பும் நான்கு வருட பட்டப்படிப்பு கற்கை நெறிகளுக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

விண்ணப்ப முடிவு திகதி 12.06.2015 ஆகும். சங்கீதம், நடனம், சித்திரமும்வடிவமைப்பும் கற்கை நெறிகளில் யாதேனுமொன்றை தெரிவு செய்வதற்கு விரும்பும் விண்ணப்பதாரிகள் 2014 ஆம் ஆண்டு நடைபெற்ற க.பொ.த. உயர் தரத்தில் சித்தியடைந்திருப்பதுடன் தெரிவு செய்ய விரும்பும் பட்ட பாடநெறிக்குரிய பாடத்தில் அதாவது சங்கீதம்– கர்நாடகம், அல்லது நடனம்– பரதம் அல்லது சித்திரக்கலையில் ஆகக் குறைந்தது திறமைச் சித்தியும் (C) மற்றைய இரண்டு பாடங்களிலும் ஆகக் குறைந்தது சாதாரணச் சித்தியும் (S) பெற்றிருத்தல் வேண்டும்.

இது தொடர்பான விளம்பரம் இன்றைய வலம்புரியில் பிரசுரிக்கப் பட்டுள்ளது. (3)

## இலங்கை-நோர்வே கூட்டுத்தாபனம் யாழில் இசை விழாவுக்கு ஏற்பாடு

### எதிர்வரும் 29,30 ஆம் திகதிகளில்

(யாழ்ப்பாணம்)

இலங்கை- நோர்வே இசைக் கூட்டுத்தாபனத்தினரால் நடத்தப்படுகின்ற யாழ். இசை விழா எதிர்வரும் 29,30 ஆம் திகதிகளில் நடைபெறவுள்ளது என சேவாலங்கா மன்றத்தின் மனிதவள பணிப்பாளர் ஜினதாரி வெதமுல்ல தெரிவித்துள்ளார்.

யாழ். ஞானம்ஸ் ஹோட்டலில் நேற்று முற்பகல் 11.30 மணியளவில் நடைபெற்ற பத்திரிகையாளர் சந்திப்பின் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இலங்கை மற்றும் நோர்வே நாடுகளுக்கிடையில் 2009 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட பாரிய இசை கூட்டுறவின் கீழ் உள்ள இவ் இசை விழாவினை சேவாலங்கா மன்றம் ஒழுங்குபடுத்துவதுடன் நடத்தி வருகிறது. இவ் இசை விழாவானது கலாசார இடையீடுகள் மூலம் இன நல்லிணக்கத்தை கட்டி எழுப்பும் பிரதான நோக்குடன் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. இவ்விசை நிகழ்வானது வருடந்தோறும் யாழ்ப்பாணம் மற்றும் காலி மாவட்டங்களில் சுழற்சி முறையில் நடைபெறுகிறது.

யாழ். இசை விழாவானது தற்போது இலங்கை மற்றும் வெளிநாட்டு இசை கலைஞர்களின் நாள் குறிக்கப்பட்ட ஒரு நிகழ்வாகும். இவ் வருடம் யாழ். இசை விழா மூன்றாவது முறையாக யாழ்ப்பாணத்தில் 2015 ஆம் ஆண்டு மே மாதம் 29,30 நாட்களில் இடம்பெறவுள்ளது.

இவ்வருடம் யாழ். இசை விழா 2015 நாட்டுப்புற மற்றும் பாரம்பரிய நிகழ்வுகளை இரு மடங்கு கவனம் செலுத்துகின்றது. இதில் முதல் பகுதி 29 ஆம் திகதி மே மாதம் 2015 ஆம் ஆண்டு சிறுவர்கள் விழாவாகவும் இரண்டாவது பகுதி பிரதான யாழ். இசை விழாவாகவும் நடைபெறவுள்ளது. யாழ். இசை விழா 2015, மே மாதம் 30 ஆம் திகதி 2015 ஆம் ஆண்டில் நடைபெறும்.

இதில் 8-10 உள்நாட்டு குழுக்கள் உள்ளடங்குவர். அதில் பெரும் பகுதியினர் வன்னி பிராந்தியத்திலும் ஏனையவர்கள் இலங்கையின் வேறுபட்ட பகுதியில் உள்ளவர்கள். அதனுடன் தனிச் சிறப்புமிக்க வண்ணமயமான கலாசார நிகழ்வுகளை வழங்கவிருக்கும் இந்தியா மற்றும் பங்காளாதேஷிலிருந்து 3 சர்வதேச குழுக்களும் பங்குபற்றவுள்ளன.

2015 ஆம் ஆண்டு மே மாதம் 30 ஆம் திகதி இடம்பெறும் பிரதான விழாவின் குழு நிகழ்வுகள் வருமாறு,

பங்குரபான்– மதுகம, சப்ரகமுவ பாலி– இரத்தினபுரி, யாழ். கிராமிய சங்கமம்– யாழ்ப்பாணம், சூபி– அம்பாறை–பாலிபொனிக்ஸ்– கொழும்பு, புலிக் கூத்து– மட்டக்களப்பு, உடப்பு– புத்தளம், ஒன்றிணைந்த பல்கலைக்கழக நிகழ்ச்சி (யாழ்ப்பாணம், மட்டக்களப்பு பேராதனை) மற்றும் தப்பு– கிளிநொச்சி, இத்துடன் 3 சர்வதேச குழுக்களான பங்களாதேஷ் மற்றும் இந்தியா ஆகிய நாடுகளின் நிகழ்வுகளும் நடைபெறும். இச்சந்திப்பில் யாழ். மாவட்ட இணைப்பாளர் ந.நகுலேந்திரன், ஜி.சபேசன் ஆகியோர்கலந்துகொண்டிருந்தனர். (3-4)

## துன்புறுத்தல்களுக்கு உள்ளாகும் பெண்களுக்கு இலவச சட்டசேவை வழங்கப்படும்

### மகளிர் அபிவிருத்தி நிலையப் பணிப்பாளர் சரோஜா சிவச்சந்திரன் தெரிவிப்பு

வடக்கு மாகாணத்தில் துன்புறுத்தல்களுக்கு உள்ளாகும் பெண்கள் எமது சட்டசேவை நிலையங்களில் முறைப்பாடு செய்யும் பட்சத்தில் அவர்களுக்கு சட்டரீதியான நடவடிக்கைகளை இலவசமாகப் பெற்றுக் கொடுக்க முடியும் என மகளிர் அபிவிருத்தி நிலையத்தின் பணிப்பாளர் சரோஜா சிவச்சந்திரன் தெரிவித்துள்ளார்.

பெண்களுக்கெதிரான வன்முறைகள் தொடர்பாக தெரிவு செய்யப்பட்ட குழுவினருடன் கடந்த வெள்ளிக்கிழமை நடைபெற்ற கலந்துரையாடலின் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்,

எமது நிறுவனத்தின் ஊடாக பெண்களுக்கு எதிரான வன்முறைகள் தொடர்பாக பல நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றோம். அதில் பிரசாரம்,விழிப்புணர்வு, சட்ட நடவடிக்கைகள் போன்றவற்றை செய்து வருகின்றோம். அந்த வகையில் யாழ்ப்பாணம், வவுனியா, மட்டக்களப்பு ஆகிய மாவட்டங்களில் பிரதேச ரீதியாக சட்ட நிலையங்களை அமைத்து அங்கு வழக்குகளை பதிவு செய்து சட்டநடவடிக்கைகளை மேற்கொள்வதற்காக சட்டத்தரணிகளை நியமித்துள்ளோம்.

கூடுதலாக கிராமமட்டங்களில் துன்புறுத்தல்கள், பாலியல் ரீதியான வன்கொடுமைகளுக்கு உள்ளாகும் பெண்கள் கட்டாயமாக முறைப்பாடுகளை பதிவுசெய்ய வேண்டும்.

முறைப்பாடுகளை பதிவு செய்வதற்கு பல பெண்கள் தயக்கம் காட்டுகிறார்கள். அத்துடன் பொய்யான தகவல்களையும் கொடுக்கிறார்கள். இதனால் பல உண்மைச் சம்பவங்கள் திரிபுபடுத்தப்படுகின்றன. இதனால் பெண்களுக்கு உரிய முறையில் நீதி கிடைப்பதில் சிக்கல்கள் உருவாகின்றன.

சட்டத்தில் நீதியை எதிர்பார்க்க வேண்டும் என்றால் சரியான தகவல்களை நாம் கொடுக்கவேண்டும். அல்லது சரியான தகவல்களை பெற்றுக்கொடுக்க உதவியாக இருக்க வேண்டும். அதன்[illegible] நியாயம் கிடைக்கவாய்ப்[illegible]

பெண்களுக்கு எதிரான வன்முறைகள் தொடர்ந்தும் இடம்பெற்ற வண்ணம்தான் உள்ளன.



வன்முறைகள் இடம்பெற்றுவரும் சூழலில் தொடர்ச்சியான விழிப்புணர்வு நடவடிக்கைகள் இடம்பெற வேண்டும்.தகவல்களை சரியாகப் பயன்படுத்தினால் வன்முறைச் சம்பவங்களை குறைக்கமுடியும்.

எனவே இளைஞர்கள் புறசக்திகளின் தாக்கத்துக்கு உள்ளாகாமல் திறன்களையும் வளங்களையும் எதிர்கால முன்னேற்றத்திற்கும் சமூகத்தின் முன்னேற்றத்திற்கும் பயன்படுத்தினால் நாம் சுதந்திரமான நல்ல சமூகத்தை உருவாக்க முடியும் என அவர் மேலும் தெரிவித்தார். (3-9)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# மகிந்த நாளாந்தம் என்ன செய்கிறார்?

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் நாளாந்த செயற்பாடுகள் தொடர்பாக ஊவா மாகாண முதலமைச்சர் ஹரின் பெர்னாண்டோ விபரித்துள்ளார்.

நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை பண்டாரவளையில் இடம்பெற்ற நிகழ் வொன்றில் கலந்துகொண்ட போதே, முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் நாளாந்த செயற்பாடுகள் தொடர்பில் அவர் விபரித்தார்.

நாட்டின் உயர்ந்த இடத்திற்கு சென்று கீழ் நிலைக்கு வருவதற்கு யாரும் விரும்பமாட்டார்கள். ஆனால் இலங்கை வரலாற்றில் அவ்வாறான ஒருவர் மாத்திரமே இருக்கின்றார். அவர்தான் மகிந்த ராஜபக்ஷ.

அவரின் நாளாந்த செயற்பாடுகள் குறித்து ஒரு சகோதரர் எனக்கு குறுஞ்செய்தியொன்றை அனுப்பினார்.

காலையில் எழுந்தவுடன் அவர் வசியம் செய்யும் பந்தை சுழற்றுகிறார். மலர் தட்டை எடுத்துக்கொண்டு விகாரைக்கு செல்கின்றார். அதனை அடுத்து பிரதமர் பதவியை வழங்குமாறு கோரி அனைவரிடமும் கெஞ்சுகிறார்.

மோசடிக்கார நண்பர்களை சந்திப்பதற்கு பழங்களை எடுத்துக்கொண்டு சிறைச்சாலைகள் தோறும் செல்கிறார். தொடர்ந்து தம்மை பழிவாங்க முற்படுகிறார்கள் என தெரிவித்து மாலைப்பொழுதில் மீண்டும் அழுகின்றார்.

தம்மால் மோசடி செய்யப்பட்ட ட்ரில்லியன் கணக்கான நிதி தொடர்பாக இரவு நேரங்களில் புதல்வர்களுடன் உரையாடிவிட்டு நடுக்கத்துடன் மீண்டும் வசிய பந்தை சுழற்றிவிட்டு நித்திரை கொள்கிறார் என்றார் முதலமைச்சர் ஹரின்.(3-5)



## மாணவி படுகொலைக் குற்றவாளிகளுக்கு

# சட்டத்தை திருத்தியேனும் தண்டனை வழங்க வேண்டும்

## அப்பாத்துரை விநாயகமூர்த்தி எம்.பி.வலியுறுத்து

**(யாழ்ப்பாணம்)**

**யாழ்ப்பாணம் புங்குடுதீவைச் சேர்ந்த ஒரு பாடசாலை மாணவி எட்டுக்கு மேற்பட்ட கொடியவர்களால் வன்புணர்வுக்கு உள்ளாக்கப்பட்டு பின் கொலை செய்யப்பட்டதிலிருந்து தொடர்ச்சியாக போராட்டங்களும் வன்முறைகளும் இடம்பெற்று வருகின்றன.**

முதலிலே வித்தியா என்னும் இப் பாடசாலை மாணவிக்கு வார்த்தைகளால் வர்ணிக்கப்பட முடியாத இவ்வாறானதொரு கொடூரம் நடைபெற்றிருப்பது வன்மையாக கண்டிக்கப்பட வேண்டியதாகும். அதுவும் தமிழர்தம் தாயகமாம் யாழ்ப்பாணத்தில் இவ்வாறு நடைபெற்றிருப்பதையிட்டு நாம் அனைவரும் வெட்கித் தலைகுனிய வேண்டும். இதுவரை காலத்தில் இவ்வாறானதொரு மிலேச்சத்தனமான செயல் யாழ்ப்பாணத்தில் இடம்பெற்றதில்லை.

சந்தேக நபர்களது குற்றம் நிரூபிக்கப்பட்டு மரணதண்டனை வழங்கப்பட்டாலும் இந்த நாட்டிலே இப்போது மரணதண்டனை அமுலில் இல்லை. ஆதலால் சட்டத்தைத் திருத்தியேனும் இவர்களது மரண தண்டனையை உறுதிசெய்ய வேண்டுமென சட்டத்துறையை நான் விநயமுடன் கேட்டுக்கொள்கின்றேன்.

இக்கொடிய சம்பவம் வித்தியாவின் குடும்பத்தாருக்கு மட்டுமல்ல ஒட்டுமொத்த தமிழ் இனத்துக்கே வேதனையையும் மாறாத வலியினையும் கொடுத்திருக்கிறது. முழு யாழ்ப்பாணமும் திரண்டு எழுந்து எதிர்ப்பினை வெளிக்காட்டியுள்ளது.

இவற்றுக்கிடையில் இந்தச் சூழ்நிலையைப் பயன்படுத்தி அரசியல் இலாபம் கருதும் சிலர் மற்றைய அரசியல் கட்சிகள், அரசியல் பிரமுகர்கள், சட்டத்தரணிகள் மற்றும் நீதித்துறையினையும் தாக்கி அவதூறு செய்து வருகின்றனர்.

இவற்றின் உச்சக்கட்டமாக யாழ்ப்பாண நீதிமன்றம் மிக மோசமாகத் தாக்கப்பட்டிருக்கிறது.

நாம் அனைவரும் ஒன்றிணைந்து ஒரே குரலில் வித்தியாவின் மீது மேற்கொள்ளப்பட்ட வன்முறைகளுக்கு எதிராக எதிர்ப்பினை வெளிப்படுத்துவதுடன் வினைத்திறன் மிக்க வகையில் சட்ட நடவடிக்கைகள் எடுக்கப்படுவதற்கு பூரண ஒத்துழைப்பு வழங்குவதே மரணித்த அந்த இளம் தளிருக்கு நாங்கள் செலுத்தும் உண்மையான அஞ்சலியாக அமையும்.

அதனை விடுத்து இளைஞர்களைத் தூண்டி விட்டு நீதிமன்றத்தைத் தாக்குவதன்மூலம் வன்முறைக் கலாசாரத்தை கையிலெடுக்க முயல்வது மீண்டும் எம்மீதான அடக்குமுறைக்கே வழிவகுக்கும். இவ்வாறான வன்செயல்களில் ஈடுபடுவதனால் நாம் எதிர்பார்க்கும் இலட்சியத்தை அடைய முடியாது.

ஒரு சந்தேக நபரை பொலிஸார் விடுவித்திருக்கும் நிலையில் நீதிமன்றத்துக்கு கல்லெறிந்து தாக்குதல் நடத்தியதை இதற்கான உதாரணமாகக் குறிப்பிடலாம்.

நடைபெற்று முடிந்த சகல நிகழ்வுகளையும் பார்க்கும்போது துணைக்குழுக்களது பின்புலம் யாவருக்கும் வெளிப்படையாகப் புரிந்திருக்கும்.

அரசியல் சுயலாபம் கருதும் சிலர் ஓர் அப்பாவி மாணவி வன்புணர்வின் பின் கொலை செய்யப்பட்ட சம்பவத்தைக்கூட வேறு திசையில் அரசியலாக்க முனைகின்றனர்.

ஆதலால் உரிய முறையில் துல்லியமாக விசாரணைகள் நடத்தப்படுவதற்கும் வினைத்திறன் மிக்க முறையில் சட்டநடவடிக்கைகள் எடுக்கப்படுவதனூடு குற்றவாளிகள் கடுமையாகத் தண்டிக்கப்படுவதற்குமாக பொதுமக்களாகிய நாம் சட்டம் ஒழுங்கைப் பின்பற்றி ஒத்துழைப்பை வழங்குவதே வித்தியாவின் ஆத்மாவிற்கு நாம் செய்யும் அஞ்சலியாகும் என்பதை விநயமுடன் கேட்டுக்கொள்கிறேன். (3)

# கேன்ஸ் திரைப்படவிருது வென்ற ஈழத்தமிழ் அகதிகளின் கதை!

பிரபல பிரெஞ்சு திரைப்பட இயக்குநர் ஷாக் அவ்தியா(த்) இயக்கிய "தீபன்" திரைப்படம் கேன்ஸ் சர்வதேச திரைப்பட விழாவில் சிறந்த திரைப்படத்துக்கான பாம்தோர் (தங்கப் பனை) விருது வென்றிருக்கிறது.

பிரான்ஸ் நாட்டுக்கு அகதித் தஞ்சம் கோரி குடியேறும் மூன்று தனித்தனி ஈழத்தமிழ் அகதிகளின் வாழ்க்கைப் போராட்டத்தை விளக்கும் இந்த திரைப்படத்தில் ஈழத்தமிழ் எழுத்தாளரும் முன்னாள் ஈழ ஆயுதப் போராளியுமான ஷோபா சக்தி கதாநாயகனாக நடித்திருக்கிறார். அவருடன் தமிழ்நாட்டைச் சேர்ந்த மேடை நாடகக் கலைஞர் காளீஸ்வரியும் இந்த திரைப்படத்தில் கதாநாயகியாக நடித்திருக்கிறார்.



பிரான்ஸில் குடியேறும் மூன்று வெவ்வேறு ஈழத்தமிழ் அகதிகள் அகதித்தஞ்சம் பெற்றுக்கொள்வதற்காக தற்காலிகமாக தங்களை ஒரு குடும்பமாக இணைத்துக் கொள்கிறார்கள். குடியேறிய அந்நிய நாட்டில், அந்நிய சமூகத்தில் அவர்கள் எதிர் கொள்ளும் சவால்களை இந்த திரைப்படம் விபரிக் கிறது. ஒருவகையில் தனது சொந்த வாழ்வின் போராட்டங்களின் பெரும் பகுதியை இந்த திரைப்படத்தின் கதாநாயகன் தீபன் [illegible] ஷோபா சக்தி தெரிவித்திருந்தார்.

புலம் பெயர்ந்த நாடுகளில் ஈழத்தமிழ் அகதிகள் சந்திக்கும் புறச்சூழல் சார்ந்த பிரச்சினைகளையும், அகச்சூழலில் அவர்கள் எதிர்கொள்ளும் அலைக்கழிப்புக்களையும், மனப் போராட்டங்களையும் பேசக்கூடிய முதல் ஐரோப்பிய திரைப்படம் "தீபன்" என்று பரவலாக பார்க்கப்படுகிறது.

கேன்ஸில் இந்ததிரைப்படத்தை பார்த்த முன்னணி திரை விமர்சகர்கள் பலரும் இந்த திரைப்படத்தையும், ஷோபாசக்தி மற்றும் காளீஸ்வரியின் நடிப்பையும் பெரிதும் பாராட்டியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

இந்த சர்வதேச திரைப்பட போட்டியில் ஹாலிவுட்டின் முன்னணி திரை நட்சத்திரங்கள் நடித்த திரைப்படங்கள் பல போட்டியில் இருந்தன. அவற்றையெல்லாம் பின்னுக்குத்தள்ளிவிட்டு, முற்றிலும் புதுமுகங்களும், தொழில்முறை திரைப்பட முன் அனுபவமற்ற நடிகர்களும் நடித்த தீபன் திரைப்படம் இந்த சிறப்பு விருதினை வென்றிருப்பது ஐரோப்பிய திரை விமர்சகர்கள் பலரையும் பெரும் ஆச்சரியத்தில் ஆழ்த்தியிருக்கிறது.(3-5)

## வீரதுங்கவுக்கு எதிராக குற்றப்பத்திரம்



முன்னாள் ஜனாதிபதியின் செயலாளர் லலித் வீரதுங்கவுக்கு எதிராக, 620 மில்லியன் ரூபா நிதி மோசடி தொடர்பில் மேல்நீதிமன்றத்தில் நேரடியாக குற்றப்பத்திரம் தாக்கல் செய்யப்பட்டிருப்பதாக சட்டமா அதிபர் திணைக்களத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

நிதி மோசடி குற்றத் தடுப்பு புலனாய்வுப் பிரிவு இது தொடர்பில் லலித் வீரதுங்கவிடம் தொடர்ந்தும் விசாரணைகளை முன்னெடுத்துள்ளமை குறிப்பிடத்தக்கது.(3-5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புகையிரத சமிக்ஞைகள் போடப்பட்ட நிலையிலும் அதனூடான போக்குவரத்து நடைபெறுகின்றது

## கட்டுப்படுத்த நடவடிக்கை எடுக்குமாறு பொதுமக்கள் வேண்டுகோள்

(கிளிநொச்சி)

புகையிரதம் வருவதற்கான சமிக்ஞைகள் போடப்பட்டு புகையிரதக் கடவைக்கான தடுப்பாணை இடப்பட்ட நிலையில் அதனை பொருட்படுத்தாது பொதுமக்கள் உள்நுழைந்து செல்வதால் உயிராபத்து ஏற்பட வாய்ப்புள்ளதாக தெரிவிக்கப்படுகின்றன.

இது தொடர்பில் மேலும் தெரியவருவதாவது, கிளிநொச்சி புகையிரத நிலையத்திற்கு அருகாமையிலும் புதிய மாவட்ட செயலகத்திற்கு முன்பாகவும் அமைக்கப்பட்டுள்ள புகையிரதக்கடவையில் தடுப்பாணை போடப்பட்டு சிவப்பு விளக்குகள் ஒளிர்கின்ற நிலையிலும் கடவையின் ஊடாக பொதுமக்கள் உள்நுழைந்து இடறுபட்டு ஓடுவதை அவதானிக்க முடிகின்றது.

அதிலும் குறிப்பாக பதின்ம வயதுப் பிள்ளைகள் துவிச்சக்கர வண்டிகளில் அதே வழியாக செல்கின்றனர்.

இதனால் புகையிரதத்தில் தாக்குண்டு உயிரிழக்கும் சம்பவம் நிகழ வாய்ப்புள்ளதாக அப்பகுதி வாழ்மக்கள் தெரிவிக்கின்றனர்.

கூடுதலாக மதிய நேரத்தில் கடுகதி புகையிரதம் வருகை தரும் வேளையில், மேற்படி சம்பவம் இடம்பெற்று வருகின்றது.



எனவே புகையிரத நிலைய அதிகாரிகள், பொலிஸார் இதனைக் கவனத்தில் கொண்டு உரியவர்களுக்கு தண்டனை வழங்க நடவடிக்கை எடுப்பதன் மூலம் இவற்றைக் கட்டுப்படுத்த முடியுமென பொதுமக்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர். (2-254)

## மக்களின் தேவைகள் குறித்து நேரில் சென்று ஆராய்வு

(கிளிநொச்சி)

கிளிநொச்சி மாவட்டத்தின் கரிகாலநாகபடுவான் கிராமத்து மக்களை வடக்கு மாகாண கிராம அபிவிருத்தி அமைச்சர் பா.டெனீஸ்வரன்.அமைச்சின் செயலாளர் எஸ்.சத்தியசீலன், கிளிநொச்சி பிரதேச செயலாளர் ஆகியோர் நேரில் சென்று சந்தித்துள்ளனர்.

மேற்படி கிராமமக்களின் அழைப்பை ஏற்று அண்மையில் திடீர் விஜயம் மேற்கொண்ட அவர்கள்.மக்களை சந்தித்து அவர்களது தேவைகள் மற்றும் குறைபாடுகள் தொடர்பாகவும்கேட்டறிந்து கொண்டனர்.

அத்துடன் அங்குள்ள குளத்தின் நிலை குறித்தும் நன்னீர் மீன்பிடி, மீன்குஞ்சுகள் வைப்பிலிடல், பண்ணை உருவாக்குதல் தொடர்பாகவும், பலவாறான அபிவிருத்திகள் குறித்தும் விரைவில் திட்டம் தயார் செய்து நடைமுறைப்படுத்துவதாகவும் அமைச்சர் மக்களுக்கு தெரிவித்தார். (2-9)

# பாடசாலைகளின் முன்பாக மூன்று பேருந்து தரிப்பிடங்கள் திறந்து வைப்பு



மன்னார் மாவட்டத்தின் மூன்று பிரதான பாடசாலைகளின் முன்பாக வடக்கு மீன்பிடி போக்குவரத்து அமைச்சால் அமைக்கப்பட்ட பேருந்து தரிப்பிடங்கள் திறந்துவைக்கப்பட்டது.

இதற்கமைய புனித சவேரியார் ஆண்கள் கல்லூரி, புனித சவேரியார் பெண்கள் கல்லூரி, சித்தி விநாயகர் இந்துக் கல்லூரி ஆகிய பாடசாலைகளின் மாணவர்கள் மற்றும் ஆசிரியர்களின் நலன் கருதி வடக்கு மாகாண மீன்பிடி, போக்குவரத்து அமைச்சரின் திட்டத்திற்கமைவாக, மீன்பிடி அமைச்சால் அமைக்கப்பட்ட பேருந்து தரிப்பிடங்கள் மூன்றும் கடந்த 19ஆம் திகதிகாலை 9:30 மணியளவில் அந்தந்த பாடசாலைகளின் அதிபர்கள்,ஆசிரியர்கள், மாணவர்கள் அனைவரும் இணைந்து வடக்கு மாகாண மீன்பிடி போக்குவரத்து அமைச்சர் பா.டெனீஸ்வரனினால் உத்தியோகப் பூர்வமாக திறந்து வைக்கப்பட்டது. (2)






வவுனியா கலை இலக்கிய நண்பர்கள் வட்டத்தின் ஏற்பாட்டில் வேதநாயகம் தபேந்திரன் எழுதிய யாழ்ப்பாண நினைவுகள்-பாகம் 01 நூல் அறிமுகவிழா நேற்று முன்தினம் முற்பகல் 10மணிக்கு வவுனியா சுத்தானந்தா இந்து இளைஞர் கலாசார மண்டபத்தில் நடைபெற்றபோது... (படம்:-சிவநகர் செய்தியாளர்)

## கணக்காய்வு தொடர்பான கலந்துரையாடல்

வாழ்வாதார கடன்திட்டம் ஒப்பந்த வேலைகள் மணல் யாட் அரச சார்பற்ற நிறுவனங்களுடன் இணைந்த வேலைத் திட்டங்கள் ஆகியவற்றை மேற்கொள்கின்ற கிராம அபிவிருத்தி சங்க மற்றும் மாதர் அபிவிருத்தி சங்க உறுப்பினர்களுடனான கணக்காய்வு கலந்துரையாடல்கள் நடைபெறவுள்ளன.

அந்தவகையில் மேற்குறிப்பிடப்பட்ட அமைப்புக்களின் பொருளாளருடன் தலைவர் அல்லது செயலாளர் கலந்துரையாடலின்போது கலந்து கொள்ளுமாறு கேட்கப்படுகின்றது.

இதற்கமைய துணுக்காய், மாந்தை கிழக்கு ஆகிய பிரதேச செயலக பிரிவிற்குட்பட்டவர்களுக்கு இன்று செவ்வாய்க்கிழமை பிற்பகல் 2 மணிக்கு துணுக்காய் பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்திலும் நடைபெறவுள்ளது.

கிளிநொச்சி மாவட்டத்தில் நாளை மறுதினம் வியாழக்கிழமை மு.ப.10 மணிக்கு கிளிநொச்சி டிப்போ சந்தியில் அமைந்துள்ள கூட்டுறவு திணைக்களத்திலும் பச்சிலைப்பள்ளி மற்றும் பூநகரி பிரதேச செயலகத்திற்குட்பட்டவர்களுக்கும் அதேதினம் பி.ப. 2 மணிக்கு கரைச்சி மற்றும் கண்டாவளை பிரதேச செயலக பிரிவிற் குட்பட்டவர்களுக்கும் இடம்பெறுமெனவும் முல்லைத்தீவு மாவட்ட கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர் வேண்டுகோள் விடுத்துள்ளார். (2-281)

# கடந்தகால யுத்த இழப்புக்கள் அதிகளவு வலிகளை தந்துள்ளது

## சர்வதேச இந்து இளைஞர் பேரவை தலைவர் தெரிவிப்பு




கடந்த காலங்களில் நடைபெற்று முடிந்த யுத்தம் எமக்கு அதிக வலிகளைத் தந்துள்ளது.

அதிக இழப்புக்களை நாம் சந்தித்துள்ளோம் இந்த நிலைமைகளுக்குள்ளும் எமது மாணவர்கள் கல்வியில் பல சாதனைகளை சாதித்து வருகின்றார்கள் என சர்வதேச இந்து இளைஞர் பேரவையின் தலைவர் சிவ.க ஜேந்திரகுமார்தெரிவித்துள்ளார்.

வவுனியா. ஸ்ரீ ராமபுரம் மாணவர்களுக்கு சர்வதேச இந்து இளைஞர் பேரவையால் கற்றல் உபகரணங்கள் அண்மையில் வழங்கிவைக்கப்பட்டது.

கடந்த கால யுத்த அனர்த்தங்களால் பாதிக்கப்பட்டிருந்த இம் மாணவர்களின் கற்றல் செயற்பாட்டை விருத்தி செய்யும் நோக்கில் அப் பகுதி மக்கள் கேட்டுக் கொண்டதற்கிணங்க 67 மாணவர்களுக்கு பாடசாலை கற்றல் உபகரணங்கள் வழங்கி வைக்கபபட்டது.

இந் நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றிய போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் தொடர்ந்து கூறுகையில்,

கடந்த கால யுத்தத்தினால் நாம் அதிகளவு இழப்புக்களை நாம் சந்தித்துள்ளோம். இந்த நிலைமைகளுக்குள்ளும் எமது மாணவர்கள் கல்வியில் சாதித்து வருகிறார்கள். அவர்கள் தொடர்ந்தும் சாதிக்க வேண்டும்.

ஒழுக்கமுள்ள ஒரு மாணவ சமுதாயம் கல்விச் சிறப்புடன் எழுச்சி பெறுவதை ஒவ்வொரு பெற்றோரும் உறுதிப்படுத்திக் கொள்ள வேண்டும். அதற்காக சர்வதேச இந்து இளைஞர் பேரவையும் எவ்வேளையிலும் உதவ தயாராக இருக்கின்றது. விரைவில் தரம் 5 இற்கு உட்பட்ட இப் பகுதி மாணவர்களுக்கு இலவச கல்வி நிலையம் ஒன்றும் அமைத்து தரப்படும் எனவும் அவர் மேலும் தெரிவித்தார். (2-250)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வித்தியாவின் படுகொலையினைக் கண்டித்து பல்கலை. மாணவர்கள் வவுனில் ஆர்ப்பாட்டம்

(குருமன்காடு)

கூட்டுவன்புணர்வுக்கு உட்படுத் தப்பட்டு கோரப்படுகாலை செய்யப் பட்ட புங்குடுதீவு மாணவி சிவலோ கநாதன் வித்தியாவிற்கு நீதி வழங் கப்பட வேண்டுமெனக் கோரியும் படு கொலையைக் கண்டித்தும் யாழ். பல்கலைக்கழகத்தின்வவுனியாவளாக மாணவர்களும் நேற்றுக்காலை ஆர்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

வவுனியாபூங்காவீதியில்அமைந் துள்ள யாழ்ப்பாண பல்கலைக்கழ கத்தின் வளாகத்தின் முன் ஒன்று கூடிய மாணவர்கள் வித்தியாவின் படுகொலை மற்றும் வன்புணர்வு குற்றவாளிகளைத் தூக்கில் போடு மாறு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டவர்கள் தமது எதிர்ப்பை வெளிப்படுத்தினர்.

இதன்போது சில மாணவர்கள் பல் கலைக்கழகத்தின் கூரைமேல் ஏறியும் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டிருந்தனர்.

இதன்போது மாணவர்களால்,

"விலைமதிக்க முடியாத வித்தி யாவின் கொலைக்கார கும்பல் தொங் கட்டும், பெண்கள் வெறும் சதைப் பிணங்கள் அல்ல, விதைகளை அழித் தால் விருட்சங்கள் உருவாகுமா?, சிந்திய கண்ணீர்த்துளிகளின் பெறு மதி என்ன?" ஆகிய வாசகங்கள் எழு தப்பட்ட பதாகைகளை ஏந்தியவாறு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். மாணவர் கள் தமது கல்வி நடவடிக்கையினை இடைநிறுத்தியே இதில் பங்கேற் றமை குறிப்பிடத்தக்கது. (2-250)

வன்னி வலம்







## வித்தியாவின் படுகொலைக்கு நீதிகோரி மாணவர் சமூகம் மாபெரும் கண்டனப்பேரணி



(மன்னார்)

புங்குடுதீவு மாணவி சிவலோக நாதன் வித்தியா கூட்டு வன்புணர் வின் பின்னர் படுகொலை செய் யப்பட்ட சம்பவத்தைக் கண்டித்தும் நீதிகேட்டும் மாபெரும் மாணவர்கள் கண்டனப் பேரணியொன்று அண் மையில் நடத்தப்பட்டது.

இப்பேரணியில் மன்னார் மாவட் டத்தைச் சேர்ந்த சித்தி விநாயகர் இந்துக்கல்லூரி, புனித சவேரியார் பெண்கள் கல்லூரி ஆகிய இரு பாட சாலைகளின் அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள் இணைந்து நடத் தினர்.



இதன்போது,

"வன்புணர்வு செய்த காடையர் களை சட்டம் சரியாக தண்டிக்க வேண் டும், குற்றவாளிகளுக்கு ஆதரவாக சட்டத்தரணிகள் எவரும் முன்னிலை யாகக் கூடாது, பெண்களை காமக் கயவர்களிடம் இருந்து காப்பாற் றுங்கள், நீதிவேண்டும் வித்தியா பலாத்காரப் படுகொலைக்கு நீதி வேண்டும், குற்றவாளிகள் தண்டிக் கப்படவேண்டும், தாமதம் வேண் டாம், பெண்கள் எமக்கேன் இக் [illegible] கொடும் அவலங்கள்?, கட்டி[illegible] காமக்கயவர்களை தப்பிச் செல்ல விடாதே, அன்று கிருசாந்தி, இன்று வித்தியா அடுத்தது யார்?"

இவ்வாறான கோசங்களை எழுப் பியவாறு பதாகைகளை ஏந்தியவாறு [illegible] ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். (2-[illegible])

## தமிழ்மக்கள் சுயநிர்ணய உரிமைக்காக போராடும் நிலைக்கு தள்ளப்பட்டுள்ளனர்

### வன்னி மாவட்ட அரசியல் பிரிவு அமைப்பாளர் தெரிவிப்பு

உயிர் நீத்த இலட்சக்கணக்கான தமிழ் உறவுகளின் ஆத்மா சாந்தி அடைவதென்றால் அவர்களது கொள்கை, கோட்பாடுகள் இலட்சிய ங்கள், அவர்களது காலடித்தடைய ங்கள் அனைத்தும் செப்பனிட்டு பின்பற்றும் அரசியலை தமிழ்த் தேசிய மண்ணில் அரசியல் தலை மைத்துவத்தை கொண்டிருக்கும் சகல சக்திகளும் கருத்துவேற்று மைகள், அரசியல் முரண்பாடுகள் அனைத்தையும் கைவிட்டு ஐக்கியத் துடன் தமிழ்த்தேசியத்தின் இலட்சி யங்கள் மற்றும் இனத்தீர்வுக்கான அரசியலை முன்னெடுப்பதே இந்த வீர தியாகிகளுக்கு செலுத்தும் வீர அகவணக்கமாகும்என வன்னிமாவ ட்ட அரசியல்பிரிவு அமைப்பாளர் எஸ். கோவிந்தராஜ் தெரிவித்துள்ளார்.

இறுதி யுத்தத்தின் போது உயி ரிழந்த உறவுகளை நினைவுகூரும் அஞ்சலி நிகழ்வு இ.தொ.காவின் வவுனியா சமூகமேம்பாட்டு நிலை யத்தில் அண்மையில் நடைபெற்றது.

இதில் உரையாற்றுகையில் அவர் மேற்கண்டவாறு குறிப்பிட் டார். அவர் தொடர்ந்து கூறுகையில்,

சுமார் அறுபது வருடத்திற்கு மேல் தமிழ்த்தேசியத்தில் வாழ் கின்ற தமிழர்கள் தனது பூர்வீக தாயக மண்ணையும் சுயநிர்ண யம் சுயாட்சி மற்றும் நிரந்தரமான இனப்பிரச்சினை தீர்வு ஆகிய வற்றை உறுதிசெய்து தனது சொந்த மண்ணில் சுதந்திரமாக தங்களை தாங்களே ஆளுகின்ற பல்வேறு அழிவுகள், இழப்புகளை விலை கொடுத்து இன்றும் தமது உரிமைக் காக போராடுகின்ற நிலைக்கு ஆளாக்கப்பட்டுள்ளனர்.

கடந்த முப்பது வருடகாலம் நிகழ்ந்த கொடிய யுத்தத்தால் எம் உறவுகள் சொந்தமண்ணை விட்டு வெளியேற்றப்பட்டனர். அவர்கள் இங்கும் வெளிநாட்டிலும் இன்றும் அவல அகதிவாழ்வை அனுபவித்து தாங்க முடியாத கஷ்டங்களுக்கும் துன்ப துயரங்களுக்கும் இன்னல்க ளுக்கும் முகங்கொடுத்து தங்களது வாழ்வில் எப்போது விடிவு கிட்டு மென ஏக்கத்துடன் வாழ்கின்றனர்.

ஒரு ஆட்சி மாற்றத்தினூடாக கபளீகரம் செய்யப்பட்ட இராணுவம் தன்னகப்படுத்தியுள்ள தமிழர்களது சொந்த காணிகள், வீடுகள் என்பன விடுவிக்கப்படும் எவ்வித விசாரணையின்றி வெஞ்சிறையில் வாடுகின்ற தமிழ் அரசியல் கைதிக ளுக்கு விடுதலைக்கு வழிபிறக்கும், பலவருடம் தனது உறவுகளை இழந்து பரிதவித்து பலபோராட்டங் களை நடத்தி வேதனையுடன் கண்ணீர் வடிக்கும் காணாமற் போனோர் பிரச்சினைக்கு சாதக தீர்வு கிட்டும். தனது சொந்த மண் ணில் கிரமமாக மீள்குடியேற்றம் இடம்பெறும் எல்லாவற்றுக்கும் மேலாக மனிதவுரிமை ஐ.நா. விசா ரணை அரைநூற்றாண்டு புரை யோடிப்போயுள்ள இனப்பிரச்சி னைக்கு துரித முஸ்தீபு திட்டம் கிட் டும் என்று நம்பிய தமிழர்களுக்கு இன்று இந்த நல்லாட்சி ஒரு கண் துடைப்பு அரசியலை இந்நாட்டிற் கும் சர்வதேசத்துக்கும் தமிழர் பிரச்சினை தீர்ப்பதாக ஒரு மாய போக்கை கொண்டுள்ளது. தவிர தமிழ் மக்களையும் அதன் தலைமை களையும் ஏமாற்றுவதில் மிக காத்தி ரமாக, நயவஞ்சகமாக கபட நாடகத்தை அரங்கேற்றி வருகின்றது என்றால் மிகையில்லை என்றார். (2-250)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org



# சிறுவர் அரங்கம்

1149

…இதோ, நாம் உட்கார்ந்தி ருக்கிறோமே… இதற்கு "கிழக்குப் படித்துறை' என்று பெயர்.

குளத்துக்கான பிரதான நுழை வாயில் இதுதான்.

இங்கே ஆண்கள், பெண்கள் நீராட தனித்தனியே வசதிகள் இருந்தன.

இதோ, படித்துறையின் வாயி லில் இடிந்துகிடக்கிறதே விநாயகர் கோயில், இதற்கு "மாக்குள விநா யகர்' என்று பெயர்.

ஒருகாலத்தில் இந்தக் கோயி லில் மூன்று கால பூஜைகள் நடை பெற்றன" என்றார் தேவதை.

"ஓகோ..!" என்றான் கோகுல்.

"குளத்தைச் சுற்றிலும் ஆல், அரசு, அத்தி என ஓங்கி வளர்ந்த மரங்கள் இருக்கும்.

அதோ, வடக்குப் பக்கத் தில் ஒரு பொட்டல் காடு தெரிகிறதே… அது தான் அன்றைய களத்துமேடு.

அந்தக் களத்துமேட்டில் கதிரடிக் கும் சத்தம் ஓயாமல் கேட்கும்.

ஒருகாலத்தில் முப்போகம் விளைந்த மண்.

கதிர் அடிப்பவர்கள், கட்டு சுமப்ப வர்கள், வண்டியில் பாரம் ஏற்றிச் செல்பவர்கள் என்று கோழி கூவ ஆரம்பித்து, பொழுது சாயும் வரை என்னைச் சுற்றி மனிதர்கள் நடமாட்டம் இருந்து கொண்டே இருக்கும்" என்றபடி பெருமூச்சு விட்டார் தேவதை.

"உங்களின் வருத்தம் புரிகி றது.



# கிரிக்கெட் குளம்



நான் சின்ன வயதில் ஆசை ஆசையாக ஒரு பொம்மை வைத்திருந் தேன்.

அது உடைந்தபோது, மூன்று நாட்கள் சரியாகச் சாப்பிடவில்லை.

ஒரு பொம்மைக்கே இப்படி என்றால், உங்களு க்கு எவ்வளவு கஷ்டமாக இருக்கும்' என்றான்கோகுல்.

"இப்போதுகூட, மனிதர் கள் நினைத்தால் இங்கே குளத்தை உருவாக்கலாம்.

முட்புதர்களை அகற் றித் தூர் வாரினால் நீர் கிடைக்கும். ஆனால், யார் செய்வது? சரி, நேர மாகிவிட்டது. நீ கிளம்பு" என்ற தேவதை மறை ந்துவிட்டார்.

கோகுல் யோசனையுடன் நட ந்தான்.

நாட்கள் சென்றன.

பள்ளிகளுக்கு இடையேயான கிரிக்கெட் போட்டியில் இறுதிச் சுற்று க்கு வந்த கோகுலின் டீம், வெற்றி பெற்றது.

போட்டியின் சிறப்பு விருந்தின ராக மேயர் வந்திருந்தார்.

அவரை நெருங்கிய கோகுல், "சார், உங்களிடம் பேச வேண்டும்" என்றான். "என்ன விடயம் தம்பி?" என்று கேட்டார் மேயர். "எங்கள் பகுதியில் "மாக்குளம்' என்று ஒரு குளம் இருக்கிறது. அதைத் தூர் வாரி, சரி செய்ய வேண்டும்" என் றான் கோகுல். "அட… இந்தச் சின்ன வயதிலேயே சமூகம் பற்றிய பொறுப்புடன் பேசுகிறாயே! நிச்ச யம் நடவடிக்கை எடுக்கிறேன் தம்பி' என்றார் மேயர்.

அடுத்த சில மாதங்களில் 'மாக் குளம் தூர் வாரப்பட்டது.

மழைக் காலமும் தொடங்க, குளத்தில் தண்ணீர் நிரம்ப ஆரம் பித்தது. சைக்கிளில் அந்தப் பக்க மாக வந்தது கோகுல் டீம். "முன் னாடி, பக்கமா இருந்த இங்கே கிரிக்கெட் விளையாடிட்டு இருந் தோம்.

இப்போ, ரெண்டு கிலோமீற்றர் தாண்டி கிரவுண்டுக்குப் போக வெச்சிட்டியே கோகுல்" என்றான் பிரசாத்.

"கிரிக்கெட் எங்கே வேணும் னாலும் விளையாடலாம்டா.

ஆனா, குளத்தை நினைச்ச இடத்தில் உருவாக்க முடியாது இல்லையா?" என்றான் கோகுல்.

அவர்கள் மைதானத்தை நோக் கிச் சென்றார்கள். கோகுல் திரும் பிப் பார்த்தான். படித்துறையில் பொலிவுடன் நின்றிருந்த தேவதை, அவனைப் பார்த்து மகிழ்ச்சியுடன் கை அசைத்தது. (முற்றும்)



# இன்றைய நாளின் முன்னைய பதிவுகள்

05.2015 26

- 1538 - ஜோன் கால்வின் மற்றும் அவரது சீடர்கள் ஜெனீவா நகரில் இருந்து வெளியேற்றப்பட்ட னர். கால்வின் அடுத்த மூன்றாண்டுகள் பிரான்சின் ஸ்ட்ராஸ்பூர்க் நகரில் வாழ்ந்தார்.
- 1637 - பீக்குவாட் போர்: புரொட்டஸ்தாந்து, மொஹீ கன் படைகள் ஜேர்மன் தளபதி ஜோன் மேசன் தலைமையில் ஐக்கிய அமெரிக்கா வின் கனெடிகட்டில் பீக்குவாட் இனத்தவர் களின் ஊர் ஒன்றைத் தாக்கி ஐநூறுக்கும் மேற்பட்ட அமெரிக்கப் பழங்குடியினரைக் கொன்றனர்.
- 1879 - ஆப்கானிஸ்தான் அரசை உருவாக்க கண்ட மாக் உடன்பாட்டில் ரஷ்யாவும் ஐக்கிய இரா ச்சியமும் கைச்சாத்திட்டன.
- 1896 - ரஷ்யாவின் இரண்டாம் நிக்கலாஸ் ரஷ்யா வின் சார் மன்னனாக முடிசூடினான்.
- 1912 - இலங்கையில் இருந்து 7 பேரைக் கொண்ட முதலாவது தொகுதி சிறைக்கைதிகள் அந்த மான் தீவுக்கு அனுப்பப்பட்டனர்.
- 1918 - ஜோர்ஜியா மக்களாட்சிக் குடியரசு அமைக் கப்பட்டது.
- 1966 - பிரித்தானிய கயானா விடுதலை அடைந்து எனப் பெயர் மாற்றம் பெற்றது.
- 1969 - அப்பல்லோ 10 விண்கலம் மனிதனை சந்திர னுக்கு அனுப்பும் தனது அடுத்த திட்டத்திற்கு தேவையான சோதனைகளை வெற்றிகர மாக முடித்து விட்டு பூமி திரும்பியது.
- 1987 - யாழ்ப்பாணம்வடமராட்சியில் இலங்கை ஆயுதப் படையினரின் ஒப்பரேஷன் லிபரேஷன் இராணுவ நடவடிக்கை இடம்பெற்றது.
- 2002 - மார்ஸ் ஒடிசி விண்ணூர்தி செவ்வாய்க் கோளில் நீர் பனிப் படிவுகள் இருப்பதை அறிந்தது.

பிறப்புகள்

- 1799 - அலெக்சாண்டர் புஷ்கின், ரஷ்யக் கவிஞர் (இ. 1837)
- 1884 - மகா வைத்தியநாத ஐயர், கர்நாடக இசைக் கலைஞர்
- 1943 - மனோரமா தமிழ் நாடக, திரைப்பட நடிகை.

இறப்புகள்

- 1989 - கா. அப்பாத்துரை, தமிழறிஞர்

## மனோரமா (நடிகை)



மனோரமா 26 மே 1943 ஆம் ஆண்டு பிறந்தார். இவர் தென்னிந்தியத் திரைப்பட நடிகையாவார். நகைச்சுவைக் கதாபாத்திரங் களில் நடிக்கும் இவர் 1000 திரைப்படங்களு க்கு மேல் நடித்தவர்.

இவர் தமிழ்த் திரையுலகினராலும், தமிழ்த் திரைப்பட ரசிகர்களாலும் 'ஆச்சி' என அன்போடு அழைக்கப்படுகின்றார்.

இவர் தென்னிந்தியாவின் ஐந்து முதலமை ச்சர்களுடன் நடித்த பெருமை கொண்டவர். கா. ந. அண்ணாதுரை, மு. கருணாநிதி இருவரும் நாடக மேடைகளில் மனோரமாவுடன் நடித்திருக்கிறார்கள்.

தவிர ஜெயலலிதா மற்றும் ம. கோ.இராமச்சந்திரன் இவருடன் தமிழ்த் திரைப்படங்களில் நடித்திருக்கிறார்கள்.

மேலும் என். டி. ராமராவ் தெலுங்கு படங்களில் இவருடன் நடித்தி ருக்கிறார்.

இவரது இயற்பெயர் கோபி சாந்தா. இவரது பெற்றோர் காசி 'கிளாக்' உடையார் மற்றும் ராமாமிர்தம். மனோரமா தமிழ்நாடு மாநிலத்தில் தஞ்சாவூர் மாவட்டத்திலுள்ள மன்னார்குடியில் பிறந்தவர். இவரது சிறு வயதிலேயே வறுமையின் காரணமாக காரைக்குடி அருகே உள்ள பள்ளத்தூர் என்ற ஊருக்கு குடிபெயர்ந்தனர். இவர் 6 ஆம் வகுப்பு வரை படித்துள்ளார்.

பெற்ற விருதுகள்

1000 திரைப்படங்களுக்கு மேல் நடித்ததற்காக கின்னஸ் உலக சாதனைப் புத்தகத்தில் இடம்பெற்றுள்ளார். பத்ம ஸ்ரீ -2002 தேசிய திரைப்பட விருது - சிறந்த துணை நடிகை -புதிய பாதை - 1988 தமிழ்நாடு அரசின் கலைமாமணி விருது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சூப்பர் ஸ்டார் ரஜினிகாந்த் வாழ்க்கை வரலாறு

**8 பேருக்கு உதவ ரஜினி தயாரித்த 'அருணாச்சலம்' இலாபத்தை பங்கிட்டுக் கொடுத்தார்**

'யார் யாருக்கு எந்த சமயத்தில் உதவி செய்ய வேண்டுமோ. அதை சரியாக செய்பவர் ரஜினி' என்று பட அதிபர் கலைஞானம் கூறினார்.

பட உலகில், பாதிப்புக்கு உள்ளான 8 பேர்களுக்கு உதவுவதற்காக, அவர்களையே பட முதலாளிகள் ஆக்கி, 'அருணாச்சலம்'" என்ற படத்தை ரஜினிகாந்த் தயாரித்தார்.

அந்த 8 பேர்களில் ஒருவர் கலைஞானம். ஆரம்ப காலத்தில் வில்லன் வேடங்களில் நடித்து வந்த ரஜினியை, முதன் முதலாக 'பைரவி'" படத்தில் கதாநாயகனாக நடிக்க வைத்தவர்.

அவர் ஒரு பேட்டியில் கூறியதாவது:-

139



**சரியான நேரத்தில் உதவி**

'சூப்பர் ஸ்டார் ரஜினி பற்றி சொல்வதென்றால் அது மகா பாரதம் போல் வளர்ந்து கொண்டேபோகும். எனவே ஒரு சிறு துளியை மட்டும் சொல்ல விரும்புகிறேன்.

'ராஜரிஷி' என்ற படத்தை எடுத்து லட்சக் கணக்கில் நஷ்டப்பட்டுப் போயிருந்த எனக்கு தனது 'அருணாச்சலம்' படத்தின் மூலம் உதவினார். இந்தப்படம் மூலம் அவரிடம் உதவி பெற்ற எட்டுப் பேரில் நானும் ஒருவன்.

யார் யாருக்கு எந்த சமயத்தில் உதவி செய்ய வேண்டுமோ அதனை சரியாகச் செய்து வருகிறார். கோபமுள்ள இடத்தில் தான் குணமிருக்கும் என்பார்கள். அது முற்றிலும் உண்மை என்பதற்கு எடுத்துக்காட்டாக வாழ்ந்தவர் சின்னப்பதேவர். வாழ்ந்து கொண்டிருப்பவர் 'சூப்பர் ஸ்டார்' ரஜினிகாந்த்.

**இறைவன் கொடுத்த வரம்**

ஒருவரின் வளர்ச்சிக்கு யாரும் தடையாக இருக்க முடியாது. அதுமாதிரி ஒருவருக்கு யாரும் வாழ்வு கொடுத்து விடவும் முடியாது. நடக்கப்போகும் அனைத்துக்கும் இறைவனே காரணகர்த்தா. இதுவே என் நம்பிக்கை.

ஏன் இதைச் சொல்கிறேன் என்றால், என் மூலம் ரஜினிக்கு இறைவன் 'ஹீரோ' அந்தஸ்து கொடுத்தானே தவிர, அதற்குக் காரணம் நான் அல்ல. இதற்கு இறைவன் மூலம் நான் ஒரு கருவியாக பயன்படுத்தப்பட்டிருக்கிறேன். அவ்வளவுதான்.

'ஆறுபுஷ்பங்கள்' படத்தில் ரஜினி இரண்டாவது ஹீரோவாக நடித்துக் கொண்டிருந்தார். அந்தப் படத்துக்கு நான்தான் கதை வசனம். பழக நேர்ந்த சில நாட்களிலேயே நண்பர்கள் ஆனோம். எந்தவொரு விடயத்திலும் அவரது உயர்ந்த சிந்தனை என்னை அவர் பக்கம் அதிகமாய் ஈர்த்தது.

அவர் ஒரு நல்ல நடிகராக வருவார் என்று நினைத்தேன். உலகமே கொண்டாடும் சூப்பர் ஸ்டாராக வருவார் என்பதை நான் உள்பட யாருமே எதிர்பார்க்கவில்லை. அவரின் நல்ல மனதுதான் அப்படியொரு இடத்தில் அவரைக் கொண்டு வந்து நிறுத்தியிருக்கிறது.

என் 'பைரவி' கதைக்கு ரஜினி பொருத்தமாக இருந்தார். எனவே நாயகனாக்கினேன். படம் மட்டுமின்றி, ஹீரோவாக ரஜினியும் வென்றார். பைரவி படம் இன்றளவும் எனக்கு பேரும் புகழும் தந்து கொண்டிருக்கிறது.

**மகிழ்ச்சிக்கு காரணம்**

ரஜினி சூப்பர் ஸ்டாராக உயர்ந்த நேரத்தில் ஒருநாள் ஏவி.எம். ஸ்டூடியோவில் எதிரும் புதிருமாக சந்தித்துக்கொண்டோம்.

(தொடரும்)



# கருவாச்சி காவியம்

**வைரமுத்து-148**

...மொதலகம்பட்டியில அவ சித்தப்பன் மகன் பேத்தி ஒருத்தி இருக்கா. செந்துருக்கம் செந்துருக்கம்ன்னு பேரு அவளுக்கு. வயசுக்கு வந்துட்டாலும் இடுப்பெலும்பு முத்தாத எளம் பொண்ணு. ஆனா சும்மா சொல்லக்கூடாது. சூட்டிகையான பிள்ள, எம்பது ஆடுகள அவளாப் பத்தி அவளா மேச்சு அவளாத் தொழுவுல அடைக்கிறவ.

அந்த ஊர்லயே பெரும் படிப்பு படிச்சதும் அவதான். மூணாவது முடிச்சவ. அவ வேறொண்ணுமில்ல. பள்ளிக்கூடத்துல சேக்கலாமா வேணாமான்னு அவுக அப்பன் யோசிச்சுக்கிட்டே இருந்ததுல வயசு ஒம்போது ஆகிப்போச்சு பிள்ளைக்கு.

என்னொண்ணுக்கும் போயிட்டு வரட்டும்ன்னு ஒண்ணாவதுல சேத்தாக ஒம்போது வய்சுல. ரெண்ட முடிக்க வயசு பன்னெண்டு. மூணாவது முடிக்க வயசு பதினஞ்சு ஆகிப்போச்சு. முழுப்பரீட்சை லீவுல வயசுக்கு. வந்திருச்சு பிள்ள, தலைக்கும் பள்ளிக்கூடத்துக்கும் தண்ணி ஊத்தி முழுகிவிட்டுட்டாக.

இன்னைக்கி எழுத்துக் கூட்டிப் படிச்சதெல்லாம் மறந்துபோனாலும் கையெழுத்துப் போடறத மறக்கல பிள்ள. பொழைக்கத் தெரிஞ்ச பொண்ணாப் போனா.



ரெங்கசமுத்திரம் நாயக்கருக்குச் சாணி வித்துச் சாணி வித்தே சங்கிலி வாங்கிப்புட்டா. தோள்பட்டை சதை வைக்காமத் தொத்தலாக் கெடந்தாலும் காரியம் பாக்குறதுல வீரியமா இருந்தா செந்துருக்கம்.

அவுக வீட்ல சல்லிக்கட்டுக் காள வளத்தாக. சும்மா ஆயிரங்கால் மண்டபத்துல நாலு காலக் களவாண்டு வந்த மாதிரி காலு நாலு.

ஒரு திண்ணையத் தூக்கு முதுகுல வச்ச மாதிரி திமிலு. கருப்பண்ணசாமி கத்திகள வாங்கித் தலையில நட்டுவச்ச மாதிரி ரெண்டு கொம்பு.

அலங்காநல்லூர் சல்லிக்கட்ல அந்தக் கொம்புல சுத்திவிடுவாக தங்கச் சங்கிலிய; அணஞ்சவன் எடுத்துக்கன்னு. இது வரைக்கும் வாடிவாசல்லயிருந்து வாரபோதே கொம்புல கொடலச் சுத்தி வந்திருக்கே தவிர சங்கிலிய விட்டுட்டு வந்ததில்ல. அப்பேர்ப்பட்ட காளைய தன் இடுப்பு கயிறு கட்டி மேய்க்கிறவ இவ.

இப்பேர்ப்பட்டவ அழகு சிங்கத்துக்கு வாக்கப்பட்டுப் போறேன்னு வாக்கும் கொடுத்துட்டா. சொந்த பந்தத்த அனுசரிச்சு வீட்டாளுகளும் சரி சொல்லிட்டாக.

மொதலகம்பட்டிக்கு நடையா நடந்து வெள்ளிக்கிழம மாப்ள வீடு பாக்க வாங்கன்னு சொல்லிட்டு வந்துட்டா கருவாச்சி.

வியாழக்கிழமை ராத்திரி.

தட்டுலவிழுந்த கேப்பக்களியத் தலயப்பிச்சு, கடைஞ்ச மகிழிக் கீரையில முக்கி முழுங்கிக்கிட்டே மொனகுறான் அழகுசிங்கம்.

இன்னைக்கும் கீரையும் கேப்பக்களியும் தானா? சாணியத் தொட்டு மண்ணத் திங்கற மாதிரி இருக்கு. என்னைக்கு நல்லசோறு திங்கப் போறனோ?

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நீரிழிவு நோய் சிக்கலிலிருந்து விடுபட முடியும்

(சென்றவாரத்தொடர்ச்சி...)

நம் நாட்டில் சுமார் 50 சதவீத மக்களுக்கு நீரிழிவு நோய் இருக்கிறது என்பது மிகவும் அதிர்ச்சியான உண்மை. இந்த நோய் ஏன் வருகிறது? இதற்குப் பின்பற்ற வேண்டிய யோகாசனங்கள் என்ன என்று தெரிந்து கொள்ளலாம்.




இந்த நோய் வருவதற்கு முக்கிய காரணம். பாலீஷ் செய்யப்பட்ட அரிசிதான். இந்த அரிசியில் நார்ச்சத்து குறைவு. இதுவும் நீரிழிவு நோயை ஏற்படுத்துகிறது. மேலும் குறைவாகச் சாப்பிட்டாலே வயிறு நிரம்பிவிட்ட உணர்வை ஏற்படுத்திவிடுகிறது. இதனால் நமக்குத் தேவையான சத்து கிடைப்பதில்லை. அடுத்து நம்முடைய வாழ்க்கைமுறை. இதுவும் நீரிழிவு நோய் வருவதற்கு மிக முக்கிய காரணம் ஆகும். இதேபோல் தற்காலத்தில் பதற்றமான வாழ்க்கைதான் எல்லோருக்கும். பதற்றம் அதிகமாகும்போது அதை சகஜ நிலைக்குக் கொண்டுவர இன்சுலின் அதிகமாகச் சுரக்கிறது. இதனால் கணையத்தின் வேலை அதிகமாகி நாளடைவில் கணையம் தளர்ந்து விடுகிறது. இதனால் இன்சுலின் சுரப்பும் குறைந்து விடுகிறது. இதைத்தவிர சுற்றுச் சூழல் பாதிப்பும் நீரிழிவுநோய் வர ஒரு காரணமாகிறது.

**இன்றைய பரபரப்பான வாழ்க்கைச் சூழலில் பதற்றம் இருக்கத்தான் செய்யும். வேறு ஏதேனும் வழியுண்டா?**

உண்டே, நீரிழிவு நோயைக் கட்டுப்படுத்த யோகாசனம் கண்டிப்பாக இருக்கிறது. யோகாசனத்துக்கு உடல் நலத்தை மேம்படுத்தும் ஆற்றல் மட்டுமல்ல நோயை அண்டவிடாமல் தடுக்கும் ஆற்றலும் நோயை குணப்படுத்தும் ஆற்றலும் உண்டு.

**சக்கராசனம்**

அனைத்துச் சுரப்பிகளின் சுரக்கும் தன்மையும் நல்லிணக்கப்படுத்துகிறது. உடற்பருமனைக்குறைக்கிறது. ஆஸ்துமா மற்றும் நீரிழிவு நோயைக் குணப்படுத்த வல்லது.

**அர்தமத்சயேந்திராசனம்**

நீரிழிவு மற்றும் கழுத்து வலியைக் குணப்படுத்துவதற்குப் பயனுள்ள ஆசனம்.

மன அழுத்தத்தினால் ஏற்படும் நீரிழிவு நோயைக் கட்டுப்படுத்த உதவும் ஆசனங்கள் ஜானுசிராசனம், தனுராசனம், ஹாலாசனம், வக்ராசனம் போன்றவை. மனதை அமைதிப்படுத்தினாலே நீரிழிவு நோயிலிருந்து விடுபடலாம். அதற்கு சாந்தியாசனம், நாடி சுத்தி, மூச்சுப்பயிற்சி செய்தல் வேண்டும். 45 வயதுக்கு மேற்பட்டவர்கள் நீரிழிவு நோயினால் பாதிக்கப்பட்டால் கைகால் குடைச்சல், விறைப்புத்தன்மை, கால்கடுப்பு போன்றவை இருக்கும். அவர்களுக்கென்று சில ஆசனங்கள் இருக்கின்றன.

எதனால் நீரிழிவு நோய் வந்ததுஎன்று தெரிந்துகொண்டு அதற்கேற்ற யோகாசனங்களைச் செய்தல் வேண்டும். மேலும் யோகாசனம் பயில்பவர்கள் கண்டிப்பாக கவனிக்கவேண்டியவைகள் சில உண்டு. யோகாசனத்தைத் திறந்த வெளியில் வெறும் வயிற்றுடன் செய்ய வேண்டும்.

சோர்வாக இருக்கும் போதோ, கடுமையான உடற்பயிற்சிக்குப் பின்னரோ கடினமான வேலை செய்த பின்னரோ யோகா செய்வதைத் தவிர்க்க வேண்டும். அதிகமான சக்தியை உபயோகிக்காமல் சௌகரியமான முறையில் பயிற்சியை மேற்கொள்ள வேண்டும்.

மருத்துவசிகிச்சையைமேற்கொள்பவர், கர்ப்பிணிப்பெண்கள் யோகா நிபுணரின் ஆலோசனையின்படி செய்யவேண்டும். பொதுவாக, யோகாசனங்களைப் பயிற்சிபெற்ற யோகா நிபுணர் ஒருவர் துணையுடன் தான் செய்யவேண்டும்.

**யோகாவில் மருந்து வேண்டியதில்லை. ஆனால் சாப்பாட்டு முறையில் பத்தியம் உண்டா?**

பத்தியம் வேண்டியதில்லை. ஆனால்மிதஉணவுசரியான வேளையில் உட்கொள்ளவேண்டும். உணவுக்குப்பின் உடனே யோகா செய்யக்கூடாது.

தகுதியான பயிற்சி மையங்களில் கற்றுக்கொண்ட பின்னர்தான் காலை, மாலை இருவேளை யோகாப்பயிற்சி செய்யவேண்டும்.

## நீரிழிவு நோயினைக் குணமாக்கும் உடற்பயிற்சி மற்றும் யோகா

**நீரிழிவு நோயாளிகளின் ஆரோக்கியத்தில் உடற்பயிற்சி எந்தளவுக்கு முக்கியம்?**

நீரிழிவு நோயாளிகள் அவர்களுக்கேற்ப சரியான உடற்பயிற்சி செய்தால் இரத்தத்திலுள்ள சீனியின் அளவு கட்டுக்குள் வரும்.

- எடைகுறைந்து ஆரோக்கியம் திரும்பும்
- வகை-2 நோயாளிகளுக்கு உடலில் இருக்கும் இன்சுலின் இயங்கத் தொடங்கும்.
- இரத்த ஓட்டம் சீர்படும். இதய நோய்ஏற்படும்வாய்ப்புகள் குறையும்.
- கொழுப்பின் அளவும், இரத்த அழுத் தமும் குறையும்.

**உடற்பயிற்சி தொடங்குவதற்கு முன் கவனத்தில் கொள்ளவேண்டியவை**

ஒரே உடற்பயிற்சித் திட்டம் அனைவருக்கும் பொருந்தாது. நோயின் தன்மை, செய்யும் வேலை ஆகியவற்றின் அடிப்படையில்தான் உடற்பயிற்சித் திட்டம் அமையவேண்டும். அதற்கு மருத்துவரிடம் கலந்தாலோசிக்கவேண்டும்.

முதலில் ஐந்து முதல் பத்து நிமிடங்களுக்குப் பயிற்சி செய் யுங்கள். அடுத்தடுத்த தினங்களில் உடற் பயிற்சி நேரத்தை மெல்ல மெல்ல அதிகரியுங்கள்.

நீரிழிவு நோய்க்கால மாத்திரையோ இன்சுலினோ எடுத்துக் கொள்வீர்களானால் உடற்பயிற்சிக்கு முன்பும் பின்பும் இரத்த சீனியின் அளவு குறைவாக இருக்கிறதா என்று கவனியுங்கள். இருப்பின் ஏதாவது நொறுக்குத் தீனி சாப்பிட்டு அந்த அளவுக்கு உயர்த்துங்கள்.

**இரத்த சீனியின் அளவு கட்டுக்குள் கொண்டுவர எந்த உடற் பயிற்சி சிறந்தது?**

பெரும்பாலானோருக்கு நடைப்பயிற்சிதான் அருமையான உடற்பயிற்சி, காரணம். இது செலவே இல்லாத பயிற்சி. எப்போது வேண்டுமானாலும் எங்கு வேண்டுமானாலும் செய்யலாம். நடைப்பயிற்சியின் போது கால்களுக்கு மிதமான காலணிகளை அணியவும்.

**உடற்பயிற்சி செய்யும் போது பானங்கள் அருந்து வது நல்லதா?**

உடற்பயிற்சி செய்யும் போது ஜூஸ், காபி, தண்ணீர், தேநீர் அருந்துவது நல்லதுதான். கூறப்போனால் நீங்கள் உடற்பயிற்சி செய்யும் போது மட்டுமன்றி அதற்கு முன்பும் பின்னரும் கூடப் பருக வேண்டும். இது டி -ஹைட்ரேஷனைத் தவிர்க்கும்.

**உடற்பயிற்சியின் போது எடுத்துக் கொள்ள வேண்டிய முன்னெச்சரிக்கைகள் எவை?**

வெறும் வயிற்றில் உடற் பயிற்சி செய்யக்கூடாது. அப்படிச் செய்தால் சீனியின் அளவு மிகவும் குறைந்து விடலாம்.

உடற்பயிற்சி செய்யும் போது கைவசம் எப்போதும் இனிப்பு அல்லது சீனி வைத்துக் கொள்ளுங்கள்.

உடற்பயிற்சியைத் தினமும் ஒழுங்கான முறையில் தொடர்ச்சியாகச் செய்ய வேண்டும்.

இரத்தத்தில் சீனி அளவு 250 mg/dlஇற்கு மேல் இருந்தாலும் அல்லது சிறுநீர் பரிசோதனையில் சீனியின் அளவு அதிகமாக இருந்தாலும் உடற்பயிற்சி செய்யக் கூடாது.

உடற்பயிற்சியின் போது நெஞ்சடைப்போ, படபடப்போ, மயக்கமோ வந்தால் பயிற்சியை நிறுத்தி மருத்துவப் பாதுகாப்பைப் பெறுங்கள்.

நடைப்பயிற்சிக்கு அடுத்த படியாக சைக்கிள் ஓட்டுவது எளிய, அருமையான பயிற்சி. அது கால்களை வலுவாக்கும் தசைகளின் திறனையும் வளர்க்கும்.







**யோகாசனம்**

யோகா பயிற்சியின் மூலமும் இரத்தத்தில் உள்ள சீனியின் அளவைக் கட்டுப்படுத்தலாம். தன்னிச்சையாக செயற்படும் நரம்பு மண்டலங்கள் கணையத்தை இயக்குவதற்கும். இன்சுலினையும் குளுக்கானையும் வெளிப்படுத்துவதற்கு உதவுகின்றன. நாம் அதிகமாக உணர்ச்சி வசப்பட்டிருக்கும் போது குளுக்கான் அதிக அளவிலும் இன்சுலின் குறைந்த அளவிலும் சுரக்கின்றன. இதனால் இரத்தத்தில் உள்ளசீனி நிலைப்படுத்தப்படுகின்றது. ஆகவே தினமும் ஆசனங்கள், பிரணாயாமம், சுதர்சனக்கிரியாவை செய்வதன் மூலம் நரம்பு மண்டலங்களைக் கட்டுப்படுத்தி இரத்தத்தில் சீனியின் அளவைக் கட்டுப்பாட்டுக்குள் வைக் கலாம்.

3 ஆயிரம் ஆண்டுகளுக்கு முன் ஆரம்பிக்கப்பட்ட யோகாப் பயிற்சி இன்றும் பின்பற்றப்பட்டு வருகின்றது.

நீரிழிவு நோயாளி களுக்கு தேவையான குறிப்பிட்ட சிலயோகாப்பயிற்சிகளையும் இங்கே தெரிந்து கொள்ளலாம்.

(தொடரும்...)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வித்தியாவின் படுகொலை தொடர்பில் மக்களின் கொந்தளிப்பு நியாயமானது

(யாழ்ப்பாணம்)

புங்குடுதீவு மாணவி வித்தியாவின் கொலைச் சம்பவம் தொடர்பில் மக்களின் கோபமும் கொந்தளிப்பும் நியாயமானதே. பாடசாலை சிறுமியை பாலியல் கொடுமைக்கு உள்ளாக்கி கொலை செய்த நபர்களை மக்கள் தண்டிக்க துடிப்பதையும், ஆக்ரோஷப்படுவதையும் நாம் குறைகூற முடியாது என சமூக நீதிக்கான மக்கள் இயக்கத்தின் தலைவரும் கோட்டே நாக விகாரையின் விகாராதிபதியுமான மாதுலுவாவே சோபித தேரர் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

மக்கள் தமது கோபத்தை வெளிப்படுத்த சட்டத்தை கையில் எடுக்கவேண்டாம். சட்டம் தன் கடமையை சரியாகச் செய்கிறது.

மனிதாபிமானத்துக்கு எதிராக நடைபெறும் சம்பவங்களை எந்த வகையிலேனும் கட்டுப்படுத்த வேண்டும். பாலியல் கொடுமைகள், கொலைகளை தடுத்து மக்களின் பாதுகாப்பை பலப்படுத்தவேண்டியது அரசாங்கத்தின் கடமையாகும். அதேபோல் மக்கள் தமது மனச்சாட்சிக்கு அடிபணிந்து நடக்க வேண்டும். வடக்கு மாகாணத்தில் இடம்பெற்ற பாடசாலை மாணவி வித்தியாவின் பாலியல் வன்கொடுமை மற்றும் அவரை கொலை செய்தமை கண்டனத்துக்குரிய விடயமாகும். இந்த சம்பவத்துடன் தொடர்புடைய அனைத்து குற்றவாளிகளையும் உடனடியாக கைது செய்து சட்டத்தின் முன் நிறுத்த வேண்டும். இவ்வாறான நபர்கள் கட்டாயம் சட்டத்துக்கு அமைய தண்டிக்கப்பட வேண்டும். ஆனால் எந்தவொரு சந்தர்ப்பத்திலும் சட்டத்துக்கு முரணான வகையில் எந்த சம்பவங்களும் நடைபெறக்கூடாது.

மாணவி வித்தியாவின் கொலைச் சம்பவம் தொடர்பில் அம் மக்களின் கோபமும் கொந்தளிப்பும் நியாயமானதே. பாடசாலை சிறுமியை பாலியல் கொடுமைக்கு உள்ளாக்கி கொலை செய்த நபர்கள் மீது மக்கள் கோபப்படுவதையும் அவர்களை தண்டிக்கத் துடிப்பதையும் நாம் குறை கூற முடியாது. ஆனாலும் எல்லாவற்றையும் தாண்டி நாட்டில் சட்டம் என்ற ஒன்று உள்ளது. சட்டத்துக்கு முரணான வகையில் எவரும் செயற்படுவது சட்டத்தை மீறும் செயலாகி விடும். பின்னர் சட்டத்தை கடைப்பிடிக்க பலரை கைதுசெய்ய வேண்டிய நிலை ஏற்படும். அவ்வாறான ஒரு நிலைமை தான் இன்று வடக்கில் ஏற்பட்டுள்ளது. மக்கள் தமது கோபத்தை வெளிப்படுத்த ஆக்ரோஷமாக நடந்து கொள்வது சாதாரண பொது மக்கள் அனைவரினதும் செயற்பாடுகளை பாதித்துள்ளது. குற்றவாளிகளை தண்டிக்கும் பொறுப்பு பொலிஸாருக்கும் நீதிமன்றத்துக்கும் உள்ள நிலையில் மக்கள் குற்றவாளிகளை தண்டிக்க நினைப்பது ஏற்றுக்கொள்ள முடியாத தொன்றாகும்.

குற்றவாளிகள் என சந்தேகிக்கப்படும் நபர்கள் பொலிஸாரினால் கைதுசெய்யப்பட்டுள்ளனர். அவர்கள் மீது இப்போது விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இந்நிலையில் மக்கள் கொந்தளிப்பதும் தமது கைகளில் சட்டத்தை எடுத்து தண்டிக்க நினைப்பதும் சட்டத்திற்கு முரணானது. ஆகவே மக்கள் அமைதியாக இருந்தால் மட்டுமே உண்மையான குற்றவாளிகளை சரியாக இனங்கண்டு அவர்களை தண்டிக்க முடியும்.

அதேபோல் இந்த சம்பவத்தில் பொலிஸாரின் ஒத்துழைப்பு மிகவும் அவசியமானது. ஆகவே பொதுமக்கள் பொலிஸாருக்கு ஒத்துழைப்பு வழங்கி குற்றவாளிகளை தண்டிக்க உதவ வேண்டும். ஒருசில அரசியல் தலையீடுகள் இதன் பின்னணியில் இருப்பதாகக் கூறப்படுகின்றது.

ஆனால் அது உண்மையாக இருப்பின் மக்கள் அவற்றை இனங்கண்டு உண்மையின் பக்கம் நிற்கவேண்டும். அரசியல் எதிர்பார்ப்புகளில் பொதுமக்கள் சிக்கிக்கொண்டு வடக்கில் குழப்பங்களை ஏற்படுத்திவிடாது அமைதியாக செயற்படுங்கள் எனவும் அவர் மேலும் வலியுறுத்தியுள்ளார். (3-5)

## சந்தைகளில் நேற்றைய விலை விபரம்

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | சாவகச்சேரி | கிளிநொச்சி | மருதனார்மடம் |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 80 | 60 | 60 | 80 |
| உருளைக்கிழங்கு | 110 | 110 | 120 | 120 |
| பச்சைமிளகாய் | 50 | 50 | 40 | 50 |
| தக்காளி | 80 | 100 | 80 | 80 |
| மரவள்ளிக்கிழங்கு | 50 | 50 | 60 | 50 |
| கோவா | 100 | 70 | 100 | 120 |
| கரட் | 160 | 120 | 200 | 120 |
| பூசணி | 50 | 30 | 40 | 40 |
| புடோல் | 80 | 50 | 80 | 70 |
| வாழைக்காய் | 80 | 60 | 40 | 40 |
| சின்ன வெங்காயம் | 150 | 120 | 160 | 100 |
| பெரிய வெங்காயம் | 120 | 110 | 120 | 130 |
| பாகற்காய் | 120 | 120 | 120 | 100 |
| வெண்டிக்காய் | 140 | 50 | 80 | 120 |
| கருணைக் கிழங்கு | 80 | 80 | 120 | 80 |
| பயற்றங்காய் | 140 | 120 | 80 | 100 |
| லீக்ஸ் | 200 | 150 | 240 | 100 |
| பீற்றூட் | 80 | 80 | 100 | 40 |
| கறிமிளகாய் | 150 | 80 | 120 | 70 |
| முருங்கைக்காய் | 600 | 320 | 400 | 600 |
| போஞ்சி | 180 | 140 | 240 | 140 |
| கத்தரிதம்புள்ள | 60 | 40 | 40 | 60 |
| கீரை - 1 பிடி | 30 | 50 | 30 | 50 |
| தேசிக்காய் | 150 | 150 | 140 | 200 |
| தேங்காய் (ஒன்று) | 50 | 50 | 50-60 | 50 |
| இராசவள்ளி | 100 | 150 | 140 | 120 |
| வெங்காயப்பூ | – | – | – | – |
| முள்ளங்கி | 70 | 60 | 80 | 50 |
| பொன்னாங்காணி | 20 | 40 | 30 | 40 |
| வல்லாரை | 10 | 20 | 20 | 30 |

## facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 382

Search for people, places and things Nagendram Home

தர்மி தர்மினி




பாலமுருகன் ராஜி




துஸ்யந்தி தவராசா




பவி பவிதா




சங்கர் குமரன்




சுரேஸ் சுரேஸ்குமார்




நீங்கள் பார்த்த ஃபேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valam.puri.16 எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஊழலுக்கு ஒன்பது வாசல்!




"வருமானத்துக்கு மீறி சொத்து சேர்த்த வழக்கில்' ஜெயலலிதா விடுவிக்கப்பட்டு விட்டார். தீர்ப்பின் அடிப்படையையே அசைத்துப் பார்க்கும் கணக்குக் குளறுபடிகள் ஒரு பக்கம் இருக்க, தீர்ப்பின் மற்ற அம்சங்களும் ஆச்சர்யம் அளிக்கின்றன!

"எனது மிகப் பெரிய வெற்றிகள் இனிமேல்தான் இருக்கின்றன' - 1996 ஆம் ஆண்டு தேர்தலில் படுதோல்வி அடைந்த பிறகு, ஜெயலலிதா சொன்னது இது.

18 ஆண்டுகளுக்கும் மேல் நடந்த வழக்கில் நான்கு ஆண்டுகள் சிறைத் தண்டனையும், 100 கோடி ரூபாய் அபராதமும் பெற்ற ஜெயலலிதா, அதிலிருந்து முழுமையாக விடுபட்டதைப் பார்க்கும்போது, இது அவரது வாழ்வின் மிகப் பெரிய வெற்றிதான்! ஆனால், நேர்மைக்கு. நியாயத்துக்கு?

இன்றைய இந்தியச் சமூகத்தில் புரையோடிப் போயிருக்கிறது ஊழல் விவகாரம். அது தொடர்புடைய வழக்கின் தீர்ப்பை இந்தியாவே உன்னிப்பாகக் கவனித்தது. "தீர்ப்பின் சாராம்சம் எப்படி இருக்குமோ?' எனப் பலராலும் எதிர்ப்பார்க்கப்பட்டது. நிஜத்தில் என்ன நடந்தது?

### 10 சதவிகிதப் பாதை!

"ஊழல் என்பதை, அளவின்படி தீர்ப்பிடவே முடியாது. ஏனென்றால், ஊழல்தான் ஒழுங்கீனங்களின் தாய். இது, வளர்ச்சிக்கான சமூக நோக்கத்தை அழிக்கிறது. தகுதியற்ற ஆசைகளை விரைவுபடுத்துகிறது. மனசாட்சியைக் கொல்கிறது. நிறுவனங்களின் பெருமைகளைத் தூக்கி எறிகிறது. நாட்டின் பொருளாதார ஆரோக்கியத்தைச் செயலிழக்கச்செய்கிறது. மதிப்பு மரியாதையை அழிக்கிறது. ஆளும் தன்மையின் உள்ளீடுகளை அழிக்கிறது' என நிரஞ்சன் ஹிமாச்சல் சஷத்தல் வழக்கில், உச்ச நீதிமன்றம் (2003) தீர்ப்பளித்துள்ளது. ஆனால், 8.12 சதவிகிதம்தான் வருமானத்தைவிட அதிகமாக இருந்துள்ளது என்கிறது இந்தத் தீர்ப்பு.

1988 ஆம் ஆண்டு உருவாக்கப்பட்ட ஊழல் ஒழிப்புச் சட்டத்தில், இப்படி எதுவும் இல்லை. அரசு ஊழியர் ஒருவரின் வருமானம் என்ன? வருமானத்தைவிட கூடுதலாக எவ்வளவு வைத்திருந்தார்? இதைக் கணக்கிட்டு, கூடுதலாக வைத்திருந்தால் தண்டனை தர வேண்டும் என்கிறது இந்தச் சட்டம். இந்தத் தீர்ப்பு, "8.12 சதவிகிதம்தான் கூடுதலாக இருக்கிறது.

"10 சதவிகிதத்துக்குள் வருமானம் கூடுதலாக இருந்தால் தவறு இல்லை' என உச்ச நீதிமன்றம் ஒரு தீர்ப்பில் கூறியது. அந்த வழக்கு என்ன? கிருஷ்ணானந்த் அக்னிகோத்ரி என்பவர், 1949-62 ஆம் ஆண்டு காலகட்டத்தில் வருமான வரித்துறை அலுவலராக இருந்தவர். தனது வருமானத்தைவிட 1 லட்சத்து 27 ஆயிரம் ரூபாய் கூடுதலாகச் சம்பாதித்துவிட்டார் என்பது வழக்கு. கீழ் நீதிமன்றத்தில் அவருக்கு தண்டனை தரப்பட்டது. அதை உயர் நீதிமன்றமும் உறுதிப்படுத்தியது. அந்த வழக்கு, உச்ச நீதிமன்ற மேல்முறையீட்டுக்கு வந்தது. "13 ஆண்டு காலம் மத்திய அரசு அதிகாரியாக இருந்த அவர், 10 சதவிகிதத்துக்கும் குறைவாகத்தான் கூடுதல் வருமானம் வைத்திருந்தார்' எனச் சொல்லி விடுவித்தது உச்ச நீதிமன்றம். அதற்கு அவர்கள் சொன்ன காரணம்தான் முக்கியமானது. கணக்கு வழக்கில் மேல் கீழ் வித்தியாசம் இருப்பது இயல்பு என்பதால், 10 சதவிகிதக் கூடுதலைப் பெரிதுபடுத்தத் தேவை இல்லை என்ற அர்த்தத்தில் அந்தத் தீர்ப்பு எழுதப்பட்டது. 1 லட்சத்து 27 ஆயிரம் எங்கே... கோடிகள் எங்கே? இந்த 10 சதவிகித ஃபார்முலாவை உதாரணம் காட்டி, இனி பெட்டி கேஸ் முதல் வழிப்பறி வரை பயன்படுத்த ஆரம்பித்தால் என்ன ஆகும்? வருமானத்துக்கு அதிகமாக சொத்து சேர்த்ததாக, தி.மு.க முன்னாள் அமைச்சர்கள் மீது தமிழ்நாட்டு நீதிமன்றங்களில் வழக்குகள் நடந்து வருகின்றன. அவர்கள் எல்லோருமே இந்தச் சதவிகிதக் கணக்கில் தப்பிவிடலாமே?

### ஆந்திரா ஃபார்முலா!

"ஆந்திர மாநில அரசாங்கம் வெளியிட்ட சுற்றறிக்கை மூலம், பொது ஊழியரிடம் 10 முதல் 20 சதவிகிதம் வரை கணக்கில் வராத வருமானம் மற்றும் சொத்துக்கள் இருக்கலாம் என்பது நடைமுறைக்குக் கொண்டு வரப்பட்டுள்ளது' என்கிறது குமார சாமி தீர்ப்பு. இப்படி ஒரு சர்க்குலர், தமிழ்நாட் டில் இருக்க வேண்டும் அல்லது வழக்கு நடந்த கர்நாடகாவில் இருந்திருக்க வேண்டும் அல்லது மத்திய அரசின் சர்க்குலராக இருக்க வேண்டும். மூன்றுமே இல்லாமல், ஆந்திராவின் சர்க்குலர் ஒன்று இங்கு எப்படிப் பொருந்தும்? நாளை, வேறு ஓர் ஆட்சி இதைக் கூட்டலாம். அப்படிக் கூட்டினால் என்ன ஆகும்? இந்தியாவின் எந்த மாநிலத்திலும் இலஞ்ச ஒழிப்புத் துறையே தேவை இல்லையே! சர்க்குலர் வேறு. சட்டம் வேறு. சர்க்குலர், குமாஸ் தாக்களால் உருவாக்கப்படுவது. சட்டம், நாடாளுமன்றத்தால் நிறைவேற்றப்படுவது. சட்டங்களுக்கு முரணாக சர்க்குலர்களை உருவாக்கிவிட்டால், இனி எந்த வழக்குமே நிற்காதே!

### பரிசும் சிபாரிசும்!

பரிசுப் பொருட்கள் அனைத்தையும், அங்கீகரிக்கப்பட்ட வருமானமாக நீதிபதி குமாரசாமி ஏற்றுக் கொண்டுள்ளார். அதற்கு அவர் சொன்ன காரணம்... அதிரடி. "தங்களுடைய அபிமானத் தலைவர்களுக்கு இதுபோன்ற பரிசுப் பொருட்களை வழங்குவது, தமிழக அரசியல் கலாசாரத்தில் நடைமுறையில் உள்ள ஒன்றுதான். எனவே அதை அப்படியே நீதிமன்றம் ஏற்றுக்கொள்கிறது' என்கிறார். அப்படியானால், கலாசாரப் பழக்க வழக்கங்கள் எல்லாமே சட்ட அங்கீகாரம்பெற்றவையா? அரசு ஊழியரின் நடத்தை நெறிமுறைகள், பெரும்பாலும் இந்தப் பரிசுப் பொருட்களை வாங்குவதற்கு எதிராகவே பேசுகின்றன. வைர நெக்லெஸ் வாங்கிய ஐ.ஏ.எஸ் அதிகாரியும், கார் பரிசு பெற்ற ஐ.பி.எஸ் அதிகாரியும், இது அரசியல் கலாசாரம் எனச் சொல்லித் தப்பிக்க முடியுமா? எந்தக் கலாசாரத்தைப் பின்பற்றுவது, எது பின்பற்றத்தக்கது அல்ல என உணர வேண்டும் அல்லவா?

அரசு ஊழியர் ஒருவர், தனது பணிக் காலத்தில் பெறப்பட்ட பரிசுப் பொருட்களை அரசிடம் ஒப்படைக்க வேண்டும் என்பது விதி. அதை பொது ஊழியர்கள், தார்மீக விதியாக தங்களுக்குத் தாங்களே விதித்துக் கொள்கிறார்கள். அதை மதித்திருக்க வேண்டாமா?

### பெண் வீடு!

பரிசுப் பொருட்களுக்கு அரசியல் கலாசாரம் காரணம் காட்டப்பட்டது மாதிரி, வளர்ப்பு மகன் திருமணத்துக்குத் தமிழ்க் கலாசாரம் காரணம் காட்டப்படுகிறது. "தமிழ்க் கலாசாரத்தின்படி பெண் வீட்டார்தான் திருமணம் நடத்தி வைப்பார்கள். எனவே, சிவாஜி வீட்டார்தான் மொத்தச் செலவையும் செய்தவர்கள்' எனச் சொல்கிறார் குமாரசாமி. அரசுத் தரப்பும் எதிர்த்தரப்பும் என்ன ஆதாரங்கள், சாட்சியங்களை வைத்துள்ளார்கள் எனப் பார்க்காமல், தமிழ்க் கலாசார அளவு கோலைத் தேடினால், மாநிலத்துக்கு மாநிலம், மாவட்டத்துக்கு மாவட்டம் ஊழல் ஒழிப்புச் சட்டத்தை உருவாக்குவதை தவிர, வேறு வழி இல்லையா?

### கடன் என்பது வருவாய்!

ஒருவர் வீடு வாங்குகிறார். அதற்கான பணத்தை, கடனாகப் பெறுகிறார். அதாவது அவருக்குக் கடனாக பணம் வருகிறது. கடன் என்பது Liability. அதாவது, ஒருவர் மீது சுமத்தப்படும் பொறுப்பு. அதை வருமானமாகக் கொள்ள முடியாது. மாறாக, அந்தக் கடன் மூலம் தொடங்கப்படும் தொழில் வழியாக வரும் இலாபத்தை வருமானமாகக் கருதலாம். கடனாகப் பெற்ற பணத்தை, கொஞ்சம் கொஞ்சமாகத் திருப்பிச் செலுத்திவிடுகிறோம். எனவே, கடன் அடைக்கப்பட்டுவிட்டது என்றுதான் சொல்ல முடியும். இரண்டுமே வேறு வேறு அல்லவா?

### ஒருவர் "சும்மா' கடன் வாங்குகிறார்.

10 கோடி ரூபாய் கிடைக்கிறது. அதை "எப்படியோ' ஆறு மாதங்களில் கட்டியும் விடுகிறார். 10 கோடி ரூபாய் கடனாக வந்தது என்பதால், 10 கோடிக்கான வருமான வழியை கணக்கில் கொள்ள வேண்டுமா... கூடாதா? கலைஞர் டி.வி வாங்கிய கடனையும் இனி வருவாய்போலக் காட்டிவிடுவதை சுலபம் ஆக்கிவிடுமே இந்தத் தீர்ப்பு. குற்றச் சாட்டுகளிலிருந்து விடுபட அடிப்படையாக அமைந்ததும் இதுவே.

### வருமான வரித்துறை சம்மதம்!

"வருமான வரித் துறை ஏற்றுக்கொண்டு விட்டது... எனவே அனைத்துமே ஏற்கத்தக்கது' என்கிறது இந்தத் தீர்ப்பு. பொதுவாக, கிரிமினல் வழக்குகளில் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்படும் ஆதாரங்களின் அடிப்படையில் வழக்குகள் பதிவாகும் வருமானவரித் துறை அறிக்கைப்படி அல்ல. வந்த வருமானத்துக்கு வரி கட்டாமல் ஏமாற்று வதைத்தான் வருமான வரித்துறை பிடிக்கிறது. வருமானம் எப்படி வந்தது என்பதை ஆராய்வது இல்லை. சந்தேகத்துக்கிடமான வருமானம் என்றால், சம்பந்தப்பட்ட துறை நடவடிக்கைக்குப் பரிந்துரை செய்கிறார்கள். ஊழல் ஒழிப்புச் சட்டத்திலேயே, "அரசு ஊழியர்களுக்கான விதிமுறை 7 இன்படி அங்கீகரிக்கப்பட்ட அரசாங்கத்தின் ஏதாவது ஒரு துறை அந்த வருமானத்தை ஏற்றுக்கொண்டால், அதை வருமானமாகக் கணக்கில் எடுத்துக்கொள்ள வேண்டும்' என இருக்கிறது. அதை வைத்துத்தான் இந்தத் தீர்ப்பும் தரப்பட்டுள்ளது.

ஆனால், சமீபத்திய உதாரணம் மாறுப்பட்டதாக உள்ளது. தி.மு.க முன்னாள் அமைச்சர்கள் பொன்முடி, சுரேஷ்ராஜன் இருவரும் தங்கள் மீதும் தங்களது குடும்பத்தினர் மீதும் போடப்பட்ட வருமானத்துக்கு அதிகமாக சொத்து சேர்த்த வழக்கை எதிர்த்து சென்னை உயர் நீதிமன்றம் போனார்கள். தங்கள் உறவினர்கள் தனித் தனியாக வருமான வரி கட்டுபவர்கள்... அவர்களை வழக்கிலிருந்து விடுவிக்க வேண்டும் என்றார்கள். இதை சென்னை உயர் நீதிமன்றம் ஏற்றுக்கொண்டது. வழக்கு உச்ச நீதிமன்றம் போனது (06.01. 2014). இரண்டு வழக்குகளையும் ஒன்றாக விசாரித்தது உச்ச நீதிமன்றம். "வருமான வரி கட்டிவிட்டார்கள் என்பதை வைத்து முடிவுக்கு வந்தால், மோசமான சூழ்நிலை உருவாகும்' என உச்ச நீதிமன்ற நீதிபதிகள் சந்திர மௌலி, இக்பால் பெஞ்ச் கூறியிருக்கிறது.

### கூட்டுச்சதி!

"ஒரே வீட்டில் வசித்தார்கள் என்பதற்காக அவர்கள் நான்கு பேரும் கூட்டுச்சதியில் ஈடுபட்டார்கள் எனச் சொல்வது தவறு' என்கிறது இந்தத் தீர்ப்பு. "ஒவ்வொருவரும் தனித்தனியாகக் கடன் வாங்கியுள்ளனர், நிறுவனங்கள் நடத்தியுள்ளனர். வரவுசெலவு கணக்கு இருந்துள்ளது. வருமானவரி செலுத்தியுள்ளனர். ஒருவருக்காக மற்றவர்கள் சொத்துக்களை வாங்கிக் குவித்தார்கள் என்பது எந்த இடத்திலும் நிரூபிக்கப்படவில்லை' என எழுதியுள்ளார். ஊழல் வழக்கில் அரசு தரப்பு சாட்சி என்பதுபோல் எதிர்த்தரப்பு சாட்சியும் கருத்தில் கொள்ளப்படும். அந்த வகையில் கூட்டுச்சதி செய்ததற்கு எந்த ஆதாரமும் இல்லை. ஆனால் கூட்டுச்சதிகள், ஆதாரங்களை வைத்துக்கொண்டு செய்யப்படுபவை அல்ல!

### அரசியல் பழிவாங்கலா?!

மொத்த வழக்கையுமே அரசியல் பழிவாங்க லாக நீதிபதி குமாரசாமியின் தீர்ப்பு கணிக்கிறது. இது ஆபத்தான அனுமானம். கருணாநிதிக்கும் அன்பழகனுக்கும் நோக்கம் அரசியலாக இருக்கலாம். ஆனால், வழக்கு போடும் இடத்தில் அவர்கள்தானே இருந்தார்கள். இன்று தி.மு.க முன்னாள் அமைச்சர்கள் மீது அ.தி.மு.க ஆட்சியால் வழக்கு போடப்படுகிறது. இவை அனைத்தையுமே அரசியல் பழிவாங்கல் என ஒதுக்கிவிட முடியுமா? அப்படி ஒதுக்கிவிட்டால், யார் மீதும் எவரும் வழக்கு போட முடியாது. கருணாநிதி கால முறைகேடுகளை ஜெயலலிதா கட்சியும்,

ஜெ. ஆட்சி முறைகேடுகளை கருணாநிதி கட்சியும்தானே அம்பலப்படுத்த வேண்டும். அரசியல் நோக்கங்கள் இதில் இருந்தாலும் வேறு வழி இல்லை. அரசியல் உள்நோக்கம் என்பதை ஆரம்பத்திலேயே உச்ச நீதிமன்றம் நிராகரித்துவிட்டது. "ஒரு ஜனநாயகத்தில் அரசியல் எதிர்த்தரப்பினர், பேரவைக்கு உள்ளேயும் வெளியேயும் முக்கியப் பங்கு வகிக்கின்றனர். அவர்கள் ஆட்சிக்குள் இருந்தபடி அரசாங்கத்தைக் கண்காணிக்கும் காவலர்கள்' என (18.11.2003) உச்ச நீதிமன்றம் கூறிவிட்டது. எனவே, அரசியல் பழிவாங்கல் என்பதே நொண்டியான வாதம்தான்!

### தைரியம் தருகிறது!

அரபு எழுச்சி முதல் அண்ணா ஹசாரே எழுச்சி வரை ஊழலுக்கு எதிராக உலகமே ஒன்று திரண்டு நிற்கும் காலகட்டம் இது. ஆனால், ஜனநாயக முகமூடியுடன் கஜானாக்களைக் கபளீகரம் செய்ய, தேர்தலும் அதிகாரமும் துணை போய்க்கொண்டு இருக்கின்றன. பணத்தால் தேர்தலில் வெல்வது, வென்ற அதிகாரத்தால் பணம் சம்பாதிப்பது என்ற சுழற்சியே நாடாளுமன்ற ஜனநாயகமாக மாறிப்போன சூழ்நிலையை கண் முன் காண்கிறோம். ஊழலுக்கு எதிரான "டிரான்ஸ்பரன்சி இன்டர்நேஷனல்' என்ற அமைப்பு, உலகம் முழுக்க எடுத்த கணிப்பில் ஊழல் என்பது இயல்பாக மாறிக் கொண்டிருப்பதைக் கண்டுபிடித்துச் சொல்லி இருக்கிறது. அந்த இயல்பை நியாயப்படுத்தும் காரியங்களும் பச்சையாக நடக்கின்றன. லோக்பால், லோக் ஆயுக்தா போன்றவை "புலி வருது' பூச்சாண்டிகளாக மட்டுமே மாறிவிட்டன. எனவேதான் புலிக்குப் பயப்புடுபவர்களே, "புலி வருது' எனப் பயமுறுத்துகிறார்கள்.

"சட்டம் என்பது, மீறல்களுக்கான தண்டனைகள் மூலம் செயற்படுத்தப்படும் அரசு ஆணை' என்கிறார் சாணக்கியர். ஆனால், நிஜத்தில் அப்படியா இருக்கிறது?

-விகடன்-

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### இலங்கை சிங்கள தேசமல்ல என்ற கருத்துக்கு

# நீதி அமைச்சர் விஜயதாச மன்னிப்புக்கோர வேண்டும்

## அபயதிஸ்ஸ தேரர் வலியுறுத்து

(கொழும்பு)

**இலங்கை சிங்கள நாடல்ல என்ற தனது கருத்துக்கு நீதியமைச்சர் விஜயதாச ராஜபக்ஷ பகிரங்க மன்னிப்புக்கோர வேண்டும். அத்துடன் அவரது கருத்து சிங்கள சமூகத்தை மிகவும் இழிவுபடுத்தியுள்ளது என பெப்பலியான சுனேத்ராதேவி விஹாரையின் விஹாராதிபதி மெதகொட அபயதிஸ்ஸ தேரர் தெரிவித்துள்ளார்.**

இந்த நாடு சிங்களவர்களுடையது என எங்கு குறிப்பிடப்பட்டுள்ளது என அண்மையில் நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பொன்றில் நீதி அமைச்சர் விஜயதாச கேள்வி எழுப்பியிருந்தார்.

இந்தக் கூற்றுவன்மையாகக் கண்டிக்கப்பட வேண்டியது என அவர் தெரிவித்துள்ளார்.

விஜயதாச ராஜபக்ஷவின் இந்தக் கூற்றானது சிங்கள இன சமூகத்தை கடுமையாக இழிவுபடுத்தும் வகையிலானது. இந்தக்கருத்தை நான் முழுமையாக நிராகரிக்கின்றேன்.

இவ்வாறான கருத்துக்களை சமூகத்தில் வெளியிடுவதனால் பிரிவினைவாத சக்திகள் மேலும் வலுப்பெறும்.

இது சிங்கள தேசம் என்பதனை வலியுறுத்த விரும்புகின்றேன்.

இது குறித்து விளக்கமளிக்க எந்தவொரு அலைவரிசை ஊடாகவும் நீதி அமைச்சர் விஜயதாச ராஜபக்ஷவுடன் விவாதம் நடத்தத் தயார்.

இது சிங்களவர்களின் தேசமில்லை என கூறிய விஜயதாச ராஜபக்ஷ சிங்கள மக்களிடம் பகிரங்க மன்னிப்புக்கோர வேண்டுமென அபயதிஸ்ஸ தேரர் நேற்று முன்தினம் ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்துள்ளார். (3-5)

# உள்ளூராட்சி மன்றத் தேர்தல்கள் நாடு முழுவதிலும் ஒரே நாளில்

## அமைச்சர் கரு ஜயசூரிய

(கொழும்பு)

உள்ளூராட்சி மன்றத் தேர்தல்கள் நாடு முழுவதிலும் ஒரே நாளில் நடத்தப்படும் என பொது நிர்வாக அமைச்சர் கரு ஜயசூரிய தெரிவித்துள்ளார்.

தனித் தனியாக சில பிரிவுகளுக்கு மட்டும் உள்ளூராட்சி மன்றத் தேர்தல்களை நடத்தி தேர்தல் நிகழ்ச்சி நிரலை விகாரப்படுத்தப் போவதில்லை.

தொகுதிவாரி அடிப்படையிலேயே உள்ளூராட்சி மன்றத் தேர்தல் நடத்தப்படும்.

எதிர்வரும் காலங்களில் உள்ளூராட்சி மன்றங்களின் எதிர்க்கட்சித் தலைவர்களுக்கும் மக்களுக்கு சேவையாற்ற தேவையான நிதி ஒதுக்கீடுகளும் அதிகாரங்களும் வழங்கப்படும்.

வரி செலுத்தும் மக்களுக்கு நியாயமான சேவை வழங்கப்பட வேண்டுமென்ற காரணத்தினால் இவ்வாறு தீர்மானிக்கப்பட்டுள்ளது என அமைச்சர் கரு ஜயசூரிய மேலும் தெரிவித்துள்ளார்.

பத்தரமுல்ல பிரதேசத்தில் அண்மையில் நடைபெற்ற உள்ளூராட்சி



மன்றங்களுக்கு பெக்கோ இயந்திரங்கள் வழங்கும் நிகழ்வின் போதே அவர் இதனைத் தெரிவித்துள்ளார். (3-5)

# மிஹின் லங்கா விமானி விமானத்தில் நித்திரை

## எழுத்துமூல உறுதிமொழியும் மீறப்பட்டது

மிஹின் லங்கா பயணிகள் விமானத்தில் பணிபுரியும் இந்திய விமானி மீண்டும் ஒருமுறை தமது உறுதிமொழியை தகர்த்து விட்டதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

மிஹின் லங்கா விமானியான கப்டன் வாஹ், ஏற்கனவே இரண்டு தடவைகள் விமான ஓட்டத்தின் போது நித்திரை செய்த குற்றச்சாட்டுக்கு உள்ளாகியிருந்தார்.

இதன்பின்னர் அவர் மீது விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு எச்சரிக்கப்பட்டார்.

இந்தநிலையில் தாம் இனி மேல் விமானப் பயணங்களின் போது நித்திரை செய்ய மாட்டேன் என்று அவர் எழுத்துமூலம் உறுதியளித்திருந்தார்.

எனினும் பங்களாதேஷ் - கொழும்புக்கு இடையிலான சேவையின்போது அவர் மீண்டும் நித்திரை கொண்டதாக குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

கடந்த முதலாம் திகதியும் அவர், சார்ஜா- கொழும்பு சேவையின் போது தமது அறையை தாழிட்டு நித்திரை கொண்டதும் பின்னர் அவசர கதவின் ஊடாக சென்று அவரை ஏனைய விமானிகள் எழுப்பியதும் குறிப்பிடத்தக்கவையாகும். (3-5)

# ஜோன்ஸ்டனுக்கு பிணை இல்லை

முன்னாள் அமைச்சர் ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ மீண்டும் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

நேற்று திங்கட்கிழமை குருநாகல் நீதவான் நீதிமன்றில் ஆஜர் செய்யப்பட்ட அவர் எதிர்வரும் ஜூன் மாதம் 8 ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

மேலும் ஜோன்ஸ்டன் பெர்னாண்டோவிற்கு பிணை வழங்கக் கோரி தாக்கல் செய்யப்பட்டுள்ள மனு, விசாரணைக்காக மேல் நீதிமன்றுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

சதோச நிறுவனத்தில் பொருட்கள் கொள்வனவு செய்து அதற்கான பணத்தை செலுத்தத் தவறிய குற்றச்சாட்டில் ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ கைது செய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (3-5)

# இன்று ஒரு தகவல்

## மனிதனும் மிருகமும்

ஒரு பெரிய காடு.

அங்கே ஒரு சிங்கம் இருந்தது.

ஒருநாள் காலை நேரம் அதற்கு பசியெடுக்க ஆரம்பித்தது. உடனே குகையை விட்டு வெளியே வந்தது. ஏதாவது இரை கிடைக்குமா என்று அங்கும் இங்கும் பார்த்துக் கொண்டே வந்தது.

அங்கே ஓர் அழகான மான். அப்பொழுதுதான் ஆற்றில் குளித்து விட்டு வந்து கொண்டிருந்தது. பார்ப்பதற்கு நல்ல கொழுகொழுவென்று இருந்தது.

"ஆகா... அருமையான சந்தர்ப்பம். அதை அடித்து சாப்பிட்டு விடலாம் என்று நினைத்து சிங்கம் மெதுவாக அந்தப் பக்கமாகச் சென்றது. அந்தச் சமயம் பார்த்து நரியொன்று அந்தப் பக்கமாக வந்தது. அதற்கும் அந்த மானைச் சாப்பிட வேண்டும்" என்று ஆசை.

ஆனால் சிங்கம் அதைச் சாப்பிட்டு விட்டால் அதற்கு எங்கே கிடைக்கப் போகிறது.

நரி தந்திரமாக யோசித்தது.

மெதுவாக அந்தச் சிங்கத்திடம் போய்,

"சிங்கராஜா! ஒரு விடயம்! சொன்னா நீங்க தப்பா நினைக்கக் கூடாது" என்றது. "என்ன சொல்கிறாய்?"

"அது வந்து...ஒன்றுமில்லை... குளித்துவிட்டு வரும் மானை அடித்துச் சாப்பிட்டால் பதவிக்கு ஆபத்து என்று சாஸ்திரம் சொல்கிறது" என்றது.

"அப்படியா?" சிங்கம் பயப்பட ஆரம்பித்தது.

"நல்லவேளை! சரியான நேரத்தில் வந்து என்னிடம் சொன்னாய்! வா என்னுடன்... இரண்டு பேரும் பேசிக்கொண்டே போகலாம்" என்றது.

நரிக்கு மறுபடியும் சிக்கல்.

மெதுவாக இந்தச் சிங்கம் வேறு இரை தேடிப் போய்விடும். நாம் இந்த மானைப் பிடித்துக் கொள்ளலாம் என்பது நரியின் திட்டம்.

இதற்கிடையில் மானும் தப்பித்துப் போய்விட்டது.

இரண்டு பேரும் நடந்து போய்க் கொண்டிருந்தார்கள். நரிக்கு பசி வயிற்றைக் கிள்ளியது.

உடனடியாக எதையாவது சாப்பிட்டாக வேண்டும்.

என்ன செய்வது?

மறுபடியும் ஒரு யோசனை கூறியது.

"சிங்கராஜா! குளித்துவிட்டு வரும் மானை கொன்றால் பதவிக்கு ஆபத்தென்பது உண்மைதான். ஆனால் அதற்கும் ஒரு பரிகாரம் உண்டு. அதுவும் சாஸ்திரத்தில் இருக்கிறது" என்றது.

என்ன பரிகாரம்?"

"நீங்கள் நடந்துபோகும் எதிரில் வரும் முதல் ஐந்து மிருகங்களைக் கொன்றுவிட வேண்டும்" ஆனால் சாப்பிடக்கூடாது. நாள் முழுக்க விரதமிருக்க வேண்டும்.

இவையிரண்டும் இப்படிப் பேசிக் கொண்டிருக்கும் போது பக்கத்தில் புதரில் மறைந்திருந்த ஒரு முயலின் காதில் விழுந்தது.

ஆபத்தென்று உணர்ந்த முயல் உடனே ஓடிப்போய் எல்லா மிருகங்களிடமும் இந்தத் தகவலைக் கூறியது.

எல்லா மிருகங்களிடமும் இந்தத் தகவலைக் கூறியது.

எல்லா மிருகங்களும் முன்னெச்சரிக்கையுடன் அவை இருக்கும் இடத்தைவிட்டு வெளியே வரவேயில்லை. சிங்கமும் நரியும் அலைந்து திரிந்தன. சாப்பிடுவதற்கு ஒரு மிருகம்கூட கிடைக்கவில்லை. அந்தக் காட்டில் ஒரு பெரிய யானை இருந்தது.

அதனிடம் ஓடிப்போய் முயல் நிலைமையைச் சொன்னது.

எல்லாம் இந்த நரி பண்ணும் வேலைதான் என்பதைப் புரிந்து கொண்டது.

இரு...இரு உனக்கு ஒரு வழி பண்ணுகிறேன் என்று மனதுக்குள் கறுவிக் கொண்டே அந்தச் சிங்கத்திடம் சென்றது.

சிங்கத்தைத் தனியாக அழைத்தது.

"ஒரு நரியைக் கொன்டால் ஐந்து மிருகங்களைக் கொல்வதற்குச் சமம்" என்றது.

"நல்ல நேரத்தில் நல்ல யோசனை சொன்னீர்கள்" என்று கூறிய சிங்கம் நரியின் பக்கம் திரும்ப ஆரம்பித்ததாம்.

அதன்பின் அங்கு என்ன நடந்திருக்கும் என்று சொல்ல வேண்டியதில்லை.

இது குழந்தைகளுக்காகச் சொல்லப்படும் கதை.

''கெடுவான் கேடு நினைப்பான்'' என்று நீதி விளக்கமும் கொடுப்பார்கள்.

இன்றைக்கு மனிதர்களிலும் இதுபோல் சிங்கம், நரி, யானை, முயல் எல்லோரையும் பார்த்துக் கொண்டுதான் இருக்கிறோம்.

காட்டில் ஒரு புலி வந்தால் இது புலி என்று தெரியும். ஒரு நரி வந்தால் பார்த்தவுடனே இது நரி என்று தெரியும். ஒரு கரடி வந்தால் அதன் தோற்றத்தைப் பார்த்தே வருவது கரடி என்று நாம் தெரிந்து கொள்ளலாம். உடனே நம்மைக் காப்பாற்றிக் கொள்ளலாம்.

ஆனால் நாட்டுக்குள் வந்துவிட்டால் எதிரே வருவதில் எது புலி, எது நரி, எது கரடி என்று புரிந்துகொள்ள முடியாது.

ஒரு வீட்டில் அம்மாவும் அப்பாவும் பேசிக் கொள்வதை பிள்ளை கவனித்துக் கொண்டிருந்தான். அப்பா சத்தம் போடுகிறார்.

"எவ்வளவு நேரமாக இங்கே உட்கார்ந்து கொண்டு கரடிபோல் கத்திக் கொண்டிருக்கிறேன். உனக்கு கொஞ்சமாவது புரிகிறதா?"

உள்ளேயிருந்து அம்மா, "எனக்குக் கரடியின் பாஷையெல்லாம் புரியாதுங்க!"

**தென்கச்சி கோ சுவாமிநாதன்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இனப்படுகொலை;

## உலகம் ஏற்கத் தயங்குவது ஏன்?

**போ**ர்க் குற்றங்கள், மனித குலத்திற்கு எதிரான குற்றங்கள், இனப்படுகொலை ஆகிய மூன்றும் பன்னாட்டுக் குற்றங்கள் என அழைக்கப்படுகின்றன. இவற்றில் ஈழச் சிக்கலைப் பொறுத்த அளவில் போர்க் குற்றங்கள் மற்றும் மனித குலத்திற்கு எதிரான குற்றங்கள் ஆகியவை பற்றி மட்டுமே பேசப்படுகிறது.

நாம் இனப்படுகொலை என்ற சொல்லை மீண்டும் மீண்டும் பயன்படுத்துகிறோம். ஆனால் ஐ. நாவோ உலக நாடுகளோ பன்னாட்டு ஊடகங்களோ இதுவரை இலங்கையில் நடந்தது இனப்படுகொலை - Genocide என்று சொல்லவே இல்லை. போர்க் குற்றங்களும் மனித குலத்திற்கு எதிரான குற்றங்களும் இலங்கையில் நடந்துள்ளது என்பதை வெளிப்படையாக ஒப்புக்கொள்ளும் உலக சமூகம் இனப் படுகொலை என்ற சொல்லை மட்டும் பயன்படுத்த இந்த அளவுக்கு தயங்குவது ஏன் என்பதை விளக்குவதே என் உரையின் நோக்கம்.

இதைப் புரிந்துகொள்வதற்கு நாம் போர்க் குற்றங்களுக்கும் இனப் படுகொலைக்கும் உள்ள வேறுபாட்டினைப் புரிந்துகொள்ள வேண்டும். அதனை புரிந்துகொள்ள, இனப்படுகொலை என்ற கருத்தாக்கத்தின் வரலாறை நாம்அறிய வேண்டும்.

உலக அளவில், இனப் படுகொலை என்றாலே நினைவுக்கு வருவது யூத இனப் படுகொலை தான். ஆனால்ஹோலோ காஸ்ட் எனப்படும் யூத இனப்படுகொலை நடந்த போது அது இனப்படு கொலை என்று சொல்லப்படவில்லை. அப்போது இனப்படுகொலை- Genocide என்ற சொல்லே கிடையாது. போலந்தைச் சேர்ந்த யூத வழக்கறிஞர் ரஃபெல் லெம்கின் தான் அச்சொல்லை முதன் முதலில் உருவாக்குகிறார்.

யூதப் படுகொலை நடந்த போது அவை மனித இனத்திற்கு எதிரான குற்றங்கள் மற்றும் போர்க் குற்றங்கள் என்ற அடிப்படையிலேயே அவை விசாரிக்கப்பட்டன. அதிலும் போர்க் காலத்தில் நடந்தவை மட்டுமே விசாரணைக்கு உட்படுத்தப்பட்டன.

ஏனெனில் போர்க் குற்றங்கள் மற்றும் மனித இனத்திற்கு எதிரான குற்றங்கள் குறித்த சட்டங்கள் இரண்டும் போர்க் காலத்தில் நடந்து கொள்ள வேண்டிய முறை குறித்தவை. அவை போர் இல்லாத காலங்களில் நடக்கும் இம்மாதிரியான குற்றங்கள் குறித்து எதுவும் பேசவில்லை.

ஆனால் யூதப் படுகொலை பெரும்பாலும் இரண்டாம் உலகப் போர் தொடங்குவதற்கு முன்பே நடந்து முடிந்தது. அவை போர்க் காலத்தில் நடைபெறவில்லை என்ற ஒரே காரணத்திற்காக அனைத்தும் கேள்வியற்றுப் போய்விட்டன.

**சென்னையில் கடந்த வாரம் அறிவாயுதம் - தமிழ் தேசிய ஆய்விதழ் நடத்திய 'தொடரும்... இனப்படுகொலை!' ஈழத் தமிழருக்கான நிரந்திர அரசியல் தீர்வை நோக்கிய கருத்தரங்கம் சிறப்புடன் நடைபெற்றது. இவ் கருத்தரங்கில் நெடுமாறன் பூங்குழலி அவர்கள் "இனப்படுகொலை உலகம் ஏற்க தயங்குவதேன்?" என்ற தலைப்பில் உரையாற்றியிருந்தார். அதிலிருந்து...**

தன் இனத்திற்கு இழைக்கப்பட்ட அநீதி உலகில் மீண்டும் நடந்து விடக் கூடாது என்ற பொறுப்புணரவோடு, யூத வழக் கறிஞரான லெம்கின், போர் இல்லாத காலங்களில்நடைபெறும் மனித அழிப்புக்கென உருவாக்கிய சொல்லே இனப் படுகொலை - Genocide. அவரது முயற்சியிலேயே இனப்படுகொலை குற்றத்தைத் தடுப்பதற்கும் தண்டிப்பதற்குமான பிரகடனம் உருவாக்கப்ட்டுவெளியிடப்பட்டது. அப் பிரகடனம் Convention on the Prevention and Punishment of the Crime of Genocide என்று அழைக்கப்படுகிறது. அதாவது இனப்படுகொலைக் குற்றத்தை தடுப்பதற்கும் தண்டிப்பதற்குமான பிரகடனம்.

ஈழச் சிக்கலைப் பொறுத்தளவில் உலகம் 2009 இல் உறைந்து நிற்கிறது. அதற்கு முன்பு நடந்தவையும் பேசப்படுவதில்லை. அதற்குப் பின் இன்றுவரை நடப்பவையும்



பேசப்படவில்லை. 2009 இல் போர் நடந்த காலத்தில் நடந்த குற்றங்கள், அதாவது, போர்க் குற்றங்கள் குறித்து மட்டுமே பேசப்படு கிறது. அதற்கும் முன்பு தொடங்கி அதற்கு பின்பும் இன்று வரையிலும் தொடரும் இனப் படு கொலை குறித்து உலகம் பாராமுகமாக உள்ளது. இதற்கு பல காரணங்கள் உள்ளன.

உலக நாடுகளைப் பொறுத்த அளவில் இனப்படுகொலை என்பது மிகவும் கவனமாக கையாளப்பட வேண்டிய சொல். அதனை உறுதிப்படுத்த அதற்கு முன் பல படிகள் உள்ளன. அவற்றைச் செய்யாமல் நேரடியாக இனப்படுகொலை என்று சொல்லிவிட முடியாது. உலக நாடுகள் இனப்படுகொலை என்ற சொல்லை பயன்படுத்த பெரிதும் தயக்கம் காட்டுவதற்கு பல காரணங்கள் உள்ளன.

இனப் படுகொலைகள், போர்க் குற்றங்கள், இன அழிப்புகள் மற்றும் மனிதத்திற்கு எதிரான குற்றங்கள் ஆகியவற்றை தவிர்க்க வும் தடுக்கவும், எழுந்துள்ள முழக்கமான "பாதுகாப்பதற்கான பொறுப்பு" (Responsibility to protect) என்பது இன்றைய முக்கிய தேவையாக உருவாகியுள்ளது. 2005 இல் நடந்த ஐ. நாவின் உலக மாநாட்டில் உலக நாடுகள் "பாதுகாப்பதற்கான பொறுப்பு" என்ற அடிப்படையில் அரசுகளுக்கு சில கடப்பாடுகளை அளித்தன.

"பாதுகாப்பதற்கான பொறுப்பு" குறித்து விளக்கும் போது பேரா. கரெத் இவான்ஸ் சொல்வது போல, "இறையாண்மை என்பது கொல்வதற்கான அனுமதிச் சீட்டாக உள்ளது". இலங்கை கூட, ஈழச் சிக்கலைப் பொறுத்தவரை "இது எங்கள் உள்நாட்டுப் பிரச்சினை. எங்கள் இறையாண்மையைக் காக்க நாங்கள் எடுத்த நடவடிக்கை. இதில் தலையிட உலக நாடுகளுக்கோ ஐ. நாவுக்கோ உரிமை இல்லை" என்பதையே மீண்டும் மீண்டும் சொல்கிறது. ஆக, இறையாண்மை என்பதை அரசுகள் கேடயமாக பயன்படுத்தி படுகொலைகளை செய்கின்றனர். இதனை உடைத்து, இறையாண்மை என்ற பெயரால் அரசே தலைமையேற்று நடத்தும் படுகொலைகள், நீதிக்கு முன் நிறுத்தப்பட வேண்டும் என்பதே "பாதுகாப்பதற்கான பொறுப்பு" என்ற இந்த கோட்பாட்டின் அடிப்படையாகும்.

ஆக, உலக நாடுகள் ஒவ்வொன்றிற்கும் உலகின் எந்தப் பகுதியிலும் இனப்படுகொலை இடம்பெறாமல் தடுக்கும் கடமையும் பொறுப்பும் உள்ளதை இனப்படுகொலை பிரகடனமும் பாதுகாப்பதற்கான பொறுப்பு கோட்பாடும் உறுதிப்படுத்துகின்றன. எனவே, இலங்கையில் நடந்தது இனப்படுகொலை என்பதை ஏற்றுக்கொண்டால், உலகி உள்ள ஒவ்வொரு நாடும் அதற்கு பதில் சொல்லியாக வேண்டும். குறிப்பாக ஐக்கிய நாடுகள் அவையின் பாதுகாப்புக் குழுவில் அங்கம் வகிக்கும் நாடுகள், நடந்துவிட்ட இனப் படுகொலையை ஏன் தடுக்க முடியாமல் போனது என்பதற்கு விளக்கம் அளித்தாக வேண்டும்.

இனப்படுகொலை குற்றம் மீதான விசாரணை நடைபெறும் போது இந்நாடுகளும் விசாரணைக்கு உட்படுத்தப்படும். இதனாலேயே உலக நாடுகள் இனப்படுகொலை என்ற சொல்லை உச்சரிக்கவே அஞ்சுகின்றன.

(தொடரும்)





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஐ.எஸ்.ஐ.எஸ். தீவிரவாதிகள் வெறியாட்டம் நாநூறு பேர் கொன்று குவிக்கப்பட்டனர்

(டமாஸ்கஸ்)

**சிரியாவிலுள்ள பல்மைரா நகரை கைப் பற்றிய ஐ.எஸ்.ஐ.எஸ் தீவிரவாதிகள் அங் குள்ள பெண்கள் மற்றும் குழந்தைகள் உட் பட 400 பேரை கொன்று குவித்துள்ளதாக அதிர்ச்சி தகவல்கள் வெளியாகியுள்ளன.**



ஐ.எஸ்.ஐ.எஸ்.தீவிரவாதிகள் சில தினங்களுக்கு முன்னர், சிரி யாவில் உள்ள பல்மைரா நகரை கைப்பற்றி தனது கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வந்தனர்.

இந்நிலையில், நேற்றுமுன் தினம் பல்மைராவை மீட்கும் நடவடிக்கையில் ஈராக் இராணுவம் ஐ.எஸ்.ஐ.எஸ் தீவிரவாதிகள் மீது தாக்கு தலை தொடர்ந்தன.

நேற்றையதினம் சிரியா நாட்டு தொலைக்காட்சி வெளியிட்டுள்ள செ.திியில், பல்மைராவை சேர்ந்த பெண்கள், குழந்தைகள் உட்பட 400 பேரை கொன்று குவித்துள் ளதாக அதிர்ச்சி தகவலை வெளி யிட்டுள்ளது.

பல்மைரா நகர வீதிகளில் நூற் றுக்கணக்கான சடலங்கள் அநா தைகளாக கிடப்பதாக ஐ.எஸ். ஐ.எஸ் தீவிரவாத இயக்கத்திற்கு எதி ராக செயற்பட்டு வரும் அமைப்பினர் சமூக வலைத்தளத்தில் தகவல் வெளியிட்டுள்ளனர்.

சர்வதேச மனிதவுரிமைகள் ஆணையம், கடந்த வியாழக்கிழமை வெளியிட்ட செய்தியில், பல்மை ராவை ஐ.எஸ்.ஐ.எஸ் தீவிரவாதிகள் கைப்பற்றிய பின்னர், அந்நகரை விட்டு சுமார் 60 ஆயிரத்திற்கும் மேற்பட்ட மக்கள் புலம்பெயர்ந்துள்ள தாக தெரிவித்திருந்தது குறிப்பி டத்தக்கது. (3-5)

## புருண்டியில் எதிர்க்கட்சி தலைவர் சுட்டுக்கொலை



புருண்டியில் சிறிய எதிர்க்கட்சி ஒன்றின் தலைவர் சனிக்கிழமை சுட்டுக்கொல்லப்பட்ட சம்பவத்தைத் தொடர்ந்து அரசாங்கத்துடனான பேச்சுவார்த்தைகளை இடைநிறுத் திக் கொண்டுள்ளதாக செயற்பாட் டாளர்கள் கூறுகின்றனர். ஸெடி ஃ பெருஸியின் உடல் தலைநகர் புஜும் புராவில் உள்ள அவரது வீட்டுக்கு வெளியிலிருந்து மீட்கப்பட்டுள்ளது.

மூன்றாவது தவணையும் ஆட்சி யிலிருக்கும் நோக்குடன் தேர்தலில் போட்டியிடவுள்ள ஜனாதிபதி பியர் குருண்ஸிஸாவுக்கு எதிரான பிரசா ரங்களை ஸெடி ஃபெருஸி முன்னெ டுத்திருந்தார்.

புருண்டியின் பிரச்சினைகள் தொடர்பில் அரசாங்கத்துக்கும் அரசியல்கட்சிகளுக்கும் சிவில் அமைப்புகளுக்கும் இடையே ஐ.நா வும் ஆபிரிக்க யூனியனும் பேச்சு வார்த்தைகளை ஏற்பாடு செய்து வருவதாக கருதப்படுகின்றது.

ஜனாதிபதி குருண்ஸிஸாவின் முடிவுக்கு எதிராக பலவாரங்களாக நடந்த போராட்டங்களைத் தொடர் ந்து, அவருக்கு எதிரான ஆட்சிக் கவிழ்ப்பு முயற்சி ஒன்றும் தோல்வி யில் முடிந்தது.

புருண்டியிலிருந்து ஒரு இலட்சத் துக்கும் அதிகமான மக்கள் வெளி யேறியுள்ளமை குறிப்பிடத்தக் கது. (3-5)

## நேபாளத்தில் நிலச்சரிவு

நேபாளத்தின் வட-மேற்கு மலைப் பகுதியில் ஏற்பட்ட மிகப்பெரிய நிலச்சரிவினால் நதியின் போக்கு தடைபட அதன் நீர்மட்டம் விறு விறு வென அதிகரித்து வருகிறது. இத னையடுத்து மியாகுடி மாவட்ட கிராமம் ஒன்றில் பதற்றம் ஏற்பட ஆயி ரக்கணக்கானோர் தங்களது வீடு களை விட்டு வெளியேறியுள்ளனர்.

நேற்று முன்தினம் நள்ளிரவு ஏற்பட்ட இந்த மிகப்பெரிய நிலச்சரிவு நிறைய சேறு, சகதிகளையும் பெரும் பாறைகளையும் காலிகந்தகி நதியில் கொண்டு வந்து கொட்டி அதன் போக்கை மறித்துள்ளது. இதனால் பெரு வெள்ள அபாயம் ஏற்பட்டுள்ளது.

இதனால் அந்த நதியின் நீர் மட்டம் 150 மீற்றர் அதிகரித்துள்ள தாக உள்ளூர் அரசு அதிகாரி யாம் பகதூர் சோகல் தெரிவித்துள்ளார். நாங்கள் 100 பேரை மீட்டுள் ளோம். ஆனால் மற்ற கிராமங் களிலிருந்து ஆயிரக்கணக்கானோர் தாங்களா கவே வெளியேறி விட்டனர் என்றார்.

மற்றொரு அதிகாரியான திரி விக்ரம் சர்மா கூறும் போது,

2 மிகப் பெரிய நிலநடுக்காங் களுக்குப் பிறகே நிறைய நிலச்சரி வுகள் ஏற்படுவதாக கிராம மக்கள் தெரிவித்தனர். ஆனால் நேற்று முன் தினம் இரவு பெரிய மலை ஒன்று உருண்டு வந்தது என்று அவர்கள் தெரிவித்தனர் என்றார். (3-5)

## கணிதமேதை ஜோன்நாஷ் கார் விபத்தில் பலி!




அமெரிக்காவை சேர்ந்த பிரபல கணித மேதை ஜோன் நாஷ்(John Nash 86) கார் விபத்தில் சிக்கி பலியானார்.

அமெரிக்காவின் மேற்கு வெர் ஜினியா பகுதியில் பிறந்தவர் ஜோன் நாஷ்.

சிறந்த கணித மேதையான இவர் பொருளாதா ரத்துக்கான நோபல் பரிசை தனது கேம் தியெரிக்காக (Game Theory) 1994 ஆம் ஆண்டு பெற்றார்.

இவரது வாழ் க்கை வரலாற்றை மையமாக வைத்து பியூட்டிபுல் மைண்ட் (Beautiful mind) என்ற திரைப்படம் கூட வெளிவந்துள்ளது.

இந்நிலையில் இவர்தனதுமனைவி அலிசிய(Alicia) உடன் காரில் சென் றுகொண்டு இருந் தார். நீயு ஜெர்சி அருகே சென்று கொண்டு இருந்த போது எதிர்பா ராத விதமாக நிகழ்ந்த கார் விப த்தில் இருவரும் பலியாகியுள்ளனர்.

இவரது மரணத்தால் கணிதம், பொருளாதாரம் போன்ற துறை களின் வல்லுநர்கள் சோகத்தில் ஆழ்ந்துள்ளனர். (3-5)




## சீனாவில் கடும் மழை; 57 பேர் பலி, 13 பேர் மாயம்!



சீனாவின் தெற்கு மற்றும் மத்திய பகுதியில் உள்ள ஜியுஜோவ், பியூஜியன், ஜியாங்க்ஸி உள்ளிட்ட 6 மாகாணங்களில் கடந்த சில தினங்களாக பலத்த மழை பெய்து வருகிறது.

இதனால் பல இடங்களில் நிலச்சரிவு ஏற்பட்டுள்ளது. சில இடங்களில் கட்டடங்களும் இடிந்து தரைமட்டமாகி உள்ளன.

கடந்த 40 ஆண்டுகளில் இல்லாத அளவுக்கு பெய்து வரும் பேய்மழைக்கு இதுவரை 57 பேர் பலியாகி உள்ளனர். 13 பேரை காணவில்லை. மீட்புப்பணிகளில் சீன அரசு தீவிரம் காட்டி வருகிறது. இதற்கிடையே சீனாவில் நீடித்து வரும் கனமழை குறைந்து வருவதாக தேசிய வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது. (3-5)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# அடிப்படைக் கோட்பாடுகள் மாறாமல் தலைமைகள் மாறிப் பயனில்லை

## நாடு கடந்த தமிழீழ அரசின் பிரதமர் உருத்திரகுமாரன்

**தமிழ் மக்களுக்கான உரிமைகள் சிங்களத் தலைவர்களின் கருணையால் ஒருபோதும் கிடைக்கப் போவதில்லை என நாடு கடந்த தமிழீழ அரசாங்கத்தின் பிரதமர் வி.உருத்திரகுமாரன் தெரிவித்துள்ளார். ஜேர்மனியின் டோட் மூண்ட் நகரில் மே 22ம் நாள் முதல் மூன்று நாள் அமர்வாக தொடங்கியுள்ளது. இந்த விசேட அமர்வின் போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.**

அவர் அங்கு தொடர்ந்து ஆற்றிய உரையில், நாடுகடந்த தமிழீழ அரசாங்கத்தின் இரண்டாவது அரசவையின் மூன்றாவது நேரடி அமர்வில் பங்கு கொள்ளும் அனைவருக்கும் மாவீரர்களை மனதில் இருத்தி எனது வணக்கங்களை முதற்கண் தெரிவித்துக் கொள்கிறேன். தற்போது அனைத்துலக சமூகத்தின் ஆதரவுடன் இலங்கையில் ஆட்சி மாற்றம் ஏற்பட்டுள்ளது. புதிய ஆட்சியாளர்களுக்கு அனைத் துலக சமூகத்தின் ஆதரவு வலுவாக இருக்கிறது.



இலங்கை மீதான புவிசார் அரசியல்போட்டிகளின் விளைவாக ஏற்படுத்தப்பட்ட ஆட்சி மாற்றம் இலங்கையின் மீது அனைத்துலக அரசுகள் கொண்டிருக்கும் அக்கறையையும் அதற்காக மேற்கொள்ளும் நடவடிக்கைகளையும் வெளிப்படுத்தி நிற்கிறது. சீனாவுடன் நெருக்கமாக உறவுகளைப் பேணி வந்த மகிந்த ராஜபக்ஷ தோற்கடிக்கப்பட்டதன் ஊடாக இலங்கையின் புவிசார் அரசியற் சமநிலையில் மாற்றம் ஏற்பட்டுள்ளது. சீனாவின் செல்வாக்கு இலங்கைத் தீவில் ஒப்பீட்டளவுக்கு மட்டுப்படுத்தப்பட்டுள்ளது.

இது இந்தியா மற்றும் அமெரிக்கா தலைமையிலான மேற்குலகம் எதிர்பார்த்தவொரு மாற்றம். இம் மாற்றத்தை ஏற்படுத்த இவ் அரசுகள் திட்டம் வகுத்துச் செயற்பட்டிருந்தன. இவர்களின் இத்திட்டத்துக்கு தமிழ் மக்கள் தமது வாக்குகள் மூலம் ஆதரவு வழங்கியிருக்கின்றனர்.

முள்ளிவாய்க்கால் தமிழின அழிப்பு நடவடிக்கைகளின் தலைமைத் தளபதியாக இருந்த மகிந்த ராஜபக்ஷவுக்கு தமது வாக்குகளால் தண்டனை வழங்க வேண்டும் என்ற எமது மக்களின் விருப்பமும் சீனாவின் செல்வாக்கை இலங்கைத் தீவில் மட்டுப்படுத்த முனைந்த அனைத்துலக அரசுகளின் தேவையும் இங்கு ஒரே நேர்கோட்டில் சந்தித்துள்ளன. இவ்ஆட்சி மாற்றம் தமிழ் மக்களுக்கு பயன்தரக்கூடியதுதானா? இது தமிழீழ மக்களின் சுயநிர்ணய உரிமைப் போராட்டத்தின் மீது ஏற்படுத்தக் கூடிய தாக்கங்கள் எவை? நாடு கடந்த தமிழீழ அரசாங்கம் அவற்றை எவ்வாறு எதிர்கொள்ள வேண்டும்?

இவை பற்றி இந்த அமர்வில் நாம் விரிவாகப் பேச வேண்டியவர்களாக உள்ளோம். மாறியுள்ள அரசியற் சூழலைக் கவனத்துக் கெடுத்து நமது செயற்பாடுகளை அதற்கமைய வடிவமைத்துக்கொள்ள வேண்டியவர்களாக நாம் இன்று உள்ளோம். இங்கே ஏற்பட்ட ஆட்சி மாற்றம் அடிப்படையான மாற்றங்கள் எதனையும் ஏற்படுத்துமா என்பது குறித்து நாம் முதலில் சிந்திக்க வேண்டும். எத்தகைய மாற்றம் இலங்கையில் ஏற்பட்டுள்ளது என்பதனையும் நாம் அடையாளம் கண்டுகொள்ள வேண்டும்.

இலங்கையின் அரச தலைவர் மாற்றப்பட்டுள்ளார். இதனால் இலங்கையின் வெளிநாட்டுக் கொள்கைகளில் மாற்றத்தை ஏற்படுத்தியுள்ளது. இலங்கையின் அரசாங்க நிர்வாகத் துறையில் நல்லாட்சி ஏற் படுத்துவது குறித்துப் பேசப்படுகிறது. சில நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றன.

ஆனால் தமிழ் மக்கள் நிலைகுறித்து இலங்கையின் அரசிலோ அரச கொள்கைகளிலோ மாற்றம் ஏற்படவில்லை. இவ்விடத்தில் இலங்கை அரசில் மாற்றம் ஏற்பட முடியாமல் இருப்பதற்கான காரணங்களையும் நாம் விளங்கிக் கொள்ள வேண்டும். ஓர் அரசின் தன்மையில் மாற்றம் ஏற்பட வேண்டுமானால் அந்த அரசின் அடிப்படைக் கோட்பாட்டிலும் அரசின் தூண்களாகக் கருதப்படும் இந்நான்கு அம்சங்களிலும் மாற்றம் ஏற்படவேண்டும். இதற்கானதொரு நிலைமை இலங்கையில் இன்று இல்லை.

இலங்கையை பொறுத்தவரையில் அரசானது இலங்கைத் தீவு ஒரு சிங்கள பௌத்த நாடு என்ற கோட்பாட்டைக் கொண்டுள்ளது. இக்கோட்பாடு மகாவம்ச மனநிலையில் இருந்து ஊற்றெடுக்கிறது. இதற்கமையவே நாடாளுமன்றமும் அரசாங்க இயந்திரமும் நீதித்துறையும் வடிவமைக்கப்பட்டுள்ளன. ஊடகத்துறையும் இக்கோட்பாட்டிற்கமையவே இயங்குகிறது. இதனால் சிங்கள, பௌத்த மக்களே தீர்மானங்கள் எவற்றையும் எடுக்கும் நிலையுள்ளது என்று உருத்திரகுமாரன் தெரிவித்துள்ளார். (3-5)

## மின்தடை பற்றிய அறிவித்தல்

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின் விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக 26.05.2015 இன்று செவ்வாய்க்கிழமை தொடக்கம் 29.05.2015 வெள்ளிக்கிழமை வரை காலை 8.30 தொடக்கம் 5.30வரை வடமாகாணத்தில் உள்ள சில பிரதேசங்களில் மின் விநியோகம் தடைப்பட்டிருக்கும் என இலங்கை மின்சார சபை அறிவித்துள்ளது.

அந்த வகையில் 2015.05.26 ஆம் திகதி யாழ் பிரதேசத்தில் பலாலி இராணுவத் தலைமைக் காரியாலயம், மயிலிட்டி கரிசன் 5வது பொறியியல் படைமுகாம், பலாலி இலங்கை விமானப்படை முகாம், மயிலிட்டி கரிசன் 5வது பொறியியல் படைமுகாம் (புதியது), பலாலி விமானப் படை ஓய்வு காலவிடுதி ஆகிய இடங்களிலும்

கிளிநொச்சி பிரதேசத்தில் நாவற்காடு,கேப்பாபுலவு, வற்றாப்பளை, விமானப்படை-I மற்றும் II, முல்லைத்தீவு 59வது படைப்பிரிவு (14ESR-01மற்றும் 14ESR-02), SFHQ வற்றாப் பளை ஆகிய இடங்களிலும்

வவுனியா பிரதேசத் தில் மாமடுவிலிருந்து மகாகச்சக் கொடிய வரை, பொகவஸ்வேவ, சளலிங்கம, நமலகம, பிரப்பன்மடு, பறயனாலங்குளத்திலிருந்து நேரிய குளம் வரை, CEC கல்லுடைக்கும் ஆலை, பல நோக்கு கூட்டுறவு சங்கம் வி.சி.கே ஆலை, செட்டிக்குளம் வைத்தியசாலை, வலயம் 01, 02, 03 மற்றும் 04 ஆகிய பிரதேசங்களிலும்.

27.05.2015 புதன்கிழமை வவு னியா பிரதேசத்தில் மடுக்கந்தை, மகாமயிலங்குளம், குடாகச்சக் கொடிய, துட்டுவாகையி லிருந்து குடாகச்சக்கொடிய வரை, TNN கல்லுடைக்கும் ஆலை ஆகிய பிரதேசங்களிலும்.

28.05.2015 வியாழக் கிழமை யாழ் பிரதேசத்தில் நகுலேஸ்வரம், மாவை கலட்டி, கொல்லன்கலட்டி, மாவிட்டபுரம், கீரிமலை, கீரிமலை துணைக் கடற்படைமுகாம், காங்கேசன் துறை, வசாவிளான், டொலர் கூட்டுத்தாபனம், கரிசன் 5வது பொறியியல் படைமுகாம், காங்கேசன் துறை வடக்கு கடற்படைமுகாம், காங் கேசன்துறை இலங்கை கப்பற்கூட்டுத்தாபனம், பலாலி இராணுவத் தலைமைக் காரியாலயம், மயிலிட்டி கரிசன் 5வது பொறியியல் படை முகாம், பலாலி இலங்கை விமான ப்படை முகாம், மயிலிட்டி கரிசன் 5வதுபொறியியல் படைமுகாம் (புதியது), பலாலி விமானப்படை ஓய்வுகாலவிடுதி ஆகிய இடங்களிலும்

கிளிநொச்சி பிரதேசத்தில் ஓவசியர் கடைச் சந்தி, தரணி குடியிருப்பு, நீவீல், முக்கொம்பன், நல்லூர்,தம்பிராய், பூநகரி, 4ஆம் கட்டை ஆகிய இடங்களிலும்

வவுனியா பிரதேசத்தில் மாமடுவிலிருந்து மகாகச்சக்கொடிய வரை, பொகவஸ்வேவ, சளலிங்கம, நமலகம, பிரப்பன்மடு, CEC கல்லுடைக்கும் ஆலை ஆகிய பிரதேசங்களிலும்.

29.05.2015 வெள்ளிக்கிழமை யாழ் பிரதேசத்தில்அல்லாரை, வெள் ளம் பொக்கட்டி, கச்சாய், துறைமுகம், கச்சாய் கடற்கரை, பாலாவி, உசன், விடத்தற்பளை, கெற்பெலி, கிளாலி ஆகிய இடங்களிலும்

கிளிநொச்சி பிரதேசத்தில் முறிகண்டி,அக்கராயன், நாச்சிக்குடா, ஜெயபுரம், கோணாவில், ஸ்கந்தபுரம், வலைப்பாடு, வேரவில், ஓவசியர்கடைச் சந்தி, தரணி குடியிருப்பு, நீவில், முக்கொம்பன், நல்லூர், தம்பிராய், பூநகரி, 4ம் கட்டை,651வது படைப்பிரிவு முகாம், 652வது படைப்பிரிவு முகாம், நாச்சிக்குடா கடற்படை முகாம், 2வதுகொமாண்டோ படைப்பிரிவு, இயாஸ் மொகமட் ஐஸ்தொழிற்சாலை ஆகிய இடங்களிலும்

வவுனியா பிரதேசத்தில் மாமடுவிலிருந்து மகாகச்சக்கொடிய வரை, பொகவஸ்வேவ, சளலிங்கம, நமலகம, பிரப்பன்மடு, CEC கல்லுடைக்கும் ஆலை ஆகிய பிரதேசங்களிலும் மின்சாரம் தடைப்படும். (இ-9)

## பிரிவுத்துயர் பகிர்வு



### சிவஸ்ரீ சிதம்பரநாதஐயர் சிதம்பரநாதகுருக்கள்

இந்தியாதிருவிதாங்கூரைப் பிறப்பிடமாகவும் யாழ்.கல்வயலை வசிப்பிடமாகவும் கொண்ட சிதம்பரநாத ஐயர் சிதம்பரநாதகுருக்கள் நேற்று 24ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலமாகினார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை புதன்கிழமை காலை 9 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பின்னர் பூதவுடல் வேம்பிராய் இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.



### நாகமணி சண்முகம்

புங்குடுதீவு 10ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் 328/2, செட்டியார் தெரு கொழும்பு-11 ஐ நிரந்தர வசிப்பிடமாகவும்,சித்தன் கேணியை தற்காலிக வசிப்பிடமாவும் கொண்ட நாகமணி சண்முகம் கடந்த 23ஆம் திகதி சனிக்கிழமை காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று செவ்வாய்க்கிழமை மு.ப 10 மணியளவில் அவரது இல்லத் நடைபெற்று பின்னர் கரைச்சி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.



### கிருஷ்ணன் தம்பன்

சாவகச்சேரி மட்டுவில் தெற்கைப் பிறப்பிடமாகவும் டென்மார்க் Randers ஐ வசிப்பிடமாகவும் கொண்ட கிருஷ்ணன் தம்பன் கடந்த 22ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் எதிர்வரும் 30ஆம்திகதி மு.ப 11.30 மணிதொடக்கம்பி.ப 3.30மணி வரை Nordre Kirkegard,Norrebrogade 94,8930 Randers,Denmark என்னும் முகவரியில் நடைபெறும்.



### நடேசபிள்ளை மகேஸ்வரன்
(ஆசிரியர்-மண்கும்பான், மட்டக்குளி)

கந்தர்மடத்தைப் பிறப்பிடமாகவும் திருநெல்வேலியை வசிப்பிடமாகவும் கொண்ட நடேசபிள்ளை மகேஸ்வரன் கடந்த 19ஆம் திகதி செவ்வாய்க்கிழமை காலமானார். அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை புதன்கிழமை மு.ப 10 மணிக்கு அவரது இல்லத்தில் நடை பெற்று பின்னர் பூதவுடல் திருநெல்வேலி இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.



### அரியரட்னம் அரியதவசிங்கம்

மானிப்பாயைப் பிறப்பிமாகவும் சுவிஸ் Olten ஐ வசிப்பிடமாகவும் கொண்ட அரியரட்னம் அரியதவசிங்கம் கடந்த 17ஆம் திகதி ஞாயிற்றுகிழமை காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை காலை 9 மணி தொடக்கம் மு.ப 11.30 மணிவரை Friedhof Meisenhard 21,4600 Olten, Switzerland என்னும் முகவரியில் நடைபெற்று பின்னர் பூதவுடல் தகனம் செய்யப்படும்.



### திருமதி பத்மநாதன் பத்மாவதி

நல்லூர் வடக்கு,வள்ளிமனை, 310 கோயில் வீதியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி பத்மாவதி பத்மநாதன் கடந்த 23ஆம் திகதி காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியை இன்று செவ்வாய்க்கிழமை மு.ப 10 மணியளவில் பூதவுடல் செம்மணி இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புங்குடுதீவில் மாணவி கொலை நடந்தது என்ன?

07


மாணவி வித்தியா

ஆர்வத்தோடு கற்று வந்த மாணவி வித்தியாவுக்கு கல்லறை கட்டப் பட்டு விட்டது. கொலை என்பதால் சைவமுறைப் படி தகனம் செய்வதும் முடியாத காரியமாகிப் போயிற்று.

எனினும் வித்தியாவின் கல்லறை நூறுடன் நூற்றொன்றாவது அல்ல அது ஒரு அடையாளச் சின்னம். அக்கிரமங்கள், வன்மங்கள், வக்கிரங்கள் இவற்றுக்குக் கல்லறைகள் கட்டவிட்டால் வாழ வேண்டியவர்கள் கல்லறைக்குள் இருந்து கொள்வர் என்ற உண்மையைப் பேசுகின்ற சாட்சியம்.

இறப்பு உலக வாழ்வில் நடக்கும் இயற்கை நிகழ்வு. இறப்பு ஒன்றுதான் மனிதனின் பிறப்பு உரிமை என்றார் இந்தியாவின் பிரதமராக இருந்த நேரு.

அந்த இறப்பு இயற்கையாகக் கிடைக்கவேண்டியது. அந்த உரிமை வேறு எவராலும் தரப்படக்கூடாது.

**ஊரெல்லாம்கூடிஒலிக்க அழுதிட்டு**

**பேரினை நீக்கி பிணம் என்று பெயரிட்டு**

**சூரையம் காட்டிடை கொண்டு போய் சுட்டிட்டு**

**நீரினில் மூழ்கி நினைப் பொழிந்தாரே**

என்று இறப்பின் முடிவை திருமூலர் பாடிமுடிக்கிறார்.

இறந்தவர்களை மயானத்தில் சுட்டுவிட்டு வீட்டிற்கு வந்து நீரில் முழுகி இறந்தவரை மறந்துபோவதுதான் உலக இயல்பு என்று திருமூலர் கூறினாலும் வித்தியாவின் இறப்பில் மட்டும் திருமூலரின் பாடல் தோற்றுப்போனது.

ஆம் வித்தியாவின் இறுதிச் சடங்கு முடிந்த கையோடு வித்தியாவுக்கு நேர்ந்த அக்கிரமம் தொடர்பில் எங்கும் எதிர்ப்புப் போராட்டம் புத்துருவாகியது.

**ஐவர் கைது**

வித்தியாவின் சடலம் கண்டறியப்பட்ட 14 ஆம் திகதி மூன்று பேர் சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டிருந்தனர். இவர்கள் மூவரும் கைது செய்யப்பட்டபோது அப்பகுதி மக்கள் மௌனமாகவே இருந்தனர். சந்தேகத்தின் மீதான கைது என்பதால் அப்படியொரு மௌனம் காக்கப்பட்டது எனலாம்.

17 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை புங்குடுதீவைச் சேர்ந்த ஐந்து இளைஞர்களை ஊர்காவற்றுறைப் பொலிஸ் பிரிவின் உப அலுவலகமாகிய குறிகாட்டுவானில் இருந்த பொலிஸார் கைது செய்திருந்தனர்.

வித்தியாவின் கொலையுடன் சம்பந்தப்பட்ட ஐந்து பேரைப் பொலிஸார் கைது செய்து குறிகாட்டுவான் பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைத்துள்ளனர் என்ற செய்தி புங்குடுதீவு எங்கணும் பரவிக்கொள்ள,

திரண்டெழுந்த புங்குடுதீவு மக்கள் குறிகாட்டுவான் நோக்கிப் படையெடுத்தனர். இப்படையெடுப்பு 17 மே 2015 மாலை 6 மணியளவில் இடம்பெற்றது.

கூடவே யாழ்ப்பாணத்திலும் இச்செய்தி பரவிக் கொள்ள, ஊடகவியலாளர்களும் யாழ்ப்பாணத்து இளைஞர்களும் குறிகாட்டுவானை நோக்கி குருவியாகப் பறந்தனர்.

கைது செய்துள்ள ஐந்து பேரையும் எங்களிடம் தாருங்கள். நாங்கள் அவர்களுக்குத் தண்டனை கொடுக்கின்றோம் என்ற கோஷம் குறிகாட்டுவான் கடலோரம் ஒலிக்க, அந்த ஓசையைக் கடல் அன்னை தன் அலையோடு சேர்த்து அலைவரிசையில் இணைத்துக் கொள்ள பொலிஸாரின்

குவிக்கப்படுகின்றனர்.

எனினும் ஆவேசம் கொண்ட இளைஞர்கள் புங்குடுதீவுக்குள் நுழையும் அனைத்து வாகனங்களையும் சோதனையிடுகின்றனர். இதில் ஆச்சரியம் பொலிஸாரின் வாகனங்களும் இளைஞர்களால் சோதனையிடப்படுகிறது.

இலங்கையில் தமிழ் இளைஞர்கள் பொலிஸாரின் வாகனங்களைச் சோதனையிட்ட வரலாறு இதுவே முதலாவது எனலாம்.

மக்களின் எழுச்சி கண்டபத்து ஏற்படும். அதனால் களேபரங்கள் ஏற்பட்டு நிலைமை மோசமாகலாம்.

ஆக, குறிகாட்டுவான் கடல்வழியாக கைதிகளை ஊர்காவற்றுறைக்குக் கொண்டு செல்வதே ஒரேவழி என முடிவு செய்கின்றனர். அவசர அவசரமாக அம்புலன்ஸ் படகு வரவழைக்கப்படுகிறது.

அதில் கைது செய்யப்பட்ட ஐந்து இளைஞர்களும் ஏற்றப்பட படகு கடலைக்கிழித்தவாறு வேகமெ

## சந்தேக நபர்கள்
















## பொலிஸ் உப அலுவலகத்தை முற்றுகையிட்ட மக்கள்



பாடு பெரும் திண்டாட்டமாயிற்று. குறிகாட்டுவானில் மக்கள் கூடிநின்று ஆர்ப்பரிக்க மறுபுறத்தில் புங்குடுதீவின் நுழைவாயில் எல்லைகள் அனைத்திலும் காவல் கடவுளர்களாக இளைஞர்கள் சூலாயுதம் வேலாயுதம் தடியாயுதம் தாங்கி குற்றவாளிகள் வெளியில் தப்பிச் செல்லாது தடுத்தற் பணியிலும் ஈடுபட்டனர்.

இரவுப் பொழுதிலும் புங்குடுதீவு எங்கும் சனக் கூட்டம். நிலைமையைக் கட்டுப்படுத்த பொலிஸார் பொலிஸார் மௌனமாக இருப்பதில் மிகவும் கவனமாக இருந்தனர்.

இவை ஒருபுறம் நடந்து கொள்ள, மறுபுறத்தில் கைது செய்யப்பட்ட ஐந்து பேரையும் ஊர்காவற்றுறை பொலிஸ் நிலையத்திற்குக் கொண்டு செல்லும் வழி தெரியாது திணறிய பொலிஸார் ஈற்றில் ஒரு முடிவுக்கு வருகின்றனர்.

கைதானவர்களை ஜீப் வண்டியில் ஏற்றி புங்குடுதீவு வீதி வழியால் கொண்டு சென்றால் நிச்சயம் பேராடுக்க ஆத்திரமடைந்த கடல் அன்னை பேரலையாக எழுந்து படகைத் தள்ளிவிழுத்த முனைவதும்; இல்லை இல்லை குற்றவாளிகளை சட்டம் தண்டிப்பதே பொருத்தம் எனக்கருதி விடுவது போலவும் தன் கடுப்பையும் பொறுமையையும் காட்டி நின்றது. இப்போது ஊர்காவற்றுறை கடற்கரையில் அந்த ஐந்து இளைஞர்களும் இறக்கப்படுகின்றனர்.

(தொடரும்)

புருசோத்தமன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிரபாகரன் படையே பெண்களின் கவசம்

## இயக்குநர் கௌதமன் பேட்டி

எனது தாய்க்கும் தேசத்திற்கும் சமனான தமிழ்த் தேசிய தலைவர் பிரபாகரனும் அவரது படையும் தமிழீழ மண்ணில் இருந்த போது தமிழ்ப்பெண்கள் மட்டுமல்ல சிங்கள பெண்களும் பாதுகாப்பாகவே இருந்தனர்.

அவர்கள் இருந்திருந்தால் இவ்வாறு நடக்குமா? என்ற எமது மாணவர்களின் வாசகங்கள் மீண்டும் அவர்களாக உருவாகி விடக்கூடாது எனவும் பிரபல திரைப்பட இயக்குநரும் ஈழ ஆதரவாளருமான கௌதமன் தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பில்அவர்அளித்துள்ள பேட்டியில் மேலும் தெரிவித்துள்ளதாவது,

மாணவி வித்தியாவின் படுகொலை என்பது இதுவரைக்கும்நடந்தபடுகொலைகள் எல்லாவற்றையும் மிஞ்சிய படுகொலையாகும்.

இது ஆட்சிமாற்றம் நடந்துள்ள சூழலில் நடந்திருப்பது என்பது எங்களுடைய இனத்தை தமிழீழ தேசத்திலிருந்து முற்றாக அழித்தொழிக்கும் முயற்சியாகும். இலங்கை அதிகாரவர்க்கத்தினர் ஒவ்வொரு கோணத்திலும் தமிழினத்தை அழித்து வருகின்றார்கள்.

10 இளைஞர்கள் ஒன்று சேர்ந்து மேற்கொண்ட வன்புணர்வு என்பது தொடர்ந்து தமிழ் இளைஞர்களுக்கு வலுக்கட்டாயமாக மது திணிப்பை, போதை திணிப்பை மேற்கொண்டு வருகின்றனர் என்பதையும்அதிகார வர்க்கத்தின் பார்வையில்உள்ளஒருமண்ணில் எவ்வாறு இப்படி நடக்கும்? எல்லாமே எமது இனத்தை அழிப்பதற்கான வேலைத் திட்டங்களில் நடத்தப்பட்ட கொடூர கொலை தான்.

எனது தாய்க்கும் தேசத்திற்கும் சமனான தமிழ்த்தேசிய தலைவர் தமிழீழ மண்ணில் இருக்கும் போது எமது தமிழர்களுடைய நிலையும் அவர் இல்லாதபோது இருக்கும் நிலையும் பார்க்கப்பட வேண்டியது மிக முக்கியமானதாகும்.

> தமிழ்த்தேசிய தலைவர் நம்முடைய மண்ணை, மானத்தை, நம்முடைய நிலத்தை, உரிமையை காப்பதற்காக போராடிய நம்முடைய வீரம் மிக்க அறம்மிக்க அந்த படை அந்தமண்ணில்இருந்தநிலையில் ஒரு பெண் 24 மணி நேரமும் எங்கு வேண்டுமானாலும் போய் வரலாம்.

இந்த உலகத்திலே எந்த மூலையிலும் இவ்வாறான சூழல் இல்லை. இந்தியாவை மீட்டெடுக்க போராடிய காந்தியடிகள் கண்ட கனவு கூட எம் இந்திய தேசத்தில் ஒரு காலமும் நடக்கவில்லை.

ஒரு பெண் டில்லியில் ஒரு பேருந்தில் வைத்து வன்புணர்வுக்குட்படுத்தப்பட்டு தூக்கியெறியப்பட்ட கொடூரம் நடந்தது.

இவ்வாறான எந்த நிகழ்வும் எம்முடைய தலைவன் அந்த நிலத்தை ஆண்ட போது நடைபெறவில்லை.

எங்களுடைய பிள்ளைகள் வித்தியாவின் படுகொலையை அடுத்து பாடசாலை சீருடை யோடுபதாகைகளினை ஏந்தியபடி போராட்டத்தில் ஈடுபட்டிருந்தனர்.

ஆனால்ஒருபதாகைஎனது ஆன்மாவை சுண்டியிழுக்குமாறு இருந்தது. அதுதான் இந்த உலகத்திற்கு சொல்லப்படுகின்ற ஒரு வெளிப்பாடு.

அந்த பதாகையில் அவர்கள் இருந்திருந்தால் இப்படி நடந்திருக்குமா? என்ற கேள்விதான் இருந்தது.

அந்த கேள்வி என்பது இந்த உலகத்தின் முன்னால் நம்முடைய பிள்ளைகள் முன்வைக்கும்பரிசுத்தமானகேள்வி.

இதற்கு ஐ.நா. அரங்கம் மட்டுமல்ல இந்த உயரத்தில் உள்ள மனிதவுரிமை செயற்பாட்டாளர்களின் ஒவ்வொரு கன்னத்திலும் ஓங்கி அறைந்த ஒரு வெளிப்பாடு தான் அந்த வாசகம்.

இதனை உலகத்தின் அதிகாரவர்க்கம் இனியாவது உணர்ந்து தமிழீழ மண்ணில் புலிகள் இருந்த வரைக்கும் தமிழ்ப் பெண்களுக்கு மட்டுமல்ல சிங்கள பெண்களுக்கும் பாதுகாப்பாக இருந்த ஒரே படை விடுதலைப் புலிகள் படை. ஒரே தலைவர் விடுதலைப் புலி களின் தலைவர் மேதகு வேலுப்பிள்ளை பிரபாகரன் தான்.

முள்ளிவாய்க்காலுக்கு பின்னர் மதுவினையும் போதைப் பொருளினையும்உள்ளுக்குள் இணைத்து தம்முடைய உரிமைகளை பறித்தது மட்டுமல்லாமல் எமது பெண்களையும் வன்புணர்ச்சி செய்கின்றனர்.

புதிய ஆட்சியின் பின்னரும் இவ்வாறான கொடூர சம்பவங்கள்நடைபெற்றுக்கொண்டிருக்க நல்லாட்சி என ஆளும் வர்க்கம் சர்வதேசத்திற்கு காட்டிக் கொண்டுள்ளது.

இந்த நிகழ்வு என்பது தமிழர்கள் மீதான இன அழிப்பு நிறுத்தப்படவில்லை தொடர்கின்றது என்பதன் வெளிப்பாடுதான் என உலகம் இனியாவது உணர வேண்டும்.

இதேநிலை தொடர்ந்தால் அவர்கள் இருந்திருந்தால் இப்படி நடக்குமா? என எங்கள் பிள்ளைகள்கேட்ட கேள்வி ஒரு விருட்சமாய் வளர்ந்து மறுபடியும் அவர்கள் வந்து நிற்பார்கள்.

எமது பிள்ளைகள் மாறாமல் இருப்பதற்கு இந்த உலகம் ஆவன செய்ய வேண்டும். அல்லது இதற்கொரு தீர்வு கொடுக்க வேண்டும். இல்லாது விட்டால் அவர்களைப்போல் இவர்கள் உருவாகுவதை எவராலும் தடுக்க முடியாது என்பதுதான் இந்த பதாகையின் உட்கருத்து.

எமது நாட்டு பிள்ளைகள் அனைவரினையும் தமது பிள்ளைகளாக நினைத்து பாதுகாத்த எமது விடுதலை இயக்கத்தை இந்திய தேசம் உட்பட அனைத்து நாடுகளும் சேர்ந்து சிதைத்துள்ளன.

இவற்றையெல்லாம் தடுத்து நிறுத்த வேண்டுமென்றால் தமிழர்கள் அனைவரும் உணர வேண்டும்.

போரின் பின்னரும் நீதிக்காக தமிழர்கள் ஓடிக் கொண்டு தான் உள்ளனர். 6வருடங்களுக்கு மேலாகிவிட்டது நியாயமாக பார்த்தால் இந்த உலகம் எமக்கு நீதி தந்திருக்க வேண்டும்.

இலட்சியத்துக்காக கௌரவத்தை விட்டுக் கொடுக்கலாம். ஆனால் கௌரவத்துக்காக இலட்சியத்தை விட்டுக்கொடுக்கக்கூடாது.

ஈழமண்ணில்இனியொரு வித்தியா கூட சிதைக்கப்படக் கூடாது என்ற ஒரே கொள்கையோடு நாம் அனைவரும் ஒன்றிணைந்தால்தான் எமது பிள்ளைகளும் ஒன்றிணைவார்கள்.

நாம் அனைவரும் ஒன்றிணைந்தால் இந்த உலகத்தில் எத்தனை நாடுகள் சேர்ந்து நின்றாலும் தடுக்க முடியாது. ஆகவே எமது ஈழதேசத்தில் நடைபெறுகின்ற உக்கிரமான போராட்டம் இந்த உலகத்தை திரும்பி பார்க்க வைத்துள்ளது.

வடக்கு, தமிழக முதலமைச்சர்கள் இயற்றிய தீர்மா ணங்கள் எமக்கு ஊன்றுகோலாகஉள்ளன. அதனை வைத்து தமிழீழமே ஒரே தீர்வொன்றுஎனபோராடுவோம்.

அதனை நாம் செய்யத் தவறினால் எமது வருங்கால சமூகம் எம்மை அவமானப்படுத்தும். உரிமையை, உடைமையை ,நாட்டை இழக்க நேரிடும் என்றார்.

ஈழவன்

# தமிழீழ சோசலிச குடியரசே இந்தியாவுக்கு பாதுகாப்பானது

## இன எழுச்சி மாநாட்டில் சீமான் வலியுறுத்தல்

(சென்னை)—

**தனி ஈழம் குறித்த பொதுவாக் கெடுப்பு நடத்தப்பட வேண்டும். தனித் தமிழீழ சோசலிச குடியரசு அமைய வேண்டும். தனி ஈழம் மட்டும்தான் இந்தியாவின் பாதுகாப்புக்கு ஏற்றது என நாம் தமிழர் கட்சியின் தலைவர் சீமான் வலியுறுத்தியுள்ளார்.**

நாம் தமிழர் கட்சியின் இன எழுச்சி மாநாடு திருச்சியில் நேற்று முன்தினம் நடைபெற்றது. மாநாட்டு நிகழ்வில் முதலாவதாக ஆதி தமிழர் கலைநிகழ்ச்சி நடைபெற்று கொண்டிருந்தது.

ஏராளமான மக்கள் வரிசையாக மாநாட்டு திடலில் வந்தமர்ந்து கொண்டிருந்த வேளையில் பிரபாகரனின் பதாகையை ஒரு சில இளைஞர்கள் மாநாட்டு மைதானத்திற்கு எடுத்து வந்தனர்.

அவ்வேளையில் அங்கு கூடியிருந்த இலட்சக்கணக்கான மக்களும் எழுந்து நின்று ஆர்ப்பரிக்க ஆரம்பித்தார்கள்.

சில உணர்வாளர்கள் தங்களையும் மீறி கண்களில் வழிந்த கண்ணீரையும் பொருட்படுத்தாமல் ஆர்ப்பரித்தனர். இது கூடியிருந்த அனைவரையும் கண் கலங்க வைத்தது. அதனை பார்த்த சீமானும் கண் கலங்கி கைதட்டினார்.

மாநாட்டில் பேசிய சீமான்,

இதுவரை சாதி, மத உணர்வுகளோடு கூடிய மக்கள் முதன்முதலாக இன உணர்வுடன் இங்கு கூடியுள்ளனர். மாற்று அரசியல் புரட்சியை முன்வைக்கிறோம்.

ஈழம் விடுதலை ஒன்று தான் வாழ்நாள் இலக்கு. தமிழ் தேசிய [illegible] அதனை அடைவதற்கான தொடக்கம்தான் 2016 தேர்தல். தமிழர்களுக்கு என்று [illegible] இல்லை. அதனால் தான் அயல்நாட்டில் நமது மீனவர்கள், அயல் மாநிலத்தில் தமிழ் மக்கள் கொல்லப்படுகிறார்கள்.



இலங்கையில் நடந்த இன அழிப்பை திமுக, அதிமுக தடுக்கவில்லை. தமிழர்களை காக்கவில்லை.

சிங்கள ராணுவம் தமிழர்கள் மீது திட்டமிட்ட இனப் படுகொலை நடத்தியது. இதனை கண்டித்து அதிமுக அரசு சட்ட மன்றத்தில் தீர்மானம் நிறைவேற்றியது. இதனை மனப்பூர்வமாக வரவேற்கிறோம்.

தனி ஈழம் குறித்த பொது வாக்கெடுப்பு நடத்தப்பட வேண்டும். தனி தமிழீழ சோசலிச குடியரசு அமைய வேண்டும். தனி ஈழம் மட்டும் தான் இந்தியாவின் பாதுகாப்புக்கு ஏற்றது.

அதன் காரணமாக நாம் தமிழர் கட்சி மாநிலத்திலுள்ள 234 தொகுதிகளிலும் தனித்து போட்டியிடவுள்ளோம்.

தமிழ் நாட்டிலும் ஏனைய பகுதிகளிலும் தமிழீழ விடுதலைப்புலிகள் மீதான தடை நீக்கப்பட வேண்டும் என அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

திருச்சி எடமலைப்பட்டி புதூரில் இடம்பெற்ற நாம் தமிழர் கட்சியின் இன எழுச்சி அரசியல் மாநாட்டில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள் வருமாறு,

தனி ஈழம் மட்டுமே ஒவ்வொரு தமிழருக்குமான தாயக விடுதலை. தமிழ் தேசியத்துக்கான விடுதலை அதுவே. ஒரே இலங்கைகுள் ஒற்றை ஆட்சிக்குள் வாழ்கிறீர்களா? அல்லது தனித் தமிழீழமாக மீள்கிறீர்களா? என கேட்டு பொது வாக்கெடுப்பு நடத்தப்பட வேண்டும். இதற்கு இந்தியா குரல் கொடுக்க வேண்டும்.

இன அழிப்பு போரில் ஈடுபட்ட இலங்கை ராணுவத்தினர் மீதும், ராஜபக்ஷ மீதும் சர்வதேச நீதிமன்றத்தின் மூலம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். இன விடுதலைக்காக போராடிய விடுதலைப்புலிகள் அமைப்பு மீதான தடையை உடனடியாக நீக்க வேண்டும். தமிழகத்தில் விடுதலைப்புலிகள் மீதான தடையை ரத்து செய்ய முதலமைச்சர் ஜெயலலிதா உத்தரவிட வேண்டும்.

முன்னாள் பிரதமர் ராஜீவ் காந்தி கொலை வழக்கு தொடர்பாக கைது செய்யப்பட்டு தண்டனை அடைந்த பேரறிவாளன், முருகன், சாந்தன் உள்ளிட்ட ஏழு பேரை மத்திய, மாநில அரசுகள் மனச்சாட்சியோடு விடுதலை செய்ய வேண்டும்.

அவர்களை விடுதலை செய்வதற்கான முன்னெடுப்புகளை தமிழக அரசு தாயுள்ளத்தோடு மேற்கொள்ள வேண்டும். இவ்வாறு அந்தத் தீர்மானத்தில் வலியுறுத்தப்பட்டுள்ளது. (3-5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாமரராய் உலகனைத்தும் இகழ்ச்சி சொல்ல;
பான்மை கெட்டு நாமமது தமிழரென வாழ்ந்தி
டுதல் நன்றோ சொல்லீர். – பாரதியார்

வலம்புரி
T.P : 021 567 1530
website : www.valampurii.lk

# சிவ சிவா... சிவ சிவா... உருப்படுமா? எம் இனம்

உலகில் வாழுகின்ற இனங்களில் மிகவும் பாவப்பட்ட இனம் எது என்றொரு ஆய்வு இடம்பெறுமாக இருந்தால்; அதன் முடிவு ஈழத்தமிழினம் என்பதாகவே இருக்கும்.

அந்தளவிற்கு ஈழத்தமிழினம் சொல்லொணாத் துன்பங்களை அனுபவித்து வருகின்றது.

முப்பது வருட கால அகிம்சைப் போராட்டம்; அதனைத் தொடர்ந்து முப்பது வருடகால ஆயுதப் போராட்டம் என அறுபது வருடங்கள் தமிழினம் துன்பத்தை அனுபவிப்பதில் காலத்தைப் பறிகொடுத்தது.

முப்பது ஆண்டுகளாக தமிழினத்திற்கு எதிராக இலங்கை அரசு யுத்தம் நடத்தியிருந்தாலும் தென் பகுதி மக்கள் உலக மாற்றங்களுக்கு ஈடுகொடுக்கும் வகையில் தங்களை வளர்த்துக் கொள்ள, நாங்கள் யுத்தத்தின் கொடூரங்களை அனுபவிக்கும் இனமாக மட்டுமே இருந்தோம்.

இதனால் எங்களுக்கு ஏற்பட்ட இழப்புகள் ஏராளம். புலம்பெயர்வு என்ற ஒன்று இல்லாமல் போயிருக்குமாக இருந்தால், உலகில் வாழ்ந்த இனங்களில் இருபதாம் நூற்றாண்டில் முற்றாக அழிந்து போன இனம் ஈழத்தமிழினம் என்பதாக கதை முடிந்திருக்கும்.

ஏதோ கடவுள் புண்ணியமாக நம் உறவுகள் வெளிநாடுகளுக்குச் சென்றதால் என் தாய், என் தந்தை, என் சகோதரம் என்ற இரத்த உறவு கருதி தங்களின் உழைப்பை இங்கு அனுப்பி உயிர்காக்கும் பெரும் புண்ணியத்தைச் செய்தனர்.

நிலைமை இதுவாக இருக்கையில், முப்பது வருடகால அகிம்சைப் போர், அதனைத் தொடர்ந்து முப்பது வருடகால ஆயுதப் போராட்டம் என்ற அறுபது வருடகால முடிவின் எல்லையின், அடுத்து வரும் முப்பது வருடங்களின் தலைவிதி எப்படி இருக்கும் என்றால், தமிழர்களால் தமிழினம் ஏமாற்றப்பட்டு தங்களைத் தாங்களே அழித்துக் கொள்வதாகவே இக்காலம் இருக்கும் என்று சொல்லக்கூடிய அளவிலேயே நிலைமை உள்ளது.

வடக்கு மாகாண அரசு கிடைத்தால் எல்லாம் செய்வோம் என்று தேர்தல் பிரசாரம் செய்து ஆட்சியைப் அமோக வெற்றியில் கைப்பற்றிய தமிழர் அரசு, எதையாவது உருப்படியாக செய்துள்ளதா என்றால் எதுவுமேயில்லை.

வடக்கு மாகாண அரசின் செயற்பாடுகள் போதுமானது அல்ல என்பதை அச் சபையில் இருக்கக் கூடிய மனச்சாட்சி உள்ள உறுப்பினர்கள் எவரும் ஏற்றுக் கொள்வர்.

இத்தகையதொரு நிலை ஏன்? பெரும் போரினால் பாதிக்கப்பட்ட இனத்தின் மீட்சிக்கு மாகாண அரசு பல்வேறு செயற்றிட்டங்களை அமுல்படுத்தியிருக்க வேண்டும். அதற்காக மாகாண அரசு அல்லும் பகலும் பாடுபடவேண்டும். ஆனால் அது நடக்கவேயில்லை.

இதுஒரு புறம்; மறுபுறத்தில் வடக்கு மாகாணத்திற்கு உட்பட்ட பிரதேச சபைகள் உள்ளிட்ட உள்ளூராட்சி சபைகள் குப்பைகளை அகற்றுவதற்குக் கூட வக்கில்லாதவை என்ற நிலையிலேயே இயங்குகின்றன. இது பற்றி தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைமை எடுத்த நடவடிக்கை என்ன?

வடபுலத்தின் முக்கிய நகரங்கள் குப்பைக் காடாகியுள்ளன. கழிவுகளை அகற்றுவதற்கு ஏற்ற நடவடிக்கைகள் இல்லை. நிலைமை இதுவெனில் பிரதேச சபைகளால் ஏதேனும் பயன் உண்டா என்று கேள்வி கேட்பதில் எந்தத் தவறும் இருக்கமுடியாது.

ஆக, அடுத்துவரும் முப்பது ஆண்டுகாலம் ஏமாற்று அரசியலின் தாண்டவமாக எங்கள் நிலைமை இருக்கும் என்று கணிக்க முடியும்.

என்ன செய்வது? மகிந்தவின் அரசை தென்னிலங்கை புத்திஜீவிகள் வழிப்படுத்தினர். மகிந்த ஊடாக புலிகளைத் தோற்கடித்த பின்னர், ஊழல் அற்ற இலங்கை என்ற பெயரில் அதே புத்திஜீவிகள் மைத்திரியின் அரசை உருவாக்கினர். ஆனால் எங்கள் புத்திஜீவிகள் இப்போதுதான் அதற்கு வேண்டிய கையெழுத்துப் பட்டியலை இதற்குப் பயன்படுத்தியது ஏன் என்று கேள்வி எழுப்பவும் வியாக்கியானம் தரவும் ஊடக மாநாடு நடத்துகின்றனர். சிவ சிவா... உருப்படுமா எங்கள் இனம்?

# தனியார் ஊடகம் மீது கோத்தபாய தாக்கினார்

தனியார் ஊடகம் மீது குண்டுத் தாக்குதல் நடத்தி அதனை எரித்தது முன்னாள் பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷவே என கால்நடை அபிவிருத்தித்துறை பிரதியமைச்சர் ரஞ்சன் ராமநாயக்க தெரிவித்துள்ளார்.

தொலைக்காட்சி நிகழ்ச்சி ஒன்றில் கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

தனியார் ஊடகம் மீது கோத்தபாய ராஜபக்ஷ தாக்குதல் நடத்தியதற்கான ஆதாரங்கள் தன்னிடம் காணப்படுவதாகவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

க்ளேமோர் வெடிகுண்டு சாதாரண பாதுகாப்பு அதிகாரிக்கு அல்லது சிவில் குண்டருக்கு அல்லது வம்பொட்டா, வெலே சுதா, புலம்பிட்டிய அமர ஆகியோருக்கு பெற்றுக்கொள்ள முடியாது எனவும்,

பாதுகாப்பு பிரிவின் உயர் அதிகாரத்திலுள்ள மற்றும் பாதுகாப்பு செயலாளருக்கு மாத்திரமே அதற்கான அதிகாரம் காணப்படுவதாக இது தொடர்பிலான காரணங்களை முன்வைத்த போது அவர் தெரிவித்தார். (எ-11)

# ஸ்ரீஜெயநீராவி வீரகத்தி விநாயகர் ஆலயம் (நீராவியடி-யாழ்ப்பாணம்)



நான்காம் நாள்

விநாயகனே! வெவ்வினைகள் தீர்ப்போனே!
ஆறுதலும் தேறுதலும் நீ எமக்குத் தருவாயே!
ஆனை முகத்தோனே! ஐங்கரனே! விநாயகனே!
தொப்பை அப்பனே! உந்தன் பக்தர்களைக் காப்பவனே!
மண்ணிலே மாந்தரெல்லாம் மகிழ்வுடன் வாழ்ந்திடவே!
திருவருள் புரிவாய் நீராவிப்பதி விநாயகனே!
ஓங்கார முதற்பொருளே ஞான கணபதியே!
திருக்காட்சி தந்தருள்வாய் திருவடியே சரணம் ஐயா!

பீ. இராகுலன்
பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்.

# கொலைச் சந்தேகநபர்களில் எவரும் சுவிஸ் குடியுரிமை பெற்றவர்களல்லர்

## சுவிஸ் தூதரகம் விளக்கம்

புங்குடுதீவு மாணவி வன்புணர்வுக் குட்படுத்தப்பட்டு கொலை செய்யப்பட்டமையை சுவிட்சர்லாந்து அரசாங்கம் வன்மையாகக் கண்டித்துள்ளது.

இது தொடர்பாக கொழும்பிலுள்ள சுவிட்சர்லாந்து தூதரகம் விடுத்துள்ள அறிக்கையில்,

மேற்படி கொலைசம்பந்தமாக சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டுள்ள எவரும் சுவிஸ் நாட்டில் குடியுரிமை பெற்றவர்களல்லர்.

ஊடகங்கள் மேற்படி சம்பவம் தொடர்பில் தடுத்துவைக்கப்பட்டுள்ள சந்தேக நபர்களில் ஒருவர் சுவிஸ் நாட்டுப் பிரஜை என தெரிவித்துள்ளன. எனினும் இது தொடர்பில் மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளில் குறித்த சந்தேக நபருக்கு வதிவிட அனுமதி மாத்திரமே வழங்கப்பட்டிருப்பதாக தெரியவந்துள்ளது என அந்த அறிக்கையில் மேலும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. (3)

# பெண்கள் மீது வாள்வெட்டு

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு ஏறாவூர் பொலிஸ் பிரிவுக்குப்பட்ட ஐயங்கேணி பிரதேசத்தில் இரண்டு தமிழ்ப் பெண்களுக்கு வாள்வெட்டு சம்பவம் இடம்பெற்றுள்ளதாக ஏறாவூர் பொலிஸார் தெரிவித்தனர்.

நேற்று மாலை சுமார் 3.30 மணியளவில் ஐயங்கேணி எல்லைக் கிராமத்து பகுதிக்கு விறகு எடுக்கச்சென்ற வேளையில் மூன்று முஸ்லிம் இளைஞர்கள் வாள்களுடன் வந்து தாக்கியதாக வருகின்றது.

இச்சம்பவத்தில் சிறிதேவிப்பிள்ளை (56) தளவாய், இராசம்மா(60) ஐயங்கேணி ஆகிய பிரதேசங்களிலுள்ள இரண்டு தமிழ் பெண்களே தாக்குதலுக்குள்ளாகிய நிலையில் சிகிச்சைக்காக மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இச்சம்பவத்துடன் தொடர்புடைய முஸ்லிம் இளைஞன் ஒருவரை பொது மக்கள் மடக்கிப்பிடித்து ஏறாவூர் பொலிஸாரிடம் ஒப்படைத்துள்ளதாக பொது மக்கள் தெரிவித்தனர்.

மேலதிக விசாரணையை ஏறாவூர் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (எ-11)

# தீயால் பலியானோரின் எண்ணிக்கை அதிகரிப்பு

மருதானை எல்பின்ஸ்டன் திரையரங்குக்கு அருகில் உள்ள வெதுப்பகமொன்றில் ஏற்பட்ட தீ விபத்தில் சிக்கி பலியானவர்களின் எண்ணிக்கை 5ஆக அதிகரித்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர். அந்த தீயைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வருவதற்கு தீயணைப்பு வாகனங்கள் ஆறு பயன்படுத்தப்பட்டதாகவும் சுமார் ஒன்றரை மணி நேரத்துக்கு பின்னரே தீ கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வரப்பட்டதாகவும் தீயணைப்பு பிரிவு அறிவித்துள்ளது. கொத்து ரொட்டி தயாரிப்பதற்காக பயன்படுத்தும் அடுப்புக்கு பயன்படுத்தும் காஸ் சிலிண்டர் வெடித்ததனால் இந்த தீ விபத்து ஏற்பட்டிருக்கலாம் என்று பொலிஸார் சந்தேகிக்கின்றனர். தீயையடுத்து கிளம்பிய புகையை உள்ளிழுக்கும் போது ஏற்பட்ட சிக்கல்கள் காரணமாகவே இந்த மரணங்கள் சம்பவித்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர். இந்த வெதுப்பகம் 5 மாடிகளை கொண்டது என்றும் ஐந்து மாடிகளுக்கும் தீ பரவியுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர். இதேவேளை, இந்த வெதுப்பகத்துக்கு முன்பாக நிறுத்தி வைக்கப்பட்டிருந்த கார் மற்றும் மோட்டார் சைக்கிள் ஒன்றும் சேதமடைந்துள்ளது. (இ-5)

# இந்தியா செல்ல விசா அவசியம்

(யாழ்ப்பாணம்)

இலங்கையில் இருந்து இந்தியாவிற்கு செல்லவுள்ளவர்கள் விசாவினைப் பெற்றே விமானநிலையத்தினூடாக செல்ல முடியும்என யாழ். இந்திய துணைத் தூதுவர் நடராஜன் தெரிவித்தார்.

இலங்கையில் இருந்து இந்தியா செல்வதற்கு விசா பெற்றுச் செல்லும் முறைமை தொடர்ந்து வரும் நிலையில் அண்மையில் அறிமுகப்படுத்தப்பட்ட ஈ.விசா (இணைய விசா) வினால் மக்கள் மத்தியில் குழப்ப நிலை ஏற்பட்டுள்ளது. பலர் ஈ.விசா என்றால் விசா இல்லாது இந்தியாவுக்குச் செல்ல முடியும் என நம்பி பயணச்சீட்டை பெற்று விமானநிலையத்திற்குச் சென்று ஏமாற்றத்துடன் திரும்பி வருகின்றனர் என அவர் மேலும் கூறினார். (எ-11)

# சுவாமி விவேகானந்தரின் சிந்தனைத்துளிகள்



ஒவ்வோர் உயிரும் தெய்வீகமானவை, அதாவது கடவுளே.

ஒவ்வொரு மனிதனையும் ஒவ்வொரு நாட்டையும் சிறப்படையச் செய்ய மூன்று விடயங்கள் தேவை. நல்லியல்புகளின் ஆற்றல்களில் திட நம்பிக்கை, பொறாமை, சந்தேகம் இவை இல்லாதிருத்தல், நல்லவர்களாக இருந்து நன்மை செய்ய முயல்கின்ற அனைவருக்கும் உதவுதல்.

மதம் என்பது ஆன்மா சம்பந்தப்பட்டது, அது சமூக விடயங்களில் தலையிட அதற்கு எந்த உரிமையும் இல்லை.

பொறாமை நமது தேசியப் பண்பு நலனின் சாபக்கேடு, அது அடிமைகளுக்கே உரியது. இந்தப் பொறாமை மட்டும் வந்துவிட்டால் ஆண்டவனும் அவனது ஆற்றல்கள் அனைத்தும் ஒன்று சேர்ந்தாலும் எதுவும் செய்ய முடியாது.

எனது வீரமிக்க, உறுதியான, அன்பு நிறைந்த குழந்தைகளே! உங்கள் அனைவருக்கும் எனது ஆசிகள்.

சகோதரா இந்த வறுமையையும் அறியாமையையும் பார்த்துப் பார்த்து எனக்குத் தூக்கமே வரவில்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வருத்தப்படாத வாலிபர் சங்கத்தின் கிரிக்கெட் சுற்றுப் போட்டி

## இணுவில் கலைஒளி சம்பியன்






இளவாலை வருத்தப்படாத வாலிபர் சங்கம் யாழ்.மாவட்டரீதியாக நடத்திய அணிக்கு 8 பந்து பரிமாற்றங்களுடன் 9 வீரர்களை கொண்ட சுற்றுப்போட்டியில் இறுதியாட்டம் நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை மெய்கண்டான் மகா வித்தியாலயத்தில் நடைபெற்றது.

விளையாட்டுத்துறை பொறுப்பாளர் நவராஜ தலைமையில் ஆரம்பமான நிகழ்வுக்கு மண்ணின் மைந்தர் பொறியியலாளர் நர்த்தனன், தேசிய அபிவிருத்தி லொத்தர் சபையின் மாவட்ட முகாமையாளர் பிரதீபன், மெய்கண்டான் மகாவித்தியாலய அதிபர் இரங்கநாதன் ஆகியோர் விருந்தினர்களாக வருகைதந் ததுடன் இளவாலை மெய்கண் டான் மகாவித்தியாலய மாணவர்கள் மேலைத்தேய வாத்திய அணி வகுப்பு மரியாதைய்ய வழங்கியிருந்தனர்.

அளவெட்டி ஞானவைரவர் அணியை எதிர்த்து இணுவில் கலைஒளி அணி மோதிய இந்த இறுதியாட்டத்தில் நாணய சுழற்சியில் வெற்றிபெற்ற ஞானவைரவர் அணி முதலில் களத்தடுப்பை தெரிவு செய்தது.

இதற்கமைய முதலில் துடுப்பெடுத்தாடிய இணுவில் கலைஒளி அணியினர் முதலில் துடுப்பெடுத்தாடி 8 பந்துப்பரிமாற்றங்களில் 5 இலக்குகளை இழந்து 103 ஓட்டங்களை பெற்றனர்.

அணியின் சார்பாக முதலில் துடுப்பெடுத்தாடிய மோகன்ராஜ் 24 ஓட்டங்களையும் கோகுல்ராஜ் 15 ஓட்டங்களையும் சனந்தன் ஆட்டமிழக்காமல் 19 ஓட்டங்களையும் பெற்றனர்.

அளவெட்டி ஞான வைரவர் அணிசார்பான பந்துவீச்சில் சயந்தன் 2 விக்கெட்டுகளையும் கிர்ஷாந்த், சுகந்தன்,கஜமுகன் ஆகியோர் தலா ஒருவிக்கெட்டுகளையும் கைப்பற்றினர்.

பதிலுக்கு 104 என்ற வெற்றி இலக்கை நோக்கித் துடுப்பெடுத்தாடிய ஞானவைரவர் அணி பிரதீசின் பந்து வீச்சை எதிர்கொள்ள முடியாமல் சகல விக்கெட்டுகளையும் இழந்த நிலையில் 59 ஓட்டங்களையே பெற்று தோல்வியை தழுவ 44 ஓட்டங்களால் இணுவில் கலை ஒளி வெற்றியை தன தாக்கியது.

அளவெட்டி அணிக்காக கஜமுகன் 18 ஓட்டங்களை பெற்றார்.

பந்துவீச்சில் கலைஒளி அணியில் பிரதீஸ் 3 விக்கெட்டுகளையும் சனந்தன் 2 விக்கெட்டுகளையும் தீபன் வாமணன்,கோகுல்ராஜ் ஆகியோர் தலா ஒவ்வொரு விக்கெட்டை கைப்பற்றினர்.

இறுதியாக இடம்பெற்ற பரிசளிப்பு நிகழ்வில் ஆட்டநாயகனாக இணுவில் கலைஒளி அணியின் பிரதீஸ் தெரிவு செய்யபட்டார். தொடர் ஆட்டநாயகனாக ஞான வைரவர் அணியின் சுகந்தன் தெரிவுசெய்யப்பட்டார்.

மற்றும் முதலிடம் பெற்ற இணுவில் கலைஒளி அணிக்கு 10 ஆயிரம் ரூபா பணப்பரிசிலும் இரண்டாம் இடம்பெற்ற அளவெட்டி ஞான வைரவர் அணிக்கு 5 ஆயிரம் ரூபா பணப்பரிசிலும் வெற்றி கிண்ணமும் பெற்றனர். (க-23)

# தந்தையானார் வொட்சன்



அவுஸ்திரேலிய கிரிக்கெட் அணியின் முன்னணி வீரரான ஷேன் வொட்சன் லீ. பர்லாங் தம்பதிக்கு அழகான பெண் குழந்தை பிறந்துள்ளது. இவர்களுக்கு ஏற்கனவே 2 வயதில் ஒரு ஆண் குழந்தை உள்ள நிலையில், 33 வயதான மனைவி லீ மீண்டும் கர்ப்பமடைந்திருந்தார்.

நிறைமாத கர்ப்பிணியாக இருந்த அவருக்கு பெண் குழந்தை பிறந்தது. அந்த குழந்தைக்கு "மெடில்டா விக்டோரியா வொட்சன்" என பெயர் சூட்டப்பட்டுள்ளது.

இது பற்றி வொட்சன் தனது டுவிட்டர் தளத்தில், "மெடில்டா உல த்தில் காலடி எடுத்து வைத்து விட்டாள் எனக்குறிப்பிட்டுள்ளார். (க)

# பாடசாலைகளுக்கிடையிலான எறிபந்து போட்டி

## தெல்லிப்பழை யூனியன், சுந்தரபுரம் சரஸ்வதி சம்பியன்



வடமாகாண கல்வி விளையாட்டு மற்றும் பண்பாட்டலுவல் கள் திணைக்களத்தால் வட மாகாண பாடசாலைகளுக்கிடையில் நடத்தப்பட்ட எறிபந்து போட்டியில், ஆண்களில் தெல்லிப்பழை யூனியன் கல்லூரி அணியும் பெண்களில் வவுனியா சுந்தரபுரம் சரஸ்வதி வித்தியாலயமும் சம்பியனாக தெரிவு செய்யப்பட்டன.

இந்த எறிபந்துச் சுற்றுப்போட்டி புதுக்குடியிருப்பு மத்திய கல்லூரியில் கடந்த சனிக்கிழமை நடைபெற்றது.

ஆண்களுக்கான இறுதிப்போட்டியில் தெல்லிப்பழை யூனியன் கல்லூரியும் மானிப்பாய் மெமோறியல் ஆங்கிலப் பாடசாலை அணியும் மோதின. இதில் முதல் இரண்டு நேர் செற்களையும் 25:09, 25:11 என்ற புள்ளிகள் அடிப்படையில் கைப்பற்றிய யூனியன் கல்லூரி அணி சம்பியனாகியது. மூன்றாமிடத்தை வவுனியா மாதர் பனிக்கர் மகிழங்குளம் கனிஷ்ட உயர்தர வித்தியாலயம் பெற்றுக்கொண் டது.

பெண்களுக்கான இறுதிப் போட்டியில் தெல்லிப்பழை யூனியன் கல்லூரியும் சுந்தரபுரம் சரஸ்வதி வித்தியாலயமும் மோதின. இதில் சரஸ்வதி வித்தியாலயம் முதல் இரு நேர்செற்களையும் 25:20, 25:11 என்ற புள்ளிகள் அடிப்படையில் கைப்பற்றிச் சம்பியனாகியது. மூன்றாமிடத்தை நெல்லியடி மத்திய கல்லூரி அணி பெற்றது.. (க)

# ஜனகன் அபார ஆட்டம்; ஆவரங்கால் இந்து இளைஞர் வெற்றி

சிறுப்பிட்டி கலைஒளி விளையாட்டுக்கழகம் நடத்திய மாபெரும் கரப்பந்தாட்ட சுற்றுப்போட்டி நேற்று முன்தினம் 23.05.2015 சனிக்கிழமை கலை ஒளி மைதானத்தில் விறுவிறுப்புடன் நடைபெற்றது.

ஆவரங்கால் இந்து இளைஞர் விளையாட்டுக்கழகம் எதிர் ஆவரங்கால் மத்திய விளையாட்டுக் கழகம் மோதிக் கொண்டன. முதலாவது சுற்றுத் தொடரில் 25:22 எனும் புள்ளி அடிப்படையிலும் இரண்டாவது சுற்றில் 25:20 எனும் புள்ளி அடிப்படையிலும் மூன்றாவது சுற்றில் 25:20 எனும் புள்ளி அடிப்படையிலும் நான்காது சுற்றில் 25:18 என சமநிலையிலும் உச்சக்கட்டத்தை அடைந்து வெற்றியின் இறுதிச் சுற்றில் 15:12 எனும் சொற்கணக்கில் ஆவரங்கால் இந்து இளைஞர் வெற்றியை தனதாக்கிக் கொ டதுடன் சிறந்த விளையாட்டு வீரனாக சச்சிதானந்தம் ஜனகன் தெரிவுசெய்யப்பட்டார். (க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிம்பாவே அணியினை வீழ்த்தி தொடரை வென்றது பாகிஸ்தான்

சிம்பாவே அணிக்கு எதிரான 2ஆவது இருபது-20 தொடரில் 2 விக்கெட் வித்தியாசத்தில் வெற்றி பெற்றபாகிஸ்தான் இருபது-20தொடரை கைப்பற்றியுள்ளது. பாகிஸ்தான்-சிம்பாவே அணிகளுக்கு இடையிலான 2ஆவது இருபது-20 சர்வதேச போட்டி லாகூரில் நேற்று முன்தினம் நடந்தது.

இதில் நாணய சுழற்சியில் வென்ற சிம்பாவே அணி முதலில் துடுப்பெடுத்தாட முடிவு செய்தது. அதன்படி தொடக்க ஆட்டக்காரர்களாக களமிறங்கிய சிபாண்டா (49), மககட்சா (39) நல்ல தொடக்கம் கொடுத்தனர்.

அணித்தலைவர் சிகும்பரா (21) 3 சிக்சர் விளாசிய நிலையில் ஆட்டமிழந்தார். சிறப்பாக விளையாடிய வில்லியம்ஸ் அரைச்சதம் அடித்தார்.

இதனால் சிம்பாவே அணி 20 ஓவர் முடிவில் 3 விக்கெட் மட்டும் இழந்து 175 ஓட்டங்களை எடுத்தது. வில்லியம்ஸ் (58), கோவெண்டிரி (2) ஆட்டமிழக்காமல் இருந்தனர்.

இதைத் தொடர்ந்து 176 ஓட்டங்கள் என்ற கடின இலக்கை நோக்கி களமிறங்கிய பாகிஸ்தான் அணிக்கு தொடக்க வீரர் அகமது சிகாட் (18) ஏமாற்றினார். அன்வர் (18), மாலிக் (7) நிலைக்கவில்லை. முக்தர் (62) அரைச்சதம் கடந்து ஆட்டமிழந்தார். இதன் பின்னர் சிம்பாவே அணியின் பந்து வீச்சை சமாளிக்க முடியாமல் அப்ரிடி (7), ரிஸ்வான் (6), அன்வர் அலி (2) ஆட்டமிழந்தனர்.

இருப்பினும் பாகிஸ்தான் அணி 19.4 ஓவரில் 8 விக்கெட் இழப்பிற்கு 176 ஓட்டங்கள் எடுத்து வெற்றி பெற்றது. வாசிம் (4), பில்லவால் பாட்டி (13) களத்தில் இருந்தனர். இந்த வெற்றியின்மூலம் இருபது-20தொடரை பாகிஸ்தான் அணி 2-0 என்ற கணக்கில் கைப்பற்றியது. (க)



# 8வது ஐ.பி.எல் சாதனைகள்

கடந்த மாதம் ஏப்ரல் 7ஆம் திகதி தொடங்கிய ஐ.பி.எல் 8 ஆவது தொடரின் இறுதிப் போட்டி நேற்று முன்தினம் கொல்கத்தா ஈடன் கார்டன்ஸ் மைதானத்தில் நடைபெற்றது.



இதில் சென்னை - மும்பை அணிகளின் மோதல் ரசிகர்களின்



பலத்த எதிர்பார்ப்புகளுக்கு மத்தியில் நடந்தது.

இந்தப் போட்டியில் பந்துவீச்சு, துடுப்பாட்டம் என சொதப்பிய சென்னை அணி 41 ஓட்டங்கள் வித்தியாசத்தில் தோல்வியைத் தழுவியது. இதன்மூலம் மும்பை அணி 2ஆவது முறையாக சம்பியன் பட்டம் வென்றது.



* ஐ.பி.எல்., அரங்கில் அதிக முறை கிண்ணம் வென்ற அணிகளுக்கான பட்டியலில் சென்னை, கொல்கத்தா அணிகளுடன் முதலிடத்தை மும்பை பகிர்ந்து கொண்டது.

* அதிக விக்கெட் வீழ்த்தியவர்களுக்கு வழங்கப்படும் 'பேப்பிள்' நிறத் தொப்பியை சென்னை அணியின் சகலதுறை வீரர் பிராவோ பெற்றார். இவர் இந்தத் தொடரில் 17 போட்டிகளில் விளையாடி 26 விக்கெட்டுகளை கைப்பற்றினார்.

* அதிக ஓட்டங்கள் எடுத்தவர்களுக்கான பட்டியலில் ஹைதரா



பாத் அணித் தலைவர் டேவிட் வோர்னர் முதலிடம் பிடித்தார். இவர் 14 போட்டிகளில் 7 அரை சதம் உட்பட 562 ஓட்டங்கள் எடுத்தார். இதன்மூலம் இவர் அதிக ஓட்டங்கள் எடுத்தவர்களுக்கான 'ஒரேஞ்' நிற தொப்பியை பெற்றார். மேலும், பவுண்டரியில் பட்டையை கிளப்பியதிலும் இவர் முதலிடத்தில் உள்ளார். இந்தத் தொடரில் 65 பவுண்டரிகளை அடித்துள்ளார்.



* அதிக சிக்சர்கள் விளாசியவர்கள் வரிசையில் கிறிஸ் கெய்ல் முதல் இடம் பிடித்தார். இவர் இந்தத் தொடரில் 38 சிக்சர்களை விளாசியிருந்தார். அதேபோல் அதி விரைவாக சதம் விளாசியவர்களின் வரிசையிலும் கிறிஸ் கெய்ல் முதலிடத்தில் இருக்கிறார். இவர் 46 பந்தில் சதம் விளாசினார்.

* சிறந்த இளம் வீரராக



டெல்லி அணியின் ஸ்ரேயாஸ் ஐயர் ஜொலித்தார். 20 வயதான ஐயர் 14 போட்டிகளில் 439 ஓட்டங்கள் எடுத்தார்.

* நடப்பு சீசனில் மொத்தம் 4 சதங்கள் விளாசப்பட்டன. இதில் பெங்களூர் அணியின் டி வில்லியர்ஸ் தனிப்பட்ட முறையில் அதிக ஓட்டங்களை எடுத்துள்ளார். இவர் மும்பை அணிக்கு எதிராக 133 ஓட்டங்கள் குவித்து ஆட்டமிழக்காமல் இருந்தார்.

* சிக்கனமாக பந்துவீசுவதில் நெஹ்ரா அசத்தல் வீரராக வலம் வந்தார். 10 ஓட்டங்களை மட்டும் கொடுத்து 4 விக்கெட்டுகளை வீழ்த்தியது இவரது சிறந்த பந்து வீச்சாகும்.

* ரொக்கெட் வேகத்தில் பந்துவீசியவர்கள் வரிசையில் பஞ்சாப் அணியின் மிட்செல் ஜோன்சன் முதலிடம் வகிக்கிறார். இவர் 151.11 கிலோ மீற்றர் வேகத்தில் வீசியதுதான் இந்த தொடரில் அதிக வேகத்தில் வீசப்பட்ட பந்து வீச்சு ஆகும்.

* பஞ்சாப் அணியின் இளம்



வீரர் சந்தீப் ஷர்மா அதிக மெடின் ஓவர்களை வீசியுள்ளார். இந்த தொடரில் அவர் வீசிய 4 மெடின் ஓவர்களை வேறு பந்துவீச்சாளர்களாலும் முறியடிக்க முடியவில்லை.

* இந்தத் தொடரில் சமத்து வீரர்களாக விளையாடியதற்காக சென்னை அணிக்கு ஃபேர்பிளே



விருது வழங்கப்பட்டது. இந்த விருது வழக்கம்போல சென்னை சுப்பர் கிங்ஸ்சுக்குதான் கிடைத்தது.

* அந்தரத்தில் பறந்து பறந்து பந்தை பிடித்த பிராவோ சிறந்த பிடியெடுப்புக்கான விருதை பெற்றார். ராஜஸ்தான் றோயல்ஸ்



அணிக்கு எதிரான போட்டியில் பவுண்டரி எல்லையில் பிராவோ பிடித்த அருமையான பிடியெடுப்புக்காக இந்த விருது கிடைத்தது.

* கொல்கத்தா அணியின் அண்ட்ரே ரசல் இந்தத் தொடரின் மதிப்பு மிக்க வீரராக அறிவிக்கப்பட்டார். பந்துவீச்சு, களத்தடுப்பு, துடுப்பாட்டம் என ஜொலித்ததால் இந்த விருது வழங்கப்பட்டது.

* சம்பியன் பட்டம் வென்ற மும்பை இந்தியன்ஸ் அணிக்கு ரூ.15 கோடி பரிசுத் தொகை கிடைத்தது. இரண்டாவது இடம் பிடித்த சென்னை சுப்பர் கிங்ஸ் ரூ.10 கோடி பரிசை தட்டிச் சென்றது. (க)

# யாழ்.பொலிஸ் இடமாற்றம் சந்தேகத்துக்குரிய விடயம்

## முன்னாள் ஜனாதிபதி தெரிவிப்பு

(கொழும்பு)

யாழ்ப்பாணத்தில் கடந்த நாட்களில் இடம்பெற்ற குழப்ப நிலையை தொடர்ந்து உயர் பொலிஸ் அதிகாரிகள் ஐவருக்கு இடமாற்றம் வழங்கப்பட்டமை சந்தேகத்திற்குரிய விடயமாகும் என முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.



திஸ்ஸ மஹாராம பிரதேச விகாரையில் இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு சந்தேகம் வெளியிட்டுள்ளார்.

யாழ்.மாவட்ட பொலிஸ் பிரிவின் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர், துணை பொலிஸ் அத்தியட்சகர் மற்றும் யாழ்ப்பாணம், ஊர்காவற்றுறை பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரிகள் ஆகியோரே இவ்வாறு இடமாற்றம் செய்யப்பட்டிருந்தனர்.

புங்குடுதீவு மாணவி படுகொலையையடுத்து யாழ்ப்பாணத்தில் நிலவிவரும் நிலைமையை கருத்திற்கொண்டு வெள்ளவத்தை பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரியாக கடமையாற்றி வந்த உதய குமார வூட்லர் யாழ்ப்பாண பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரியாக நியமிக்கப்பட்டுள்ளார்.

இவ்வாறான இடமாற்றங்கள் திடீரென இடம்பெற்றது குறித்து முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவிற்கு மிகவும் சந்தேகமாக உள்ளதென அவர் குறிப்பிட்டுள்ளார். (எ-11)

## தேசிய மட்ட மெய்வல்லுநர் போட்டி

# கிளிநொச்சி மாணவி டென்சிகா முதலிடம்



இலங்கையில் பியகமவில் நடைபெற்ற தேசிய மட்ட மாணவர்களுக்கான மெய்வன்மை போட்டியில் கிளிநொச்சி மத்திய மகா வித்தியாலயம் தேசிய பாடசாலை மாணவி முதலிடம் பெற்றுள்ளார்.

தேவதாஸ் டென்சிகா 15 வயது பிரிவில் 800 மீற்றர் ஓட்டப் பந்தயத்தில் முதலிடத்தை பெற்று தங்கப் பதக்கத்தை வென்று சாதனை படைத்துள்ளார்.

அதேவேளை பளை மத்திய கல்லூரியில் இருந்து தேசிய மட்டப் போட்டியில் 20 வயது பிரிவில் உயரம் பாய்தலில் மூன்றாம் இடத்தினை யோகநாதன் சுகிர்தா பெற்றுள் ளார். (சு-277)



# யுவதியை வெட்டிய இளைஞன் தன்னையும் வெட்டினான்!

## தீருவிலில் சம்பவம்

யுவதி ஒருவரை வாளால் வெட்டிக் காயப்படுத்திய இளைஞன் தன்னைத்தானே வெட்டிக் காயப்படுத்திய நிலையில் வல்வெட்டித் துறை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

வல்வெட்டித்துறை வேம்படியைச் சேர்ந்த [illegible] (வயது 20) என்ற இளைஞனே படுகாயமடைந்தவராவார்.

மேற்படிச் சம்பவம் பற்றி தெரிய வருவதாவது,

பிரஸ்தாப இளைஞன் வல்வெட்டித்துறை தீருவில் பகுதியைச் சேர்ந்த பெண் ஒருவரின் வீட்டுக்குச் சென்று அவரை வாளினால் சரமாரியாக வெட்டிய பின் தன்னைத் தானே வெட்டிக் காயப்படுத்தியுள்ளார்.

இந்நிலையில் படுகாயமடைந்த இருவரும் மந்திகை வைத்திய சாலையில் அவசர சிகிச்சை பிரிவில் அனுமதிக் கப்பட்டுள்ளனர்.

இது தொடர்பான விசாரணைகளை மேற்கொள்ளும் வல்வெட்டித் துறை பொலிஸார் வாள்வெட்டுக்கான காரணம் குறித்து எதுவும் தெரிவிக்கவில்லை.

இதேவேளை வாள்வெட்டுக் கான நிலையில் புவனேஸ்வரன் சதிநயா (வயது-19) என்ற பெண் உட்பட இருவர் மந்திகை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர் எனவும் தெரிவித்தனர். (எ-60)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தேசிய பாதுகாப்பு குறித்து விரைவில் திட்ட வரைவு

## – ஜனாதிபதி

(கொழும்பு)

முப்படைத் தளபதி என்ற வகையில் நாட்டின் இராணுவச் சிப்பாய்கள் தொடர்பில் மிகவும் நம்பிக்கையுடன் செயற்பட்டு வருகின்றேன்.

நாட்டின் தற்போதைய நிலையைக் கருத்திற் கொண்டு தேசிய பாதுகாப்புக் குறித்து புதிய பாதுகாப்புத் திட்டத்தை வகுக்க பாதுகாப்புத் தரப்பினருக்கு ஆலோசனை வழங்கியுள்ளேன் என்று ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார்.

வெலிகந்த பாதுகாப்புப் படைத் தலைமையகத்தில் நேற்று கண்காணிப்பு நடவடிக்கையில் ஈடுபட்ட பின்னர் இராணுவத்தினர் முன்னிலையில் கருத்து வெளியிட்டபோதே மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார். இதன்போது அவர்,

30 வருடங்களாக நாட்டில் இருந்த யுத்தத்தை முடிவுக்குக் கொண்டுவந்து, இன்று தேசிய பாதுகாப்புத் தொடர்பில் இருக்கும் பொறுப்பு குறித்து அனைத்து இராணுவத்தினர் குறித்தும் நான் பெருமையடைகின்றேன். இராணுவத்தினர் வசமிருந்த ஒழுக்கம் மற்றும் சக்தி தான் 30 வருட யுத்தத்தை முடிவுக்குக் கொண்டுவர முடிந்தது.

உலகிலுள்ள ஏனைய நாடுகளுடன் ஒப்பிடும்போது ஒழுக்கமிக்க இராணுவமாக எமது இராணுவம் சர்வதேச ரீதியில் வரவேற்பைப் பெற்றுள்ளது.

ஐக்கிய நாடுகள் அமைப்பின் அமைதிப் படையில் பணியாற்ற இன்று எமது இராணுவத்தினருக்கு வாய்ப்புக் கிடைத்துள்ளது. இது தாய்நாட்டுக்கும் பெருமையை ஏற்படுத்தியுள்ளது. நாட்டில் தற்போதைய நிலைமையைக் கருத்திற்கொண்டு தேசிய பாதுகாப்புத் தொடர்பில் புதிய பாதுகாப்புத் திட்டத்தை உருவாக்க பாதுகாப்புப் பிரதானிகளுக்கு ஆலோசனை வழங்கியுள்ளேன்.

ஆசிய வலய பாதுகாப்பு, தேசிய பாதுகாப்பு என்பவற்றைக் கருத்திற் கொண்டு கிடைக்கும் ஆலோசனைகள் மற்றும் பயிற்சிகள் ஊடாக புதிய தொழில்நுட்ப முறைமை மற்றும் விஞ்ஞான பின்னணி ஆகியவற்றின் ஊடாக இந்த செயற்பாட்டை முன்னெடுக்கக் கூறியுள்ளேன்.

நாட்டு மக்களுக்காக உயிரைப் பணயம் வைத்துப் போராடிய இராணுவச் சிப்பாய்களுக்கு புதிய நலன் திட்டங்கள் அனைத்தையும் மேலும் அதிகரிப்பதற்கான அனைத்து நடவடிக்கைகளையும் எடுப்பேன் என்றார். (எ-11)

## விசாரணையில் திருப்தியில்லை

(கொழும்பு)

புங்குடுதீவு மாணவியின் படுகொலை வழக்கில் பொலிஸார் முன்னெடுத்துவரும் விசாரணைகள் திருப்தியளிக்கக் கூடிய வகையில் இல்லை என மகளிர் விவகார பிரதியமைச்சர் விஜயகலா மகேஸ்வரன் அதிருப்தி வெளியிட்டுள்ளார்.

இது குறித்த விசாரணைகள் இனியும் சரியான முறையில் முன்னெடுக்கப்படாத பட்சத்தில் சர்வதேச அமைப்புக்களின் உதவியை நாட வேண்டிய அவசியம் ஏற்படும் என்றும் பிரதியமைச்சர் கூறினார். (எ-11)

## மேலும் 10...

பிரதி அமைச்சர்களே இவ்வாறு தமது பதவிகளை இராஜிநாமா செய்யவுள்ளனர்.

இவர்களில் முதலில் ஐந்து அமைச்சர்கள் தமது பதவிகளை இராஜிநாமா செய்வர்.

தொடர்ந்து ஏனைய ஐந்து அமைச்சர்கள் தங்கள் பதவிகளை விட்டு வருவர் எனவும் அதில் தெரி விக்கப்பட்டுள்ளது. (எ-11)

## மீண்டும்...

வில் கோரிக்கை விடுத்து வருகின்றனர்.

மரண தண்டனையை அமுல் படுத்துவதன் மூலம் குற்றச்செயல்களைத் தடுக்க முடியும் என மக்கள் மத்தியில் தற்போது நம்பிக்கை எழுந்துள்ளது.

இது தொடர்பில் அரசாங்கம் என்ற வகையில் நாம் கவனம் செலுத்தி வருகின்றோம் என்றார்.

இந் நிகழ்வை ஏற்பாடு செய்திருந்த அமைச்சர் ரோசி சேனாநாயக்க இதன் போதுகருத்துகூறுகையில், பெண்கள் மீதான பாலியல் வன் புணர்வுகள் குறித்து விசாரணை செய்வதற்காக பிரதி பொலிஸ் மா அதிபர் ஒருவரின் தலைமையில் விசேட பொலிஸ் பிரிவொன்று நியமிப்பது குறித்து, பிரதமருடன் கலந்துரையாடியுள்ளதாக கூறினார். (எ-11)

## ஜனாதிபதி...

மான வட்டாரங்கள் தெரிவித்தன.

புங்குடுதீவு மகா வித்தியாலய மாணவி சி.வித்தியாவின் படுகொலைச் சம்பவத்தையடுத்து யாழ்ப்பாணத்தில் ஏற்பட்டுள்ள பதற்றமான சூழ்நிலையில், நிலைமைகளை ஆராய்வதற்காகவே ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன இன்று யாழ்ப்பாணத்துக்கு விஜயம் செய்யவுள்ளதாக தெரியவருகிறது.

எனினும் இச் செய்தி அச்சுக்குப் போகும்வரை ஜனாதிபதியின் யாழ்.விஜயம் குறித்து உறுதிசெய்ய முடியவில்லை. (எ)

## அமைதிவழிப்...

சட்டம் ஒழுங்கை நிலைநாட்ட வேண்டிய பொலிஸார், பொதுமக்களுக்கும், பொதுச் சொத்துக்களுக்கும் பாதிப்பு ஏற்படாத வகையில் செயற்பட வேண்டும்.

ஷசட்டத்தை மீறுவோரை மன்றில் முற்படுத்த வேண்டும்.

அமைதி வழி ஊர்வலம் மற்றும் போராட்டங்களை எந்தவகையிலும்.

மன்று தடை செய்யாது என நீதவான் கணேசராஜா உத்தரவிட்டார்.

இன்று தொடக்கம் எதிர்வரும் 31ஆம் திகதிவரை போராட்டங்களை தடை செய்யுமாறு பொலிஸார் நீதிமன்றை கோரியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (எ-11,60)

## புங்குடுதீவு...

நடந்து கொண்டுள்ளார்கள் என்பது குறித்து விசாரணை நடத்தி அறிக்கை கோரப்பட்டுள்ளதாக அமைச்சர் ஜோன் அமரதுங்க கொழும்பு ஊடகமொன்றுக்கு நேற்று தெரிவித்துள்ளார்.

அறிக்கையில் பொலிஸார் குற்றமிழைத்துள்ளமை நிரூபிக்கப்பட்டால் தராதரம் பாராது அவர்கள் தண்டிக்கப்படுவர் என குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை, இடமாற்றம் செய்யப்பட்ட உயர் பொலிஸ் உத்தியோகத்தர்களில் சிலர் இன்னமும் யாழ்ப்பாணத்தை விட்டு வெளியேறவில்லை என கொழும்பு ஊடகம் தெரிவித்துள்ளது.

சம்பவத்துடன் தொடர்புடைய பிரதான சந்தேக நபர்களில் ஒருவரை கைது செய்த பொலிஸார் அவர்களை விடுவித்திருந்ததாகவும், பின்னர் வெள்ளவத்தையில் வைத்து கைது செய்ததாகவும் தெரிவிக்கப்படுகிறது. இது குறித்தும் அறிக்கை கோரப்பட்டுள்ளதாகவும் கூறப்பட்டது. (எ-11)

## ஐ.தே.கவின்...

இரண்டு சுற்று பேச்சுவார்த்தைகள் நடத்தப்பட்டுள்ளன.

ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்ரமசிங்கவின் நடவடிக்கைகளினால் இந்த தரப்பு கடும் அதிருப்தி அடைந்துள்ளது.

ரணில் விக்ரமசிங்க தொடர்ந்தும் பிரதமராக பதவி வகித்தால் நாட்டுக்கும் கட்சிக்கும் பல்வேறு பிரச்சினைகள் ஏற்படக் கூடும் என கருதுகின்றனர்.

தற்போதைய அரசாங்கத்தில் ராஜாங்க அமைச்சர் மற்றும் பிரதி அமைச்சர் பதவிகளை வகிக்கும் சிலரும் இதில் உள்ளடங்குகின்றனர்.

குறித்த உறுப்பினர்களின் பாதுகாப்பை கருத்திற் கொண்டு இறுதி நேரம் வரையில் அவர்களது பெயர்கள் வெளியிடப்படமாட்டாது.

எதிர்க்கட்சியின் சிரேஷ்ட உறுப்பினர்கள் ஐக்கிய தேசியக் கட்சியின் உறுப்பினர்களுடன் பேச்சுவார்த்தை நடத்தி வருகின்றனர்.

பேச்சுவார்த்தை வெற்றியளித்தால் எதிர்வரும் பொதுத் தேர்தலில் அவர்கள் எதிர்க்கட்சியின் சார்பில் போட்டியிடுவார்கள் என டி.பி. ஏக்கநாயக்க அறிவித்துள்ளார். (எ-11)

## அரசைக்...

களை மேற்கொள்ள வில்லை என குறிப்பிடப்படுகின்றதென நம்பத்தகுந்த தகவல் வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. (எ-11)

## நாட்டில்...

இடம்பெறுவதாகவும் அவர் சுட்டிக் காட்டியுள்ளார்.

குளியாப்பிட்டிய நகரசபையில் இடம்பெற்ற ஐக்கிய தேசிய கட்சி கூட்டத்தில் கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கும் போதே பிரதமர் ரணில் விக்ரமசிங்க இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

நாட்டில் சுதந்திரம் மற்றும் ஜனநாயகம் நிலைநாட்டப்பட்டுள்ளதாக அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

பிரதமராகிய என்னையே நாடாளுமன்றில் கெட்ட வார்த்தையினால் திட்டும் அளவுக்கு நாட்டில் சுதந்திரமும், ஜனநாயகமும் நிலைநாட்டப்பட்டுள்ளதாக அவர் கூறியுள்ளார்.

மத ஸ்தலங்களுக்கு சென்று உயிரிழந்த உறவுகளை நினைவு கூருவதற்கான சுதந்திரம் அனைவருக்கும் வழங்கப்பட்டுள்ளது.

வடக்கு கிழக்கில் கடந்த வாரத்தில் உயிரிழந்தோரை நினைவு கூர்ந்து, தீவிரவாதம் மீண்டும் தலைத்தூக்குவதற்கான அர்த்தம் இல்லை என பிரதமர் குறிப்பிட்டுள்ளார்.

பாடசாலை மாணவியை கூட்டு வன்புணர்வுக்குட்படுத்தி கொலை செய்தமைக்கு எதிர்ப்பு தெரிவித்து இடம்பெற்ற ஆர்ப்பாட்டங்களின் மூலம் பிளவடைந்து காணப்பட்ட நாடு தற்போது ஒன்றுபட்டுள்ளதனை தெளிவாக காண முடிந்ததென பிரதமர் ரணில் மேலும் தெரிவித்துள்ளார். (எ-11)

## யாழில் தொடரும் பதற்றம்...

போராட்டங்களும் ஹர்த்தாலும் யாழ்ப்பாணம் மற்றும் ஏனைய மாவட்டங்களிலும் இடம்பெற்றன.

கடந்த 20 ஆம் திகதி யாழ். நீதிமன்ற வளாகத்தில் இடம்பெற்ற போராட்டம் வன்முறையாக மாறியது.

எனினும் ஜனநாயக போராட்டங்களுக்கு தடை விதிக்கக் கூடாது என்ற நல்லெண்ண நோக்கத்துடன் பொலிஸார் போராட்டக் காரர்களை தாம் தடுக்கவில்லை என கூறுகின்றனர்.

இந்த நிலையில் உள்நுழைந்த போராட்டக்காரர்கள் நீதிமன்றத்தினை கல்லுகள் மற்றும் பொல்லுகள் கொண்டு தாக்கி சேதப்படுத்தியதுடன் சிறைச்சாலை வாகனம், சட்டத்தரணிகளின் வாகனங்களையும் அடித்து சேதப்படுத்தியிருந்தனர்.

போராட்டக்காரர்களின் தாக்குதலில் சிக்கி 5 பொலிஸார் உட்பட சட்டத்தரணி ஒருவரும் காயமடைந்திருந்தார். கலகத்தை அடக்குவதற்கு பொலிஸாரும் விசேட அதிரடிப்படையினரும் களத்தில் இறங்கினர்.

இதனால் போராட்டக்காரர்களுக்கும் பொலிஸார், அதிரடிப்படையினருக்கும் இடையில் கல்வீச்சுத் தாக்குதல்கள் இடம்பெற்றன. இதனைத் தடுக்கும் நோக்குடன் பொலிஸார் கண்ணீர் புகைக் குண்டுப் பிரயோகம் மேற்கொண்டனர்.

எனினும் சுமார் 4 மணிநேரம் வரை நீடித்த பதற்றம் ஒருவாறு சுமுகநிலைக்கு கொண்டுவரப்பட்டது. இதனையடுத்து யாழ்.நகர், போதனா வைத்தியசாலை, பொலிஸ் நிலையம், நீதிமன்ற வளாகம், சிறைச்சாலை, மாவட்ட செயலகம் ஆகியனவற்றில் விசேட அதிரடிப் படையினர் மற்றும் கலகம் அடக்கும் பொலிஸாரும் கடந்த ஐந்து நாள்களாக தொடர்ந்தும் பாதுகாப்புக் கடமையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.

இதனால் கடந்த கால போர்ச் சூழல்போல யாழ்ப்பாணம் காணப்படுகின்றதுடன் பதற்றமான சூழலுமே தொடர்ந்தும் நிலவி வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

இதனால் மக்கள் தமது அன்றாட பணிகளை மேற்கொள்ள முடியாத நிலை காணப்படுவதாக கூறப்படுகிறது. (எ-11)


**வேலைவாய்ப்பு**

இணையத்தள அறிவிப்பில் அனுபவமுள்ள பெண்கள் தேவை. யாழ்.நகருக்கு அருகில் இருப்பவர்கள் தொடர்பு கொள்க.

(564) 0773544915

**வடிவமைப்பு (Designing)**

விளம்பரப் பதாதைகள், வாழ்த்து மடல்கள்.
விசிற்றிங் காட், துண்டுப் பிரசுரங்கள்.
விளம்பரங்கள் (பத்திரிகை, சஞ்சிகை)
உங்களின் வியாபாரத்தை பெருக்க சிறந்த வடிவமைப்பு
உறவுகளின் கொண்டாட்டங்களில் வண்ண வடிவங்கள்

**Gunaa Best PC**

(567) இல.120, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
தொ.பே: 0779086737, 0750702963

15 வருடங்களுக்கு மேற்பட்ட விசா சேவை நிபுணத்துவ அனுபவம் கொண்ட கொழும்பு சட்ட வல்லுநர்கள் ஊடாக...

**எந்தவொரு நாட்டுக்குமான எந்த வகை விசா என்றாலும்...**

STUDENT VISA – SPOUSE VISA – DEPENDANT VISA – WORK VISA – SKILLED MIGRATION – VISIT VISA

கனடா Express Entry Visa — தொழில்வாய்ப்புடன் குடியுரிமை (PR) Degree/Diplomaவுடன் குறைந்தது ஒரு வருட தொழில் அனுபவம் உள்ளவர்கள் மட்டும்

Student VISA — UK, Australia, Spain, New Zealand, Canada Switzerland & Malaysia

FREE Assessment Send your CV to info@sikaram.lk — மேலதிக விபரங்களையும் ஏற்கனவே விண்ணப்பித்து பயனடைந்தவர்கள் பற்றியும் அறிந்துகொள்ள www.sikaram.lk

Sikaram (Pvt) Ltd.
275-2/1 & 2/2, மணிக்கூட்டுக்கோபுர வீதி, யாழ்ப்பாணம் (வைத்தியசாலை பின்புறம்)
Tel: 0777 32 4004, 021 222 00 11
(C-1075)

**பதவி வெற்றிடங்கள்**

சர்வதேச ரீதியில் இயங்கிக் கொண்டிருக்கும் எமது நிறுவனத்தின் புதிய கிளைகள் வட மாவட்டத்தில் ஆரம்பிக்க இருப்பதால் பல தரப்பட்ட பதவிகள் உள்ளன.

● அலுவலக உதவியாளர் ● நிர்வாக உத்தியோகத்தர் ● வரவேற்பாளர்
ஆகிய பதவிகளுக்கு இளைஞர், யுவதிகள் தேவை

✔ வயதெல்லை 18-36 ✔ சம்பளம் 12,000/= - 18,000/=
✔ தங்குமிடம் & உணவு வசதிகள் இலவசம் ✔ அனுபவம் அவசியமற்றது
(C-1073)

தொடர்புகளுக்கு:- 0771363797

**தென் இந்திய திருத்தல யாத்திரை**

ஆரம்பம் : 20.06.2015 நாள்கள் : 16

தமிழ்நாடு, பாண்டிச்சேரி, ஆந்திரா, கர்நாடகா, கேரளா ஆகிய 6 மாநிலங்களுடனான 60ற்கு மேற்பட்ட ஆலயங்களைத் தரிசிக்கலாம். மேலும் யாத்திரை சென்று திரும்பும்வரை நாங்களும் கூட வருவோம். சகல ஆலயங்களுக்கும் உள்ளே அழைத்துச் சென்று அழைத்து வருவோம். சென்னையில் ஒருநாள் சொப்பிங்.

பெற்றுக்கொண்ட ரூபாவிற்கு எமது சேவை

இருவழி விமான ரிக்கற், எயார்போட் போக வாகன வசதி, மூன்றுவேளை உயர்தர சைவ உணவு, நாளொன்றுக்கு ஒரு லீற்றர் மினரல் வோட்டர், 2 பேருக்கு கட்டில், மெத்தை, வெந்நீருடன் இணைந்த அறைகளில் தங்கவைக்கப்படுவீர்கள், யாத்திரை முடியும்வரை A/C வாகன வசதி, சகல ஆலய நுழைவுக் கட்டணங்கள் உட்பட எமது பொறுப்பு. மேலும் எமது தனிப்பட்ட சேவையாக ஆலயங்களில் குறுப்பாக எடுக்கும் 60 புகைப்படங்களும் அன்பளிப்பாக வழங்கப்படும்.

மேலதிக விபரங்களுக்கு: கலாநிதி ஸ்ரீரங்கநாதன், 077 768 0102
தொடர்பு: S.சுப்பிரமணியம் (அதிபர், சாவகச்சேரி) 077 615 5930
(C-1057)


இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 26.05.2015 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org